REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 செப்டெம்பர் 6 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 தினகரன்

வரு. 92 இல. 213 | Friday 06, September, 2024 | 24 பக்கங்கள் | 50/-

## ஐ.தே.கவின் 78ஆவது ஆண்டு விழா இன்று

### சிறிகொத்தவில் ஏற்பாடு



ஐக்கிய தேசியக் கட்சியின் 78ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று 6ஆம் திகதி காலை 9.00 மணிக்கு கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நடைபெறும். 78ஆவது ஆண்டு நிறைவு விழாவை எளிமையான முறையில் நடத்துவதற்கு 08

## இது அணி சேர்க்கும் தேர்தல் அல்ல



# பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு 03 வருடங்கள் தேவை

### ஆரம்பித்த பயணத்தை முன்னெடுக்க மக்கள் ஆணை தேவை

மத்துகம மாபெரும் மக்கள் பேரணியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறைகூவல்

03ஆம் பக்கம் பார்க்க



### தனிமையிலிருந்து விடுபட்டு நட்புறவின் மூலம் சர்வதேசத்தை கையாளும் நிலைக்கு வந்துள்ள வேளை

### அடிப்படைவாத பரீட்சிப்புகளுக்கு

# நாட்டை பலியாக்க ஒரு போதும் இடமில்லை

### புதிய பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணியின் ஆரம்ப நிகழ்வில் பிரதமர்



தனிமையிலிருந்து விடுபட்டு நட்புறவின் மூலம் சர்வதேசத்தை கையாளும் நிலைக்கு வந்துள்ள வேளையில் அடிப்படைவாத பரீட்சிப்புகளுக்கு நாட்டை பலியாக்க மாட்டோமென பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார். இலங்கை அரசியலில் புதிய பாதையை உருவாக்கும் 08



## 03

வேட்பாளர்கள் சிலர் ஆதரவளிக்க கோரிக்கை

### ஜனாதிபதி தேர்தலில் நடுநிலை வகிப்பதாக சந்திரிகா அறிவிப்பு

## விஜேயதாசவின் கொள்கை பிரகடனம் வெளியீடு



தேசிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் கலாநிதி விஜேயதாச ராஜபக்ஷவின் 'ஒழுங்கு முறையான நாடு'" என்ற கொள்கை பிரகடனம் நேற்று வெளியிடப்பட்டது. கொழும்பு 7 இல் அமைந்துள்ள இலங்கை மன்ற கல்லூரி கேட்போர் கூடத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது.

## தேர்தலில் புதிய முகமூடியுடன் களமிறங்கியுள்ள குழுவினர்

### வன்முறை கலாசாரம் குறித்து ஹக்கீம் எம்.பி. எச்சரிக்கை



தேர்தலில் கடந்த காலங்களில் இந்த நாட்டில் ஜனநாயக ரீதியாக ஆட்சியை கைப்பற்ற முடியாது. ஆயுதம் தாங்கித்தான் நாங்கள் கிளர்ச்சி செய்துதான் ஆட்சியை பிடிக்கவேண்டுமென்று நாடு முழுக்க கொலைக் கலாசாரத்தை அறிமுகப்படுத்தி மக்களுடைய ஜனநாயக உரிமையை பறித்த, தேர்தல்களை பகிஷ்கரித்த, தேர்தலில் பங்கெடுத்த கட்சிகளின் உறுப்பினர்களை கொன்றொழித்த ஓர் இடதுசாரி இயக்கம் ஒரு புதிய முகமூடியுடன் வந்துள்ளதாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் 08

### வரலாற்றில் பதிவாகும் வகையில்

## அரச ஊழியரின் சம்பள உயர்வு பெற்றுக் கொடுக்கப்பட்டுவிட்டது



உதய ஆர். செனவிரத்ன குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு அரசாங்க ஊழியர்களின் பாரிய சம்பள அதிகரிப்பை உள்ளடக்கியதாக 2025 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட ஆவணம் திறைசேரியால் தயாரிக்கப்பட்டுவருவதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

பொரலஸ்கமுவ பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு பேசும் போதே அமைச்சர் பந்துல குணவர்தன மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்த அரச ஊழியர்களின் இந்த பாரிய சம்பள அதிகரிப்புக்கு 08

## பல்கலை வெட்டுப்புள்ளி இறுதிக்கட்டத்தில்!

### 15 நாட்களுக்குள் வெளியாகும்



இன்னும் 15 நாட்களுக்குள் பல்கலைக்கழகங்களுக்கான தெரிவு வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்படும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. 2023 கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்படும் எனவும் பல்கலைக்கழக 08

## கல்வியியல் கல்லூரிகள் பல்கலைக்கழகமாகின்றன

### இறுதிவரைவு அமைச்சரவைக்கு - அமைச்சர் சுசில்



அனைத்து கல்வியியல் கல்லூரிகளையும் இணைத்து உருவாக்கப்படவுள்ள கல்வி பல்கலைக்கழக சட்டமூலம் அமைச்சரவைக்கு அனுப்பி வைக்கப்படவிருப்பதாக கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். 08

## யாழ் - மதுரைக்கு புதிய விமான சேவை

### இந்திய ஊடகங்களில் செய்தி



இந்தியாவின் மதுரைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையே வாரத்தில் 7 நாட்களும் விமான சேவையை முன்னெடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக, இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன. இலங்கை விமான சேவை நிலையத்தால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகவும் 08

### வேலுகுமார் எம்.பி. தொடர்பில்

## சமூக வலைத்தளங்கள் ஊடாக அவதூறான, தவறான தகவல்கள்

### தயாசிறி எம்.பிக்கு எதிராக தடை உத்தரவு



பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் குறித்து அவதூறான மற்றும் தவறான தகவல்களை சமூக வலைதளங்கள் மூலம் வெளியிடப்படுவதை தடுத்து பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவுக்கு எதிராக கொழும்பு பிரதான மாவட்ட நீதவான் சந்துன்விதான தடை உத்தரவை 08

## அரச, தனியார் துறையினருக்கு வாக்களிக்க விசேட விடுமுறை

### தேர்தல்கள் ஆணைக்குழுவின் அறிக்கை



ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்க வசதியாக அரச மற்றும் தனியார் துறையினருக்கு விசேட விடுமுறை வழங்கப்பட வேண்டுமென, தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இதற்கமைய முழு சம்பள விடுமுறை அடிப்படையில் அரச, தனியார்துறை ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கப்பட வேண்டுமெனவும், தேர்தல்கள் ஆணைக் 08

## வீடு வீடாக சென்று தேர்தல் பிரசாரம் செய்ய தடை

### தேர்தல்கள் ஆணைக்குழு அதிரடி உத்தரவு



தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக வீடு வீடாக செல்வதை உடனடியாக தடை செய்யுமாறு பொலிஸாருக்கு தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று உத்தரவிட்டது.

இவ்வாறான தேர்தல் பிரசாரம் செய்யப்படுவதை தடை செய்ய 08

## தமிழரசு கட்சியுடனேயே எனது பயணம் தொடரும்

### தமிழ் பொது வேட்பாளர் அரியநேத்திரன்



ஜனாதிபதி தேர்தலின் பின்னர் தமிழரசுக் கட்சியுடன் மாத்திரமே பயணிப்பேன் என, தமிழர் தரப்பு பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

அதில் மாற்றுக் கருத்தில்லை. கட்சியால் என்னிடம் விளக்கம் கேட்கப்பட்டுள்ளது. சந்தர்ப்பம் வரும் போது அதற்கான விளக்கத்தை அவர்களுக்கு வழங்குவேன் எனவும் அவர் 08

## நான் ஜனாதிபதியானதும் அரசியல் கைதிகள் விடுதலை

### நிச்சயம் செய்வேன் – நாமல் MP



"நான் ஜனாதிபதியானதும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வேன்" என, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பிரச்சினைக்கு பதில் வழங்க தான் தயாராக இருப்பதாகவும், அவர் கூறியுள்ளார். 08

## UNP யுடன் ஐ.ம.சக்தி ஒருபோதும் இணையாது

### இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் MP



கீழ் மட்டத்திலுள்ளவர்களுக்காக உணர்வுடன் செயற்படுகின்ற தலைவரே நாட்டுக்கு அவசியம். அவ்வாறானதொரு தலைவரை வழங்க ஐக்கிய மக்கள் சக்தி தயாரென, பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு 08

## புதிய வேலைத்திட்டத்தை முன்வைத்தது நாம் மட்டுமே!

### ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர



நாட்டு மக்களுக்காக புதிய வேலைத்திட்டத்தை முன்வைத்த ஒரே கட்சி சர்வஜன அதிகாரமென தெரிவித்துள்ள ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர, ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் அனைத்து கட்சிகளும் மீண்டும் தமது பழைய கொள்கைகளை பிரபலப்படுத்த முயற்சிப்பதாகவும் தெரிவித்துள்ளார். கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் 08

92 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# சஜித் பிரேமதாசவின் செயற்பாடுகளால் அனுரவுக்கே ஆதரவு கிடைக்கிறது!

## மஹியங்கனை 'இயலும் ஸ்ரீலங்கா' வெற்றிப் பேரணியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு தொடர்பான நற்செய்திகள் கிடைத்து வருவதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டைக் கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் வேலைத் திட்டத்திற்காக தமது வாக்குகளைப் பயன்படுத்திய அனைத்து அரச உத்தியோகத்தர்களுக்கும் தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாகவும் குறிப்பிட்டார்.

இந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாச வெற்றி பெற முடியாது எனவும், அவரின் முட்டாள்தனமான செயற்பாடுகள் அனுரவிற்கு ஆதரவாக அமையும் எனவும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நாட்டைப் பாதுகாக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொறுப்பை நிறைவேற்றி, நாட்டுக்காக ஒன்றிணைந்து செயற்படுமாறு அனைத்து ஐ.தே.க உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுத்தார்.

மஹியங்கணை பொதுவிளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 'இயலும் ஸ்ரீலங்கா' வெற்றிப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்ததாவது:





**'அடுத்த வருடத்திலிருந்து நாம் ஒரு இலட்சம் தொழில்வாய்ப்–புக்களை உருவாக்குவோம். ஸ்மார்ட் விவசாயம் செய்வதற்கு நிவாரணங்களை வழங்குவோம்'**



"தபால் வாக்களிப்புக்கள் ஆரம்பித்துள்ளன. நல்ல செய்தி கிடைத்திருக்கிறது. இரு வருடங்களுக்கு முன்பாக இப்படியொரு தேர்தலை நடத்தும் வாய்ப்பு இருக்கவில்லை. சிலர் பாராளுமன்றத்தை முடக்க வந்தனர்.

அதற்குச் சந்தர்ப்பம் அளிக்காமல் அவர்களை வெறும் கையோடு திருப்பி அனுப்பினோம்.

மருந்து, எரிபொருள்,எரிவாயு வரிசைகள் இருந்தன. எவருமே ஏற்க இயலாது என்று சொன்ன போது, 'இயலும் ஸ்ரீலங்கா' என்று சொல்லி நாங்கள் பணிகளை ஆரம்பித்தோம். இன்று நல்ல நிலைத்தன்மை கிட்டியுள்ளது. அன்று தட்டுப்பாடாக இருந்த பொருட்கள் இன்று கிடைக்கின்றன. பொருட்களின் விலையும் குறைந்து வருகின்றது.

இந்த நாட்டில் நாம் ஆரம்பித்த பயணம் எதிர்காலத்திலும் தொடர வேண்டும். மக்களுக்கு கஷ்டம் இருப்பதை ஏற்றுக்கொள்கிறோம். சரிந்த பொருளாதாரத்தை ஒரேயடியாக மீட்க முடியாது. சர்வதேசத்தின் உதவி எமக்கு இருக்கிறது.

அதனை கொண்டு வாழ்க்கைச் சுமையை குறைக்கவும், தொழில் வாய்ப்புக்களை பலப்படுத்தவும், வரி சுமையைக் குறைக்கவும், 'உறுமய', 'அஸ்வெசும' போன்ற மக்களுக்கான நிவாரணத் திட்டங்களைப் பாதுகாக்கவும் வேண்டும்.

நாட்டைப் பொறுப்பேற்றதன் பின்னர் முதலில் குறைந்த வருமானம் ஈட்டுவோருக்கு நிவாரணம் வழங்கினோம். இன்னும் அதிகமானவர்களுக்கு அந்த நிவாரணம் கிடைக்கும். விவசாயிகளுக்கு நன்றிக்கடன் செலுத்தும் முகமாகவே அதனைச் செய்தோம். இனிவரும் நாட்களில் வரிச்சுமையைக் குறைப்போம். விவசாயத் துறையை மேலும் பலப்படுத்துவோம். மக்களுக்கு காணி உறுதிகளைப் பெற்றுக்கொடுக்கும் முயற்சிகளையும் தொடர்வோம்.

சுமார் 85 வருடங்களுக்கும் மேலாக மக்களுக்கு காணி உறுதிகள் கிடைத்திருக்கவில்லை. அதனாலேயே தற்போது மக்களுக்கான உரிமைகளை வழங்குகிறேன். இனி வரும் காலங்களில் விவசாய நவீனமயமாக்கல் பணிகளையும் முன்னெடுக்க எதிர்பார்க்கிறோம். அதனால் எதிர்காலத்தில் உலகின் பெருமளவானோரின் உணவுத் தேவையை நாம் பூர்த்தி செய்ய முடியும்.

பழைய வாத்தியம் வாசிப்பவர்களை விட்டுவிடுங்கள். அடுத்த வருடத்திலிருந்து நாம் ஒரு இலட்சம் தொழில்வாய்ப்புக்களை உருவாக்குவோம். ஸ்மார்ட் விவசாயம் செய்யவும் நிவாரணங்களை வழங்குவோம். மேலும் ஐம்பதாயிரம் பேருக்கு வெளிநாட்டு தொழில்களுக்கான பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ள கொடுப்பனவையும் வழங்குவோம்.

இன்றைய நிலையில் சஜித் பிரேமதாசவால் அனுர குமார திசாநாயக்கவை தோற்கடிக்க முடியாது. அந்த வகையில் சஜித் பிரேமதாச இப்போதே தோற்றுப் போயுள்ளார். அவர் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் காலத்தில் அவரை மிஞ்சிய வேட்பாளராக அனுர குமார திசாநாயக்க இருக்கிறார். நல்லாட்சி அரசாங்கம் இருந்த காலத்தில் கூட அனுர அந்த அரசாங்கத்துடன் இணைந்தே செயற்பட்டார். ஆனால் இன்று அநுர சஜித்தை மிஞ்சி வந்துள்ளார். சஜித் செய்யும் சில முட்டாள்தனமான செயற்பாடுகள் அநுரவிற்கு சாதமாக அமைந்துள்ளன. எனவே ஐக்கிய தேசியக் கட்சியை முன்னோக்கி கொண்டு வந்த தலைவர்களின் பணியை இன்று நானே ஆற்றுகிறேன் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அதனால் செப்டம்பர் 21 சிலிண்டர் சின்னத்துக்கு வாக்களியுங்கள் இல்லாவிட்டால். சிலிண்டரும் இருக்காது. உங்கள் விவசாயமும் பாதுகாக்கப்படாது."

இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம:

"அன்று அரசாங்கம் கைவிட்ட நாட்டை ஏற்றுக்கொள்ள எதிர்க்கட்சிக்கும் திராணி இல்லாத வேளையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க துணிச்சலாக முன்வந்தார். அவருக்கு நாங்களும் ஆதரவை வழங்கினோம். ஜனாதிபதி தனது அனுபவம், சர்வதேச தொடர்புகளைப் பயன்படுத்தி நாட்டை மீட்டெடுத்தார்.

உலகின் பல நாடுகள் பொருளாதார நெருக்கடியால் நலிவடைந்துள்ளன. ஆனால் இலங்கையை மீட்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முடிந்தது. பொறுப்பு கிடைத்தபோது ஓடிப்போனவர்கள். இன்று வந்து ஆட்சி அதிகாரத்தை கோருகிறார்கள். எனவே அவர்களைத் தெரிவு செய்வதா அல்லது கஷ்டங்களிலிருந்து மக்களை மீட்ட தலைவர் வேண்டுமா என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும்".

இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க:

"எந்த நெருக்கடியிலும் நாட்டை ஏற்றுக்கொண்டு மீட்டெடுக்க கூடிய தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டுமே. சிலர் நாடு அனுரவிற்கு என்கிறார்கள். ஆனால் அநுரவிற்கு சரியாக நாட்டை நிர்வகிக்க முடியுமா என்பதையும் மக்கள் சிந்திக்க வேண்டும். எனவே அனுபவம் மிக்க ஒரு சாரதி இருக்கும்போது, புதிய சாரதியிடம் வாகனத்தை கொடுத்து படுகுழியில் தள்ளிவிடக்கூடாது என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்".

முன்னாள் அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ:

"செப்டம்பர் 21 வாக்குசீட்டில் சரியான இடத்திற்கு வாக்களிக்க தவறினால் மக்கள் அதன் பிரதிபலன்களை அனுபவிக்க நேரிடும். இன்று வேறு நிற ஆடைகளை அணிந்து கொண்டிருந்தாலும், திசைக்காட்டி என்று பெயர் மாற்றிக்கொண்டாலும் அவர்கள் முந்தைய ஜே.வி.பி.காரர்கள் என்பது நாட்டு மக்களுக்குத் தெரியும்.

**மஹியங்கணையில் இருந்து**
**லோறன்ஸ் செல்வநாயகம்**

நாடு அனுரவிற்கு என்கிறார்கள். அனுரவிற்கு நாடு சென்றால், நாடு இருளை நோக்கி செல்லும் என்பதை மக்கள் மறந்துவிடக்கூடாது. தற்போது அனுரவிற்கு ஒரு பயம் ஏற்பட்டுள்ளது. தவறியேனும் ஜனாதிபதி பதவி கிடைத்துவிட்டால் தான் என்ன செய்வது என்ற பதற்றம் அவருக்கு ஏற்பட்டுள்ளது".

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா

"ஜே.வி.பி யுகம் மீண்டும் இந்நாட்டு மக்களுக்கு வேண்டுமா? நான் எல்லா அரசாங்களிலும் அமைச்சராக இருந்ததாக அனுர குமார திசாநாயக்க கூறுகிறார். எனது காலத்தில் நாட்டுக்காக பல சேவைகளை செய்திருக்கிறேன். நாங்கள் கட்சி மாறியதாக கூறுகிறார்கள். ஆனால் ஜே.வி.பி, சந்திரிக்கா, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு ஆதரவளித்த வேளையில் அதற்கான ஒப்பந்தத்தை நானே தயாரித்தேன். நல்லாட்சியின் காலத்திலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்தனர் என்பதை இன்று மறந்துள்ளனர்.

வன்முறைகளின் மூலம் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் முயற்சியிலேயே ஜே.வி.பியினர் ஈடுபட்டுள்ளனர். மறுமுனையில் சஜித் பிரேமதாச எதைக் கேட்டாலும் கொடுப்பேன் என்கிறார். அவை அனைத்தும் தேர்தல் வாக்குறுதிகள். ஆனால் முடிந்ததை மட்டுமே சொல்ல வேண்டும். சொல்வதை கண்டிப்பாகச் செய்ய வேண்டும் என்ற கொள்கையையே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பின்பற்றுகிறார். எனவே வேடிக்கை பாத்திரங்களை விடுத்து நாட்டுக்கு நல்ல தலைவர்களை தெரிவு செய்ய வேண்டும்"



# தனியார்துறையினரின் சம்பளத்தை அதிகரிக்க திட்டம் வகுக்கப்படும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச

எமது நாட்டின் பொருளாதார விருத்திக்கு பாரிய பங்களிப்பை வழங்குகின்ற தனியார்துறை ஊழியர்களுக்கான பலமான வேலைத் திட்டங்கள் குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. பொருளாதார விருத்திக்கு தனியார் துறையின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகும். ஊழியர்கள் மிகவும் சிரமத்துக்கு மத்தியில் பாரிய பணிகளை செய்து கொண்டிருக்கிறார்கள் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தனியார் துறையினரின் குறைந்தபட்ச சம்பளத்தை 25000 ரூபா வரை கொண்டு வருவதற்கான திட்டங்கள் வகுக்கப்படும். அத்தோடு ஊழியர்களின் உரிமைகளை பாதுகாக்கின்ற வகையிலான சேவை கொள்கையும் தயாரிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு ஏற்பாடு செய்திருந்த மக்கள் வெற்றிப் பேரணி கூட்டத்தொடரின் 39 ஆவது பேரணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் காலியில் நடைபெற்றது.



இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"ஐக்கிய மக்கள் சக்திக்கு தெளிவான கொள்கையும், தூர நோக்கு பார்வையும் உள்ளன. ஐக்கிய மக்கள் சக்தியின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டு இருக்கின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் உண்மைக்குப் புறம்பான தகவல்களையும் வதந்திகளையும் பரப்புகின்றார்கள்.

பேஸ்புக் ஊடாகவும் இணையதளங்களுக்கும் பணம் செலுத்தி ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்றாக இணையப் போகின்றார்கள் என்று பொய்யான செய்திகளை பரப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

ஐக்கிய மக்கள் சக்தி மக்களோடு மாத்திரமே இணைந்திருக்கும். தற்பொழுது நாட்டைக்கட்டி எழுப்பக்கூடிய சிறந்த கொள்கைத் திட்டமும் தூரநோக்குப் பார்வையும், வேலைத்திட்டமும் ஐக்கிய மக்கள் சக்தியிடமும், ஐக்கிய மக்கள் கூட்டணியிடமுமே காணப்படுகின்றன. இயலுமையும், திறமையும், அனுபவமும், அறிவாற்றலும், சிந்தனைப் போக்கும் உள்ள சிறந்த குழு எம்மிடமே இருக்கின்றது. ஐக்கிய மக்கள் சக்தியின் தூரநோக்குப் பார்வை ஊடாக இந்த நாட்டை மீட்டெடுக்க முடியும்.

அனைத்துப் பாடசாலைகளையும் சகல வசதிகளையும் கொண்ட பாடசாலைகளாக மாற்றி, கல்வித் துறையை பலப்படுத்துவோம். இந்தப் பொறுப்பை ஐக்கிய மக்கள் கூட்டணி நிறைவேற்றும்.



எமது நாட்டில் பெரும்பான்மையானோர் ஏழைகளாக மாறி இருக்கின்ற இந்த சந்தர்ப்பத்தில், வறுமையை ஒழிப்பதற்காக 24 மாதங்களுக்கு தலா மாதாந்தம் 20,000 ரூபா வீதம் வழங்கி வறுமையில் இருந்து அவர்களை மீட்டெடுப்போம். ஆத்ம கௌரவத்தோடு வாழுகின்ற பரம்பரையை உருவாக்குவோம்" என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் குறிப்பிட்டார்.

# திகாம்பரம், ரிஷாட் பதியுதீன் கட்சிகளின் முக்கியஸ்தர் பலர் ஜனாதிபதிக்கு ஆதரவு

## புதிய ஜனநாயக மக்கள் முன்னணியும் ஆதரவு



பழனி திகாம்பரம் தலைமை வகிக்கும் தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் ரிஷாட் பதியுதீன் தலைமை வகிக்கும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியவற்றின் செயற்பாட்டு மக்கள் பிரதிநிதிகள் பலர், சுயேச்சை வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிக்க நேற்றுமுன்தினம் அவருடன் இணைந்து கொண்டனர்.

இது தவிர புதிய ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் உள்ளிட்ட முக்கியஸ்தர்களும் பொது வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு தெரிவித்தனர்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் வடமேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் செய்னுல் ஆப்தீன் எஹியா மற்றும் உள்ளூராட்சி சபைகள் பலவற்றின் முன்னாள் மக்கள் பிரதிநிதிகள், செயற்பாட்டாளர்கள் நேற்றுமுன்தினம் (04) கொழும்பு பிளவர் வீதியில் உள்ள ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் அலுவலகத்தில் ஜனாதிபதியைச் சந்தித்து, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அவரின் வெற்றிக்குப் பூரண ஆதரவை வழங்குவதாக அறிவித்தனர்.

இந்தச் சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமும் இணைந்து கொண்டார். இதேவேளை தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஹட்டன், நோர்வூட், அக்கரப்பத்தனை, மஸ்கெலியா, நுவரெலியா உள்ளூராட்சி சபைகளின் முன்னாள் உறுப்பினர்கள் 11 பேர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்காக நேற்றுமுன்தினம் அவருடன் இணைந்து கொண்டனர்.

ஜனாதிபதியின் வெற்றிக்காகத் தாம் தொடர்ந்து அர்ப்பணிக்கவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதுதவிர, புதிய ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் நடராஜா ரவிகுமார், பொதுச்செயலாளர் யோகராஜாபிள்ளை உள்ளிட்ட கட்சி முக்கியஸ்தர் குழுவும் நேற்றுமுன்தினம் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதி செய்ய அவருடன் இணைந்து கொண்டார்கள்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணிலின் கரத்தைப் பலப்படுத்தும் நோக்குடன் ஏற்கெனவே பல தமிழ், முஸ்லிம் கட்சிகளும் மாகாண சபை, உள்ளூராட்சி சபைகளின் முன்னாள் உறுப்பினர்களும் செயற்பாட்டாளர்களும் இணைந்து அவரின் வெற்றிக்காகப் பாடுபட்டு வருகின்றனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

தினகரன்
THINAKARAN
2024 செப்டெம்பர் 6 வெள்ளிக்கிழமை

தொழுகை நேரம்
சுபஹ் - 04.47
ளுஹர் - 12.11
அஸர் - 03.13
மஃரிப் - 06.16
இஷா - 07.27

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் ஆவணி 21
ராகுகாலம் : காலை : 10.34 - 12.04வரை
சுபநேரம் : காலை : 6.04 - 7.34வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



நாடு மீண்டும் நெருக்கடியில் விழாமல்

# பாதுகாக்கக்கூடிய ஒரே தலைவர் ஜனாதிபதி ரணில் மட்டுமே



## பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவிப்பு

**மத்துகமையிலிருந்து லோரன்ஸ் செல்வநாயகம்**

நாடு மீண்டும் நெருக்கடியில் விழாமல் பாதுகாக்கக் கூடிய ஒரே தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே என்றும் நாட்டு மக்கள் தமது முழுமையான ஆதரவை அவருக்கே வழங்க வேண்டும் என்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

அவர் மட்டுமே இம்முறை தேர்தலில் போட்டியிடும் சர்வதேசத்தின் முழுமையான நம்பிக்கையை வென்ற திறமையும் அனுபவமும் உள்ள தலைவரென குறிப்பிட்ட பிரதமர், நாட்டு மக்கள் அனைவரும் பூரண ஒத்துழைப்பு வழங்கி மீண்டும் இந்த நாட்டை அவரிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

நாட்டை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு இயல்பு நிலைக்கு கொண்டு வந்த அவர்,நாட்டில் அனைத்து மக்களுக்கும் நிவாரணம் வழங்கும் வேலைத் திட்டங்களை ஆரம்பித்துள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.

08

அமைச்சர் பந்துல தலைமையில்

# ஜனாதிபதி ரணிலின் வெற்றியை உறுதிப்படுத்தும் கலந்துரையாடல்



இம்முறை ஜனாதிபதி தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் ஹோமாகம, உடுவன, தொரமுல்ல பிரதேச மக்களை தெளிவுபடுத்தும் விசேட கலந்துரையாடல் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலில் முன்னாள் உள்ளூராட்சி பிரதிநிதிகள் மற்றும் பிரதேசவாசிகள் அடங்கிய குழுவினர் பலரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் கருத்து தெரிவித்த அமைச்சர்,

"ஹோமாகம பிரதேசத்தின் வரலாற்றை மாற்றியமைக்கும் வகையில் அதனை சர்வதேச மட்டத்துக்கு கொண்டு செல்ல அபிவிருத்தி குழுவின் தலைவராக நீண்டகாலமாக பல திட்டங்கள் செயற்படுத்தப் பட்டன.

08

# தேர்தல் சட்டத்தை மீறிய 22 பேர் கைது

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட 22 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் (04) ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், அக்காலப்பகுதியில் 4 வாகனங்களையும் பொலிஸார் பொறுப்பேற்றுள்ளதாக தெரிவித்தார்.

தேர்தல்தொடர்பான 173 முறைப்பாடுகள் பொலிஸ்திணைக்களத்துக்குகிடைத்துள்ளன.அந்த முறைப்பாடுகளை குற்றவியல் முறைப்பாடுகள் மற்றும் தேர்தல் சட்டமீறல் முறைப்பாடுகள் என வகைப்படுத்தப்படுகிறது.

இந்தமுறைப்பாடுகளில்தேர்தல்சட்டமீறல்கள் தொடர்பில் 119 முறைப்பாடுகளும் 54 குற்றவியல் முறைப்பாடுகளும் அடங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தினகரன் 92

வருடங்களுக்கு முன் தினகரன்

இன்று 06 செப்டெம்பர் 1932


பிளேக் கிருமிகள்

கிருமி ஆராய்ச்சி நிபுணரின் யாதாஸ்து

தொற்றுநோய்க் கிருமி ஆராய்ச்சி நிபுணராகிய டாக்டர். எல். எப். ஹர்ஸ்ட் சென்ற ஆண்டு நிர்வாக யாதாஸ்தை வெளியிட்டிருக்கின்றார் அதில்அவர் குறிப்பிட்டிருப்பதாவது:–

இலங்கையில் பிளேக்நோய் பரவக் கூடிய இடங்கள் கொழும்பு, குருணாக் கல், அநுராஜபுரம் ஆகிய இடங்களிலுள்ள கடைத்தெருப் பக்கங்களும், சுமார் 1,500 அடி முதல் 4,500 அடி வரை உயரமுள்ள மலைப் பிரதேசங்களுமாகும்.

## பிளேக் கிருமிகள்

### கிருமி ஆராய்ச்சி நிபுணரின் யாதாஸ்து

தொற்றுநோய்க் கிருமி ஆராய்ச்சி நிபுணராகிய டாக்டர். எல். எப். ஹர்ஸ்ட் சென்ற ஆண்டு நிர்வாக யாதாஸ்தை வெளியிட்டிருக்கின்றார். அதில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது:

இலங்கையில் பிளேக்நோய் பரவக்கூடிய இடங்கள் கொழும்பு, குருணாகல், அநுராதபுரம் ஆகிய இடங்களிலுள்ள கடைத்தெருப் பக்கங்களும், சுமார் 1,500 அடி முதல் 4,500 அடிவரை உயர முள்ள மலைப் பிரதேசங்களுமாகும்.

**(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)**

# தபால் மூல வாக்களிப்புகளை கண்காணிக்க விசேட திட்டம்

## பெவ்ரல் அமைப்பு ஏற்பாடு



தபால் மூல வாக்களிப்பு நடவடிக்கைகளை கண்காணிக்க விசேட வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக, தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு 900 க்கும் மேற்பட்ட கண்காணிப்பாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் நாட்டின் 22 தேர்தல் தொகுதிகளிலும் கண்காணிப்பு பணிகள் முன்னெடுக்கப்படுமெனவும், பெவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பின் முதல் நாள் நடவடிக்கைகள் நேற்று முன்தினம் நிறைவடைந்தன. தபால் மூல வாக்களிப்பு நேற்று நடைபெற்றதுடன், இன்று நடைபெறுமெனவும், தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் 4ஆம் திகதியும் நேற்று 5ஆம் திகதியும் இன்று 6ஆம் திகதியும் தபால் மூலம் வாக்களிக்க தவறியவர்களுக்கு எதிர்வரும் 11ஆம், 12ஆம் திகதிகளில் வாக்களிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

# ஊவா மாகாண ஆளுநர் முஸம்மில் இராஜினாமா

## சஜித்துக்கு ஆதரவு என்றும் தெரிவிப்பு

ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தனது பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் ஒன்றின் மூலம் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பதவியை இராஜினாமா செய்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளதாக முஸம்மில் அந்த கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

வேட்பாளர்கள் சிலர் ஆதரவளிக்க கோரிக்கை

# ஜனாதிபதி தேர்தலில் நடுநிலை வகிப்பதாக சந்திரிகா அறிவிப்பு



நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் தான் நடுநிலை வகிக்க தீர்மானித்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார். சில ஜனாதிபதி வேட்பாளர்கள் தனது ஆதரவை கோரியுள்ளபோதும் தான் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தில் பல்வேறு வேட்பாளர்களை ஆதரிப்பதாக பல ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருப்பதாக குறிப்பிட்ட அவர், 2024 ஜனாதிபதி தேர்தலில் எந்தவொரு வேட்பாளர்களுக்கும் தனது ஆதரவை வழங்கப் போவதில்லை என்றும் தெரிவித்தார்.

08

# Dialog Innovation Challenge இன் அடுத்தகட்ட இறுதிப் போட்டியாளர்களை அறிவிக்கிறது டயலொக்

## மாபெரும் இறுதிப்போட்டி நாளை சனிக்கிழமை ஒளிபரப்பாகிறது




மேலுள்ள புகைப்படத்தில் Dialog Innovation Challengeஇன் இரண்டாம் சுற்று இறுதிப்போட்டியாளர்கள்; முதல் நிரை Cubic, BabyChart, இரண்டாம் நிரை Shop2Message, WattWise

இலங்கையின் #1 இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, Dialog Innovation Challenge மாபெரும் இறுதிப்போட்டிக்கான அடுத்த நான்கு இறுதிப்போட்டியாளர்களையும் அறிவித்தது. இலங்கை மக்கள், வணிகம் மற்றும் சமூகங்களின் வாழ்வை நேர்மறையான விதத்தில் மாற்றியமைக்கும் பொருட்டு புத்தாக்கமிக்க டிஜிட்டல் தீர்வுகளை நாடளாவிய ரீதியில் கண்டறிவதே இந்த செயற்றிட்டத்தின் நோக்கமாகும். இந்த செய்தி உள்நாட்டு மக்களின் முக்கிய தேவைகளை தீர்த்து அர்த்தமுள்ள டிஜிட்டல் முன்னேற்றத்தை அளிப்பதற்காக டயலொக் காட்டும் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை இது எடுத்துக்காட்டுகிறது.

புதிதாக தெரிவான இறுதிப்போட்டியாளர்களில் Cubic எனும் IoT அடிப்படையிலான மொபைல் செயலி (App), BabyChart எனும் சிசு வளர்ச்சியை கண்காணிக்கும் நூலிற்கான ஒரு மாற்று டிஜிட்டல் தீர்வு, Shop2Message எனும் சிறு அளவிலான கடைகளுக்கு பண்டங்களை கடனுக்கு பெறுதல் மற்றும் தவணை முறை கட்டணங்களை சீரிய முறையில் பேணும் ஒரு செயலி, WattWise எனும் பயனர்களின் மின்சக்தி பாவனை குறித்து துல்லியமான தகவல்களை அளித்து அவர்களது மின்கட்டணங்களை வினைத்திறன் மிக்க முறையில் மேலாண்மை செய்ய செயற்கை நுண்ணறிவின் துணை கொண்டு இயங்கும் ஒரு செயலி ஆகியன அடங்கும்.

இவர்கள் இதற்கு முன் தெரிவான இறுதிப்போட்டியாளர்களான, SeaLankaஇன் செயற்கை நுண்ணறிவினால் இயங்கும் ஒரு மீன்பிடி வலயத்தை கணிக்கும் செயலி, BODOவின் விடுதி (Hotel) முன்பதிவு மற்றும் முகாமைத்துவ மென்பொருள் அமைப்பு, AudiPhixஇன் ஒலித்திறன் செயலாக்கக் குறைப்பாட்டுக்கான செயலி, FlashGuardஇன் ஒளியுணர் வலிப்பு தடுப்புக்காக வடிவமைக்கப்பட்ட Smart கண்ணாடிகள், Smart Aquaஇன் இறால் வளர்ப்போருக்கான IoT தீர்வு ஆகிய அணிகளுடன் இணைந்து கொள்வர். ஒவ்வொரு இறுதிப்போட்டியாளரும் அவர்களது புத்தாக்கமான அணுகல், நிலைத்து வளரும் தன்மை (scalability), இலங்கையர்களின் வாழ்வில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் ஆற்றல் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டே தெரிவு செய்யப்படுகின்றனர். இவர்களை தெரிவு செய்யும் நடுவர் குழாத்தில் துறையில் கைதேர்ந்த வல்லுனர்களான கலாநிதி. ரமேஷ் சண்முகநாதன், நிறைவேற்று துணைத்தலைவர் மற்றும் குழும பிரதம தகவல் அதிகாரி, John Keels குழுமம்; ஷஷி கண்டம்பி, தேசிய சேமிப்பு வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி; ஷெரின் காதர், Nations Trust Bank PLC இன் தலைவர்; ரேணுகா பெர்னாண்டோ, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழுமத்தின் பிரதம டிஜிட்டல் சேவைகள் அதிகாரி மற்றும் Dialog Finance பிஎல்சியின் தலைவர்; அசேல பெரேரா, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழுமத்தின் பிரதம தகவல் அதிகாரி; ரங்கா காரியவசம், டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழுமத்தின் பிரதம தொழில்நுட்ப அதிகாரி, விரங்க செனவிரத்ன, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் தளங்களில் வணிக தலைவர் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

போட்டி அடுத்தடுத்த கட்டங்களுக்கு நகர்கையில் பங்கேற்பாளர்களுக்கு டயலொக் அதன் பங்காளர்களுடன் இணைந்து ஒழுங்குபடுத்தும் இலக்குடன் கூடிய செயலமர்வுகளின் வழியாக அனுகூலங்களை பெற்றிட முடியும். இந்த செயலமர்வுகள், அவர்களின் தீர்வுகளை மேலும் மேம்படுத்தவும், தொலைக்காட்சி ஒளிபரப்புகளின் போது நிபுணர்களிடமிருந்து முக்கியமான பின்னூட்டங்களை பெறுதலையும் நோக்கமாகக் கொண்டே அளிக்கப்படுகின்றன. இறுதிச் சுற்றில் உள்ளவர்கள், ரூபாய் ஐந்து மில்லியன் பரிசுக்குவியல் மற்றும் மேம்பட்ட தொழில்நுட்ப வசதிகளுக்கான அணுகல், முன்னணி தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க அமைப்புகளின் தொடர்ச்சியான வழிகாட்டுதல், மேலும் ரூ. 500 மில்லியன் DIF (Digital Innovation Fund) முதலீட்டு நிதியின் ஒரு பாகத்தை வெல்லும் வாய்ப்பு ஆகியவற்றிற்காகப் போட்டியிடுகின்றனர்.

பலத்த எதிர்பார்ப்புகளின் மத்தியில் Dialog Innovation Challenge மாபெரும் இறுதிப்போட்டி செப்டெம்பர் 7ந்திகதி சனிக்கிழமை பி. ப. 10:30 மணிக்கு TV தெரணவிலும், செப்டெம்பர் 8ந்திகதி ஞாயிற்றுக்கிழமை பி. ப. 6:30 மணிக்கு DTV Channel Oneஇலும் ஒளிபரப்பாகவுள்ளது. நம்மை வியப்பில் ஆழ்த்தும் அற்புதமான கண்டுபிடிப்புகளை களத்தில் காணத்தவறாதீர்கள்! மேலதிக தகவல்களுக்கு https://ic.dialog.lk ஐ பார்வையிடுங்கள்.

# பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணியுடன் இணையுமாறு அமைச்சர் ரமேஷ் அழைப்பு



இலங்கையிலுள்ள அனைத்து ஜனநாயக, மிதவாத அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்கள் இணைந்து வெற்றிப் பாதையில் பிரவேசிக்க அழைப்பு விடுப்பதாக பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணியின் செயலாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

'ஒரு வெற்றி நாட்டுக்கு தைரியத்தின் சேர்க்கை' என்ற தொனிப்பொருளில் பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணியின் கூட்டம் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் நேற்று (05) கொழும்பு வோட்டர்ஸ் எட்ஜில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் ரமேஷ் பத்திரன இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

"அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த நாளாக 2024 செப்டெடம்பர் 5 ஆம் திகதி வரலாற்றில் குறிக்கப்படும். இலங்கையின் வரலாற்றின் மிதவாத ஜனநாயகக் கட்டமைப்பில் இதுபோன்ற பல நாட்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

1935 ஆம் ஆண்டு டிசம்பர் 18 ஆம் திகதி இலங்கை சமசமாஜக் கட்சி நிறுவப்பட்டது. இடதுசாரி அரசியல் கட்சிகளின் மக்கள் தலைவர்கள் ஒன்றிணைந்து ஒடுக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கினர். 1951 ஆம் ஆண்டு செப்டெம்பர் 2 ஆம் திகதி எஸ். டபிள்யூ. டபிள்யூ. ஆர். டி.பண்டாரநாயக்கா ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை உருவாக்கிய நாள்

வரலாற்றில் ஒரு குறிப்பிட்ட நாளை பின்னோக்கி பார்த்தால், பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணி ஸ்தாபிக்கப்பட்ட இந்நாள் வரலாற்றில் பொன்னான நாளாகவும் குறிக்கப்படும். அதற்கு 1935ஆம் ஆண்டு இடதுசாரி சோசலிச முகாமின் பிள்ளைகள் எங்கள் முகாமில் உள்ளனர். 56 புரட்சியின் குழந்தைகளின் குழந்தைகள் எங்களுடன் இருக்கிறார்கள். அண்மைக்கால வரலாற்றில் இலங்கை அரசியலில் புதிய திருப்புமுனையை ஏற்படுத்திய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மையான மக்கள் பிரதிநிதிகள் எம்முடன் உள்ளனர்.

1935ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சமூகப் புரட்சியின் முன்னோடியாக இருந்த அமைச்சர் பிலிப் குணவர்தனவின் மூத்த புதல்வர் தினேஷ் குணவர்த்தன எமது புதிய கூட்டணியையும் முன்னணியையும் வழிநடத்திச் செல்வதை எமக்குக் கிடைத்த பாக்கியமாக கருதுகின்றோம்.

08

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆவணி மாதம் 20ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ரபீஉனில் அவ்வல் பிறை 02

### குறள் தரும் சிந்தனை



ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து

தமக்கு இழைக்கப்படும் தீமையைப் பொறுத்துக் கொள்பவர்களை உலகத்தார் பொன்னாக மதித்துப் போற்றுவார்கள். பொறுத்துக் கொள்ளாமல் தண்டிப்பவர்களை அதற்கு ஒப்பாகக் கருத மாட்டார்கள்.

# தேர்தல் பிரசாரத்தில் பிரதான இடம்பிடித்துள்ள பொருளாதாரம்

நிறைவேற்று அதிகாரம் கொண்ட 09 ஆவது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவிருக்கிறது. இத்தேர்தலில் வாக்களிப்பதற்கு ஒரு கோடி 71 இலட்சத்து 80 ஆயிரம் பேர் தகுதி பெற்றுள்ளனர். இவர்களது வாக்குகளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் 39 பேர் அபேட்சகர்களாகக் களமிறங்கியுள்ளனர்.

இந்த ஜனாதிபதித் தேர்தல் மக்கள் மத்தியில் பெரும் பேசுபொருளாகியுள்ளது. அபேட்சகர்கள் வாக்காளர்களுக்கு அளித்துவரும் வாக்குறுதிகளும் அவர்களது தேர்தல் விஞ்ஞாபனங்களும் இதற்கு வழிவகை செய்துள்ளன.

அந்த வகையில் இம்முறை தேர்தல் பிரசாரத்தைப் பொதுவாக எடுத்துப் பார்த்தால், இதில் விஷேடமான போக்கொன்றை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அது கடந்த இரண்டு மூன்று தசாப்த காலத்தில் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்களில் இல்லாத போக்காக விளங்குகிறது. கடந்த கால ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்களில் பயங்கரவாத ஒழிப்பு, தேசப்பற்று என்பனவே அதிக முக்கியத்துவம் பெற்று இருந்தன.

ஆனால் இம்முறை தேர்தல் பிரசாரத்தில் அவ்வாறான நிலைமையை அவதானிக்க முடியாதுள்ளது. எல்லா தேர்தல் பிரசார மேடைகளிலும் பொருளாதாரம் அதிக முக்கியத்துவம் பெற்றதாக விளங்குகிறது. ஒவ்வொரு அபேட்சகரும் அளிக்கும் வாக்குறுதிகளும் கூட பொருளாதார நலன்கள் சார்ந்தவையாகவே அமைந்துள்ளன.

இப்போக்கை பொருளாதார நிபணர்கள் வரவேற்றுள்ளனர். நாட்டின் துரித பொருளாதார வளர்ச்சிக்கு இது நிச்சயம் பங்களிக்கக் கூடியதாக அமையும். நாட்டை உண்மையாக நேசிப்பவர்களின் எதிர்பார்ப்பும் அதுவேயாகும்.

ஒரு நாடு வளமாகவும் பலமாகவும் இருப்பதற்கும் அந்நாட்டின் மக்கள் சுபிட்சம் பெற்றுக் கொள்ளவும் பொருளாதாரம் உறுதியாகவும் ஸ்திரமாகவும் இருக்க வேண்டும். அத்தகைய பொருளாதாரக் கட்டமைப்பே நாட்டின் அனைத்து மக்களினதும் எதிர்பார்ப்பாக உள்ளது. ஏனெனில் கடந்த 2022 இன் ஆரம்பப்பகுதியில் முகம் கொடுத்த பொருளாதார அசௌகரியங்களும் பாதிப்புகளும் மீண்டுமொரு தடவை நாட்டில் ஏற்பட்டு விடக்கூடாது. அத்தகைய பொருளாதார வீழ்ச்சியைத் தவிர்ப்பதற்கான ஒரே மார்க்கம் பொருளாதார முன்னேற்றமேயாகும். இதன் முக்கியத்துவமும் அவசியமும் பரவலாக உணரப்பட்டுள்ளது. கடந்த 2022 இல் முகம்கொடுத்த தாக்கங்களும் பாதிப்புகளும் இலகுவில் மறந்துவிடக்கூடியவை அல்ல.

ஏனெனில் அந்த பொருளாதார வீழ்ச்சியின் போது அதற்கு முகம்கொடுக்க முடியாமல் அன்றைய ஆட்சியாளர்களே தங்கள் பதவிகளை விட்டு வெளியேறிச் சென்றனர். அந்தச் சூழலில் எதிர்க்கட்சியினரும் ஆட்சிப் பொறுப்பை ஏற்க மறுத்தனர். இது ஜனநாயக விழுமியங்களுக்கு முரணான செயற்பாடாகும். ஜனநாயக நாடொன்றில் ஆட்சியில் இருப்பவர்கள் பதவி விலகினால் ஆட்சிப் பொறுப்பை எடுக்கும் பொறுப்பு எதிர்க்கட்சியினருக்கு உள்ளது. அந்த பொருளாதார வீழ்ச்சிக்கு முன்பாக தங்கள் பொறுப்பைக்கூட உணர்ந்து செயற்பட எதிர்க்கட்சியினர் மறுத்துவிட்டனர். இதன் நிமித்தம் வெவ்வேறு விதமான சாக்கு போக்குகளையும் கூட அவர்கள் கூறினர்.

அந்தச் சூழலில் நாடும் மக்களும் இக்கட்டான நிலைக்குள் தள்ளப்பட்டிருந்தனர்.

அவ்வாறான சூழலில் நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி பாராளுமன்றத்தில் ஒரே ஒரு தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியைக் கொண்டிருந்த ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி பதவியை ஏற்றார். அந்தச் சூழலில் நாட்டுக்கும் மக்களுக்கும் எது அவசியமாக இருந்ததோ அதற்கு முன்னுரிமை அளித்து அவர் வேலைத்திட்டங்களை ஆரம்பித்தார். பொருளாதார மீட்சிக்காக அவர் ஆரம்பித்த வேலைத்திட்டங்கள் குறுகிய காலப்பகுதிக்குள் நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை பயக்கத் தொடங்கின. அதலபாதாளத்தில் வீழ்ந்திருந்த பொருளாதாரம் மூச்சு விடத் தொடங்கியது. பொருளாதார வீழ்ச்சிக் காலத்தில் நிலவிய நெருக்கடிகளும் அசௌகரியங்களும் கட்டம் கட்டமாக நாட்டை விட்டு நீங்கலாயின.

எதிர்க்கட்சியினர், தற்போதைய தேர்தல் பிரசார மேடைகளில் தங்கள் அணியிலேயே பொருளாதார நிபுணர்களும் வல்லுனர்களும் இருப்பதாகக் கூறிவருகின்றனர். ஆனால் நாடு நெருக்கடிக்கு உள்ளான போது இந்த வல்லுனர்களும் நிபுணர்களும் தங்கள் நிபுணத்துவத்தை நாட்டுக்காகப் பயன்படுத்தவில்லை என்பதை மக்கள் மறந்து விடவில்லை.

2022 இல் நாடு பொருளாதார வீழச்சிக்கு உள்ளானதன் விளைவாகவே பொருளாதாரம் ஜனாதிபதி தேர்தல் பிரசார மேடைகளில் முன்னொரு போதும் இல்லாத முக்கியத்துவத்தைப் பெற்று இருக்கிறது. இது நாட்டின் துரித பொருளாதார வளர்ச்சிக்கு வித்திட வேண்டும். அதுவே நாடு பலமாகவும் உறுதியாகவும் இருக்க வழிவகுக்கும்.

editor.tkn@lakehouse.lk

# இன்றைய அரசியல் தலைவர்களுக்கு முன்மாதிரியாக கொள்ளப்பட வேண்டியவர் மர்ஹூம் பாக்கீர் மாக்கார்

கலாநிதி அஷ்ஷைக்
ஏ. அஸ்வர் அஸாஹீம்...
அல் அஸ்ஹரி

அப்துல் பாக்கீர் மாக்கார் கடந்த 1997 நவம்பர் 07_1998 டிசம்பர் 20 காலப்பகுதியில் இலங்கை பாராளுமன்றத்தில் இன, மத, கட்சி பேதமின்றி மக்கள் பிரதிநிதியாக இருந்தார்.

பேருவளை பிரதேச மருதானையில் 1917 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் திகதி யூனானி மருத்துவப் பரம்பரையில் ஹக்கீம் அலியார் முஹம்மத் மரிக்கார் மற்றும் ராயிழா உம்மா தம்பதிகளின் புதல்வராக அப்துல் பாகிர் மாகார் பிறந்தார்.

மும்மொழியிலும் தேர்ச்சிபெற்ற அப்துல் பாக்கீர் மாக்கார் பேருவளை மாளிகாஹேன முஸ்லிம் மகாவித்தியாலயம் (ஸேம் ரிபாய் ஹாஜியார் மகாவித்தியாலயம்), கொழும்பு புனித செபஸ்டியன் வித்தியாலயம், ஸாஹிரா கல்லூரி என்பவற்றில் தனது பாடசாலைக் கல்வியை பெற்றுக் கொன்டார்.

பாடசாலைக் காலத்தில் கல்லூரியினால் வெளியிடப்பட்டுவந்த சஞ்சிகையின் ஆசிரியராக, முஸ்லிம் மஜ்லிஸ் தலைவராக, தமிழ் கழகத் தலைவராக இன்னும் பல்வேறு பதவிகளை வகித்து தனது ஆளுமையை வெளிப்படுத்தினார்.

கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிய இவர்கள் 1940 ஆம் ஆண்டு இலங்கை சட்டக் கல்லூரியில் சேர்ந்து பட்டம்பெற்று களுத்துறை நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக கடமையாட்டினார். மிகக் குறுகிய காலத்தில் களுத்துறை நீதிமன்றத்தில் சிரேஷ்ட குற்றவியல் சட்டத்தரணியானார்.

தன்னை நாடி வந்தவர்களிடம் விசேடமாக வறிய மக்களிடம் கொடுப்பனவுகள் எதையும் எதிர்பாராது உயரிய சேவையாற்றினார். அரசியல் களத்தில் முதன் முதலாக 1947 ஆம் ஆண்டு தனது ஆசான், துவான் புர்கானுடீன் ஜாயா அவர்களின் மத்திய கொழும்பு தேர்தல் பிரசாரங்களுக்கான அமைப்பாளராக பாக்கீர் மாக்கார் தெரிவு செய்யப்பட்டார்.



1950 ஆம் ஆண்டு பேருவளை நகரசபை உறுப்பினராக உள்வாங்கப்பட்டு பின்னர் அதன் தவிசாளராக தெரிவு செய்யப்பட்டு சேவையாற்றினார்.

1960 இல் பேருவளையின் முதலாவது பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். இவர் 1977 இல் பிரதி சபாநாயகராக கடமையாற்றி, பின்பு 1978 முதல் 1983 வரை சபாநாயகராக கடமைபுரிந்தார்.

பாக்கீர் மாக்கார் சபாநாயகராக இருந்த 1980 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் இலங்கையின் பதில் ஜனாதிபதியாக சில நாட்கள் கடமையாற்றினார்.

இவர் 1988 இல் மேல் மாகாணத்தின் முதல் ஆளுனராக கடமையை ஏற்று தொடர்ந்து ஐந்து வருடங்கள் 1993 வரை பதவி வகித்தார். அவர் முஸ்லிம் லீக்கின் தொண்டராகவும் முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் ஸ்தாபகராகவும் பணியாற்றினார்.

பெரும்பான்மை முஸ்லிம்கள் வாழக்கூடிய இடங்களில் முஸ்லிம்களுக்கென்று தனியான அரசியல் கட்சி ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று காத்தான்குடியில் 1980 ஆம் ஆண்டு நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றியுள்ளார்.

பரந்த சேவைமனப்பாங்கினைக் கொண்டிருந்ததால், நாட்டின் அனைத்து இன, மதத்தவர்களின் நன்மதிப்பைப் பெற்றவராக அவர் திகழ்ந்தார்.

பொதுவாக மறைந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுதாபத் தீர்மான அமர்வு பாராளுமன்றத்தில் ஒரு தடவை மாத்திரம் நடைபெறுவது வழக்கம், ஆனால் பேருவளை மண்ணுக்கு பெருமை ஈட்டித்தந்த அப்துல் பாக்கீர் மாக்கார் அவர்களுக்காக அடுத்தடுத்து இரண்டு வருடங்கள் அனுதாபத் தீர்மான அமர்வு நடாத்தப்பட்டமை ஒரு சிறப்பம்சமாகும்.

அப்துல் பாக்கிர் மாக்காரின் நேர்மை, தேசிய மற்றும் சமூகப் பற்று ஆகியவைகளுக்குக் காரணம், அவரிடம் இருந்த ஆத்மீக ஈடுபாடுகள், நல்ல மனிதர்களுடன் இருந்த சகவாசம் என்பனவாகும்.



அவரது வாழ்க்கை, சமூகத் தொண்டு ஆகியன ஏனையோருக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

# ஐங்கரன் விக்கினேஸ்வராவின் நூல்கள் லண்டனில் வெளியீடு




லண்டன் மாநகரில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் நான்கு நூல்கள் எதிர்வரும் அக்டோபர் மாதம் வெளியிடப்பட உள்ளன.

பாலஸ்தீனம் எரியும் தேசம், ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல், தேசிய சுய நிர்ணயமும் ஐரோப்பிய சிறுபான்மை இனங்களும், இலங்கை இதழியலில் சிவ குருநாதன், ஆகிய ஐங்கரன் விக்கினேஸ்வராவின் நான்கு நூல்கள் வெளியீடு லண்டன் ஈலிங் அம்மன் கோவில் மண்டபத்தில் நடைபெற உள்ளது. (London Ealing Amman temple, 5, Chapel Rd, London W13 9AE, U.K)

எதிர்வரும் 26 ஆம் திகதி ஒக்டோபர் 2024 சனிக்கிழமை மாலை 16.00 முதல் 18.30 மணி வரை இவ்வெளியீட்டு நிகழ்வு நடைபெற உள்ளது.

இந்நிகழ்வின் தலைமையுரையை இங்கிலாந்து சைவ மன்றங்களின் காப்பாளர் சிவா தம்பு வழங்குவார்.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் வாழ்த்துரையை ஈழத்தின் மூத்த ஆவணக்காப்பாளர் பத்மநாப ஐயர், மற்றும் சி.கிருபாகரன், சண்முகதாசன் ஆகியோர் வழங்குவர்.



'பாலஸ்தீனம் எரியும் தேசம்' நூல் அறிமுகவுரையை பா. நடேசன் நிகழ்த்துவார். அதன்பின் 'ஓர்மத்தின் உறைவிடம்' இஸ்ரேல் நூலின் அறிமுகவுரையை நா. சபேசன் ஆற்றுவார்.

தேசிய சுயநிர்ணயமும் ஐரோப்பிய சிறுபான்மை இனங்களும் நூலின் அறிமுகவுரையை டொக்டர் வே. ரவிமோகன் ஆற்றுவார்.

அத்துடன் 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' நூலின் அறிமுகவுரையை கோவிலூர் செல்வராஜன் ஆற்றுவார்.

அத்துடன் இந்நூல் வெளியீட்டில் ஈழத்து சிற்றிதழ்கள் பற்றிய சிறப்புரையை திருமதி மாதவி சிவலீலன் வழங்குவார்.

லண்டன் மாநகரில் நிகழும் இந்நூல் வெளியீட்டின் ஏற்புரையை ஐங்கரன் விக்கினேஸ்வரா நிகழ்த்துவார்.

# தமிழரசுக் கட்சி தனது ஒருமைத்துவ ஆளுமையை இழந்து விட்டது

### மேல்மாகாண சபை முன்னாள் உறுப்பினர் குமரகுருபரன்

தமிழ் தேசியக் கூட்டமைப்பும், தமிழரசுக் கட்சித் தலைமையும், தனிமனிதத் தலைவர்கள் என்று அழைக்கப்படுபவர்களின் இறுதி சுயநல எண்ணங்களுக்காக, கொள்கை செயற்பாடு நிலைகளால் சிதைந்து போக காரணமாயிற்று. அது தனது 'ஒருமைத்துவ ஆளுமை (Unity of Command) மற்றும் தலைமையின் கூட்டுப் பொறுப்பை (Collective Responsibility )இழந்து விட்டது. ஒரு அபத்தமான சூழ்நிலை உருவாகியுள்ளது என மேல்மாகாண சபை முன்னாள் உறுப்பினரும், தமிழ் துறைசார் வல்லுநர் மன்றத்தின் மூத்த துணைத்தலைவருமான கலாநிதி குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

'ஆனால் தமிழ் வாக்காளர்கள் தங்கள் நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளனர். அவர்கள் அனுபவித்த பின்தங்கிய பொருளாதாரம் மற்றும் துன்பங்களை அவர்கள் இன்னும் நினைவில் வைத்திருக்கிறார்கள். சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிக்க தமிழரசுக்க கட்சி தீர்மானித்துள்ளதாக எம்.ஏ.சுமந்திரன் அறிவித்துள்ள போதிலும், குறித்த தினத்தில் கூட்டத்தினை கூட்ட அனுமதி தெரிவித்த போதும் கலந்து கொள்ள உடல்நிலை அனுமதிக்காத காரணத்தினால் மாவை சேனாதிராஜா பங்குபற்றவில்லை. சஜித் பிரேமதாசவை ஆதரிக்கும் முடிவை சுமந்திரன் அறிவித்தாலும், தன்னுடன் ஒருபோதும் கலந்தாலோசிக்கப்படவில்லை என கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா தெளிவுபடுத்தியுள்ளார்.



மேற்படி கூட்டத்தில் சுமந்திரனுக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த சி.வி. கே.சிவஞானமும் சஜித்திடம் பிரசாரம் செய்ய வெளியில் வர முடியாது என மிகத் தெளிவாக தெரிவித்தார். காரணம், ஒரு சுயேச்சை தமிழ் வேட்பாளர் இருக்கும்போது தார்மீக கடமைப்பாட்டில் சங்கடமான சூழ்நிலைஇருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்' என்று குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

'எம்.பி.ஸ்ரீதரனும் தனது வெளிநாட்டுப் பயணத்தை அறிவித்துள்ளார். கடந்த கால வரலாற்றை அறியாத சமூக ஆர்வலர்கள் என்ற பெயரிலான சில குழுக்கள் அரசியலில் இறங்கி சுயேச்சை வேட்பாளரை நிறுத்தும் எண்ணத்தில் களமிறங்குவதால் இந்த அவலம் ஏற்பட்டுள்ளது.

தமிழர்களின் அபிலாஷைகளை உலகுக்கு எடுத்துரைப்பதற்காகத்தான் என்கிறார்கள் அவர்கள். ஆனால் பல தசாப்தங்களுக்கு முன்னர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் வட்டுக்கோட்டை மாநாட்டின் ஊடாகவும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் வெற்றியினாலும், பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினாலும் தமிழர்களின் எண்ணம் உலக கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. நம் அரசியல் வரலாற்றிலிருந்து திரும்பத் திரும்ப பாவிக்கப்பட்ட ஒரு வார்த்தையை நான் சொன்னால் 'செத்த பாம்பை மீண்டும் மீண்டும் அடிக்கும் கூட்டம்' என்றுதான் சொல்வார்கள்.

இந்தத் தேர்தலில் போட்டியாளர்களிடையேயும், வேட்பாளர்களை ஆதரிக்கும் மக்களிடையேயும் பகைமை இல்லை என்பதே நாம் அவதானித்து பெருமை கொள்ளக்கூடிய சிறந்த செம்மையான கலாசாரம். எவ்வாறெனினும், ஜனநாயகமே தீர்மானிக்கும் இறுதி முடிவை என்பதில் சந்தேகமில்லை' என்று குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

# தெலுங்கானாவில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் 6 பேர் சுட்டுக் கொலை!

இந்தியாவின் தெலுங்கானா மாநிலம் பத்ராத்ரி கொதகுலம் பகுதி காட்டுப்பகுதியில் மாவோயிஸ்ட்கள் பதுங்கி இருப்பதாக உளவுத்துறை அதிகாரிகளுக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது. அப்பகுதியில் பொலிசார் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அங்கு பதுங்கியிருந்த மாவோயிஸ்ட்கள் பொலிசார் மீது சரமாரியாக துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் பொலிசாரும் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் 6 மாவோயிஸ்ட்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். பொலிசார் ஒருவர் பலத்த காயமுற்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. மாவோயிஸ்ட்களின் மறைவிடத்தில் இருந்து ஏராளமான ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.



கடந்த இரண்டு தினங்களுக்கு முன், சத்தீஸ்கரில் பிஜாப்பூர் எல்லைப்பகுதியில் பாதுகாப்புப் படையினர் நடத்திய என்கவுன்டரில், ஆறு பெண்கள் உட்பட 9 மாவோயிஸ்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். சத்தீஸ்கர் எல்லைக்கு அருகில், உள்ள பத்ராத்ரி கொதகுலம் பகுதியில் மாவோயிஸ்டுகள் தாக்குதலுக்கு நேற்று பதிலடி கொடுக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
உதவி அதிபர், கொ/ புனித அன்னம்மாள் மகளீர் மகாவித்தியாலயம், கொழும்பு 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I

1 மணித்தியாலம்

- **01, 02 ஆகிய வினாக்களில் குறைந்த தொடர்பு உள்ள உருச்சோடி இருக்கும் அடைப்பைத் தெரிவு செய்க.**

01. i.  ii.  iii. 

02. i.  ii.  iii. 

03. ACE, BDF, CEG, …………….
i. DFH ii. DEH iii. EDH

04.  அருகில் தரப்பட்டுள்ள சதுரமுகியின் விளிம்பு ஒன்றின் நீளம் 4 cm ஆகும். எனின் எல்லா விளிம்புகளினதும் மொத்த நீளம் யாது?
i. 30cm ii. 36cm iii. 48cm

05. முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது மாற்றமின்றித் தெரியும் உருவம் அல்லாதது.
i.  ii.  iii. 

- **பண்ணை ஒன்றில் ஆடுகளும், கோழிகளும் காணப்பட்டன. அவற்றின் தலைகளின் எண்ணிக்கை 13 அவற்றின் கால்களின் எண்ணிக்கை 38. மேலே கூறப்பட்ட தகவலை அடிப்படையாகக் கொண்டு 6, 7 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

06. அங்கு காணப்பட்ட கோழிகள் எத்தனை?
i. 7 ii. 6 iii. 5

07. அங்கு காணப்பட்ட மாடுகள் எத்தனை?
i. 7 ii. 6 iii. 5

08. தாயார் ஒருவர் தன்னிடமிருந்த பணத்தில் ½ ஐ புத்தகம் வாங்க செலவழித்தார். அதன் பின்னர் அவர் மீதிப் பணத்தை இரு சம பகுதிகளாக பிரித்து அவற்றில் ஒரு பகுதியை ஆடைகள் வாங்க செலவழித்த பின்னர் அவரிடம் எஞ்சியிருந்த பணம் ரூபா 50 எனின் அவர் புத்தகங்கள் வாங்கச் செலவழித்த பணம் யாது?
i. ரூபாய் 50.00 ii. ரூபாய் 100.00 iii. ரூபாய் 200.00

09. பின்வரும் வாக்கியங்களில் சரியாக எழுதப்பட்டுள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.
i. வானொலியில் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகள் செவிகளுக்கு இன்பம் தருகின்றன.
ii. வானொளியில் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகள் செவிகளுக்கு இன்பம் தருகின்றன.
iii. வானொழியில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகள் செவிகளுக்கு இன்பம் தருகின்றன.

10. வர்சியின் வயது தர்சியின் வயதின் அரைவாசியாகும். தர்சியின் வயது நிதுர்சியின் வயதின் அரைவாசியாகும். மூவரினதும் வயதுகளில் கூட்டுத்தொகை 42 ஆண்டுகள் எனின் நிதுர்சியின் வயது வர்சியின் வயது முறையே தருக.
i. 24 வயது, 6 வயது ii. 12 வயது, 24 வயது
iii. 24 வயது, 12 வயது

11. ஒரு வாகனம் ஒரு லீற்றர் பெற்றோலில் 10 கிலோமீற்றர் செல்கிறது. 10 லீற்றர் பெற்றோலை நிரப்பிக்கொண்டு பயணத்தை ஆரம்பித்த வாகனம் 60 கிலோ மீற்றர் சென்றது. எஞ்சியிருக்கும் பெற்றோலில் வாகனம் எத்தனை கிலோ மீற்றர் செல்லும்?
i. 60km ii. 40 km iii. 30 km

12. அருளிடம் 10 ரூபாய், 5 ரூபாய். 2 ரூபாய் நாணயங்களாக மாத்திரம் 19 ரூபாய் உள்ளது. எனின் அவனிடம் உள்ள இரண்டு ரூபாய் நாணயங்களின் பெறுமதி?
i. 6 ரூபாய் ii. 4 ரூபாய் iii. 2 ரூபாய்

- **தரவுகளை அவதானித்து 13, 14 ஆகிய வினாக்களுக்கு விடைகளைத் தெரிவு செய்க.**




13.  இன் பெறுமதி யாது?
i. 3 ii. 2 iii. 4

14.  இன் பெறுமதி யாது?
i. 32 ii. 34 iii. 14

- **மாணவன் ஒருவன் வீட்டிலிருந்து பாடசாலைக்கு சென்ற வரைபடத்தினை பின்வரும் உரு காட்டுகிறது. அதனை அவதானித்து 15, 16ஆம் வினாக்களுக்கு விடை தருக.**




15. மாணவன் வீட்டிலிருந்து பாடசாலைக்கு செல்லும் போது இடது பக்கம் திரும்பிய தடவைகளின் எண்ணிக்கை?
i. 2 தடவை ii. 4 தடவை iii. 5 தடவை

16. வீடு அமைந்திருப்பது பாடசாலைக்கு
i. கிழக்கு திசையிலாகும் ii. வடக்குத் திசையிலாகும்
iii. மேற்குத் திசையிலாகும்

- **பாடசாலை ஒன்றிற்கு தரம் 04 மாணவர்கள் சிலர் வந்த விதத்தினை கீழே உள்ள வென்வரிப்படம் காட்டுகின்றது. அதனைக் கொண்டு 17, 18 வினாக்களுக்கு விடைகளைத் தெரிவு செய்க.**




17. முச்சக்கர வண்டியில் மாத்திரம் வருகை தந்த மாணவர்களின் எண்ணிக்கை?
i. 9 ii. 19 iii. 11

18. பேருந்தில் வருகை தந்த மாணவர்களின் எண்ணிக்கை?
i. 16 ii. 10 iii. 18

19. வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையை தெரிவு செய்க. 1, 2, 4, 8, ……
i. 16 ii. 10 iii. 12

20. இலங்கை, கொழும்பு, யாழ்ப்பாணம் என்பவற்றை விபரிக்கும் உரு?
i.  ii.  iii. 

21.  இவ்வுருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை
i. 6
ii. 7
iii. 5

22. A எனும் எழுத்தினால் காட்டப்படும் செவ்வக வடிவக் கடதாசியானது அம்புக்குறி காட்டும் திசைக்கு புள்ளிக் கோடுகள் வழியே இரண்டாக மடித்து B எனும் எழுதினால் காட்டப்படும் உருவங்கள் வெட்டி எடுக்கப்பட்டன. அதனை மறுபடியும் விரிக்கும் போது தோன்றும் உரு?

 
A B

i.  ii.  iii. 

23. கண்ணனும் காந்தனும் ரவியிலும் உயரம் கூடியவர்கள் எனின் மூவரிலும் உயரங்கூடியவர்,
i. கண்ணன் ii. காந்தன் iii. கூறமுடியாது

24. பத்தாமிடத்து எண்ணினதும் ஆயிரமாம் இடத்து எண்ணினதும் வித்தியாசம் 3 ஆகும். அவ்வெண்ணை தெரிவு செய்க.
i. 6389 ii. 8473 iii. 7249



25. இவ்வுரு தொடர்பான சரியான கூற்று
i. நேர்கோடுகளை மட்டும் பயன்படுத்தி இவ்வுரு ஆக்கப்பட்டுள்ளது.
ii. இவ்வுருவில் மூன்று வட்டங்கள் உள்ளன.
iii. இவ்வுருவில் மூன்று முக்கோணிகள் உள்ளன.

26. இவ்வுருவில் குறைந்த எண்ணிக்கையில் இருக்கும் தளவடிவம்
i. செவ்வகம் ii. சதுரம் iii. வட்டம்

27. நான் ஒரு எண்ணை நினைத்து அதனை மூன்றால் பெருக்கி ஐந்தைக் கூட்டியபோது கிடைத்த விடை 29 எனின். நான் நினைத்த எண் யாது?
i. 8 ii. 7 iii. 6

28. நான் ஒரு பெண் ஆவேன். எனது சகோதரன் ராஜாவுக்கு இரண்டு சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் உள்ளனர். எனின் எனக்கு எத்தனை ஆண் சகோதரர்கள் உள்ளனர்?
i. இரண்டு ii. மூன்று iii. நான்கு

29. 50 தொடக்கம் 59 வரையான எண்களை எழுதும் போது இலக்கம் 5 எழுதப்படும் தடவைகள்?
i. 9 ii. 10 iii. 11

(06ஆம் பக்கம் பார்க்க)

(05 ஆம் பக்கத் தொடர்)

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I

1 மணித்தியாலம்

30.  அருகில் உள்ள உருவில் 2 சதுரங்களும், 1 செவ்வகமும் உள்ளன. ஒரு சதுரத்தின் சுற்றளவு 8cm எனின் செவ்வகத்தின் சுற்றளவு யாது?
i. 16 cm ii. 12 cm iii. 14 cm

31. 2021 ஆம் ஆண்டு எத்தனையாம் நூற்றாண்டு, எத்தனையாம் தசாப்தத்திற்குள் அடங்கும்?
i. 21 ஆம் நூற்றாண்டு 3ஆம் தசாப்தம்
ii. 20ஆம் நூற்றாண்டு 3ஆம் தசாப்தம்
iii. 21ஆம் நூற்றாண்டு 2ஆம் தசாப்தம்

32. கபிலனின் தந்தையின் தாய் கபிலனுக்கு என்ன உறவு முறையாகும்.
i. அம்மம்மா ii. அப்பம்மா iii. பெரியம்மா

33. மின் அலங்காரம் ஒன்றில் மஞ்சள் நிற மின் குமிழ் 5 நிமிடத்திற்கு ஒரு தடவையும், சிவப்புநிற மின்குமிழ் 3 நிமிடத்திற்கு ஒரு தடவையும் ஒளிரும் எனின் காலை 7.45 மணிக்கு இரண்டும் ஒன்றாக ஒளிர்ந்தால் அடுத்து எப்போது ஒன்றாக ஒளிரும்?
i. காலை 9.45 ii. காலை 8.45 iii. காலை 8.00

34. படத்தில் நிழற்றப்பட்ட பகுதியை வெட்டியதன் பின் A-A, B-B கோடுகளின் வழியே இரண்டு முறை வைத்தால் வரும் வடிவத்தைத் தெரிவு செய்க.




i.  ii.  iii. 

35. அருகில் தரப்பட்டுள்ள உருவினை ஆக்குவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ள கனவுருக் குற்றிகள் எத்தனை?
i. 116
ii. 112
iii. 114



36. ஒழுங்குமுறையாக கொடுக்கப்பட்டுள்ள விடையினை தெரிவு செய்க.
i. பூ, வித்து, காய், மரம் ii. மரம், வித்து, பூ, காய்
iii. வித்து, மரம், பூ, காய்

37. இத்தரவுகளின் அடிப்படையில் 534 என்பதன் எழுத்துக்கள்

ABA = 343
COC = 858
BAC = 438

i. OAB ii. OCA iii. OAC

38. ஒரு அழிறப்பரின் விலை ரூ. 2.50 ஒரு பேனாவின் விலை ரூ. 15.00 ஒரு பேனா வாங்கும் பணத்திற்கு எத்தனை அழிறப்பர்கள் வாங்க முடியும்?
i. 6 ii. 5 iii. 4

39. கல்விச் சுற்றுலாவிற்கு செல்வதற்கு இன்னும் 56 நாட்கள் இருப்பதாக டிலக்சன் கூறினான். இதனை எத்தனை வாரங்கள் என கூற முடியும்
i. 6 ii. 7 iii. 8

40. ஒரு தாங்கியை முற்றாக நிரப்புவதற்கு 300$l$ நீர் தேவை. அதுபோல் 5 தாங்கிகளை நிரப்ப தேவையான நீரின் அளவு யாது?
i. 1$l$ 500ml ii. 1500$l$ iii. 1500ml

## கடந்த வார (30.08.2024) வினாத்தாள்- II இற்கான விடைகள்

**I.**
01. குமரனின் வீட்டுத் தோட்டத்தில்
02 தப்பினேன் பிழைத்தேன்
03. அடங்காத விருப்பம்
04. பச்சைக் கம்பளம் விரித்தது போல
05. துள்ளித்துள்ளி
06. பிழைத்தேன்
07. i. குருவிகள் தானியங்களை கொத்தித் தின்றன.
ii. நாங்கள் கல்விச் சுற்றுலா சென்றோம்.
08. i. கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம்
ii. இலங்கை புத்தகத் திணைக்களம்
iii. கல்விப் பொதுத் தராதரம்
09. i. ரீங்காரமிடும் ii. சொல்லும்
10. i. பதற்றம் ii. செய்நன்றி
11. i. சுவைத்தேன் ii. உண்ணும்
12. i. பணிவாக ii. பாதுகாப்பு

**II.**
13. i. சுவையான ii. பெரிய
14. i. பிழை ii. சரி
15. i. எனது தாத்தா மிகவும் நல்லவன்
ii. அவள் பாடம் படிக்கிறாள்
16. i. அகவும் ii. நெல்லின் இளையது
iii. பிள்ளை iv. சிங்கம் v. குழுக்கள்
17. குயில்கள் இனிமையாக கூவ மயில்கள் அழகாக ஆடின.
18. i. தொடு திரை ii. மின்னஞ்சல்
19. i. Stars ii. Road
20. i. தாதுன ii. மகே iii. எனக்கு அப்பம் வேண்டும்.

**III.**
21. 7kg 650g
22. 8.30 மணி
23. 
24. XV, XIII, XI, IX, VIII
25. i. 20 ii. 100
26. ரூ. 45.00
27. 228, 444
28. சதுரமுகி, நான்முகி
29. ரூபாய் 500.00

**IV.**

| | | |
|---|---|---|
| | 39. 2 | 49. 2 |
| 30. 2 | 40. 2 | 50. 1 |
| 31. 3 | 41. 3 | 51. 2 |
| 32. 1 | 42. 3 | 52. 2 |
| 33. 1 | 43. 1 | 53. 1 |
| 34. 2 | 44. 2 | 54. 2 |
| 35. 2 | 45. 3 | 55. 2 |
| 36. 3 | 46. 1 | 56. 3 |
| 37. 2 | 47. 1 | 57. 1 |
| 38. 2 | 48. 3 | 58. 3 |
| | | 59. 2 |



# குடும்ப வன்முறை; முற்றாக ஒழித்தல் சாத்தியமானதா?

குடும்பங்கள் ஒரு சமூகத்தின் கட்டுமான தொகுதிகளாகும். பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான குடும்பங்கள் உறுப்பினர்களின் நலனுக்கு மட்டுமல்ல, அதை ஒரு சமுதாய மற்றும் மக்களின் நலனுக்கும் அத்தியாவசியமானதாகும். ஆகையால் குடும்பத்தில் நிகழும் வன்முறை குடும்ப நலனை சிதைப்பதோடு மட்டுமல்லாமல் சமூகத்திலும் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. குடும்பத்தில் நிகழும் வன்முறை இலட்சக்கணக்கான மக்களை, குறிப்பாக பெண்களையும் பாதிக்கும் ஒரு உலகளாவிய பிரச்சினை ஆகும். பெண்களுக்கு எதிரான வன்முறை குடும்ப வன்முறை ஆகும். குடும்ப வன்முறை பெரும்பாலும் உடல் மற்றும் மனரீதியான காயங்கள் மற்றும் இறப்புக்கு விட்டு செல்கின்றது. கடந்த நான்கு வருடங்களில் பல குடும்ப வன்முறைகள் இடம் பெற்றுள்ளன,

குடும்ப வன்முறை என்பது வீட்டிற்குள், குடும்ப உறுப்பினர்கள் அல்லது தம்பதிகளுக்கு இடையே நிகழும் பலவித துஷ்பிரயோகங்களாகும். குடும்ப வன்முறையின் பொதுவான உருவம் வயது வந்த ஆண் குற்றவாளி மற்றும் பாதிக்கப்பட்ட பெண், பெரும்பாலும் அவரது மனைவி அல்லது காதலியை உள்ளடக்கியது. இருப்பினும், குடும்ப வன்முறையில் ஈடுபடும் பெண்களும் உள்ளனர், சில சமயங்களில் ஆண்களும் பாதிக்கப்படுகின்றனர். உண்மையில், எந்தவொரு குடும்பத்தாரும் அல்லது குழு உறுப்பினரும் மற்றொருவரை நோக்கிச் செய்யும் எந்தவொரு வன்முறையும் வன்முறைதான்.

குடும்ப வன்முறை பல வடிவங்களில் இருக்கலாம். சொத்து அழிப்பு, உளவியல் மற்றும் உணர்ச்சி ரீதியான துஷ்பிரயோகம், உடல் மற்றும் பாலியல் வன்கொடுமை அனைத்தும் பொதுவான வடிவங்கள். லேசான ஆனால் இன்னும் மிகவும் தீவிரமான குடும்ப வன்முறையில் ஈடுபடுபவர்கள் பாதிக்கப்பட்டவர்களை அச்சுறுத்தலாம். அல்லது வாய்மொழியாகப் பேசுவது மற்றும் கீழத்தரமான மொழிகளைப் பயன்படுத்தலாம், அவர்களைப் பகிரங்கமாக அவமானப்படுத்த முயற்சி செய்யலாம் அல்லது சூழ்ச்சித்தனமான மன விளையாட்டுகளை விளையாடலாம். துஷ்பிரயோகம் செய்பவர்கள் மிகவும் பொறாமையுடன் செயல்படலாம், மேலும் பாதிக்கப்பட்டவர்கள் குடும்பம் மற்றும் நண்பர்கள் அல்லது வேலை வாய்ப்புகளை அணுகுவதைக் கட்டுப்படுத்தலாம். துஷ்பிரயோகம் மிகவும் தீவிரமானதாக இருக்கலாம், இதனால் பாதிக்கப்பட்டவர் வேலையில் இல்லாததால் அல்லது வேலையில் இருக்கும் போது உற்பத்தித் திறன் குறைவதால் வேலையை இழக்க நேரிடும் அல்லது வேலை செய்வதிலிருந்து தடுக்கப்படுவார். மிகவும் வன்முறையான வடிவத்தில், குடும்ப வன்முறை என்பது உண்மையான உடல் மற்றும் பாலியல் வன்முறை, குழந்தைகளைக் கடத்துதல், செல்லப்பிராணிகளை சித்திரவதை செய்தல் அல்லது கொலை செய்தல் போன்றவற்றை உள்ளடக்கியதாக இருக்கும். சில பாதிக்கப்பட்டவர்கள் தற்கொலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

பலாத்காரம் என்பது கட்டாய பாலியல் செயல்பாடுகளை உள்ளடக்கிய குற்றமாகும், பொதுவாக பாலியல் ஊடுருவல் உட்பட, பாதிக்கப்பட்டவரின் விருப்பத்திற்கு எதிராக. பாலியல் பலாத்காரம் நடந்துகொண்டிருக்கும் குடும்ப வன்முறையின் பின்னணியில் நிகழலாம் (ஒரு பங்குதாரர் அந்த கூட்டாளியின் விருப்பத்திற்கு மாறாக பாலியல் வன்கொடுமை செய்தல், ஆனால் அது தெரிந்தவர்கள் அல்லது அந்நியர்களால் கூட செய்யப்படலாம். குடும்ப வன்முறை மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் ஆகியவை பெண்கள் மீது விகிதாசாரத்தில் கவனம் செலுத்தும் தீவிர சமூகப் பிரச்சினைகளாகும். அமெரிக்க நீதித் துறையின் கூற்றுப்படி, ஆண்டுதோறும் 572,000 பெண்கள் அவர்கள் நெருங்கிப் பழகும் நபர்களால் பாதிக்கப்படுகின்றனர். இதுபோன்ற 49,000 புகார்கள் மட்டுமே ஆண்களால் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த உத்தியோகபூர்வ எண்கள் ஆண்கள் மீதான உண்மையான தாக்குதல்களின் எண்ணிக்கையை தீவிரமாகக் குறைத்து மதிப்பிடக்கூடும், இருப்பினும், அவமானம், மற்றும் கேலி, பயம் காரணமாக ஆண்கள் இத்தகைய தாக்குதல்களைப் புகாரளிக்க மாட்டார்கள் என்பது அறியப்படுகிறது.

குறிப்பாக குடும்ப வன்முறை என்றால் என்ன என்று நோக்கும்போது குடும்ப வன்முறை என்பது ஒரு குடும்ப உறுப்பினர் மற்றும் ஒரு குடும்ப உறுப்பினருக்கு எதிராக மேற்கொள்ளும் ஒரு வன்முறை செயல் அல்லது தொடர் வன்முறையை நடவடிக்கையாகும். பெரும்பாலும் குடும்ப வன்முறைகளுக்கு அதிகம் இலக்காவது 75 வீதமான பெண்களாக இருப்பினும் குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட ஆண்களும் உள்ளனர். தேசிய காவல் துறை புள்ளி விபரங்களின் அடிப்படையில் நோக்குகையில் பாதி வன்முறைச் சம்பவங்கள் கணவன் மனைவிக்கிடையேயான வன்முறை ஆகும். அதாவது பெரும்பாலும் கணவன்மார் தங்கள் மனைவிக்கு இழைக்கும் கொடுமைகள் ஆகும். இதில் பாதி குடும்ப உறுப்பினர்களுக்கிடையே நிகழும் வன்முறையாகும். இதில் பெரும்பாலும் ஆண் உறுப்பினர்கள் செய்யும் கொடுமைகள் அதிகமானவையாகும்.

இலங்கையில் குடும்ப வன்முறையின் போக்குகளைப் பார்க்கின்ற போது, கொவிட் 19 ஒரு தொற்றுநோய் மட்டுமல்லாது, குடும்ப வன்முறையையும் அதிகரித்துள்ளது. முதலாவது ஒரு தொற்று நோய் மற்றும் இரண்டாவது பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறை, முடக்கம் மக்களை வீட்டில் அடைத்து வைத்தது. 2019ஆம் ஆண்டில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட பெண்களின் நல்வாழ்வு கணக்கெடுப் பின்படி, குறைந்தபட்சம் 51.6% இலங்கைப் பெண்களில், அவர்களில் 20.4% குடும்ப வன்முறைக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. துரதிர்ஷ்டவசமாக இந்த எண்ணிக்கையானது லொக்டவுன் காலத்தில் மட்டுமே அதிகரித்தது, பெண்கள் தங்கள் குற்றவாளிகளுடன் வீட்டில் அடைத்து வைக்கப்பட்டிருப்பது, வேலை இழப்பால் ஏற்படும் மன அழுத்தம், மதுவுக்கு அடிமையாதல், நிதிச் சிக்கல்களால் ஏற்படும் மன அழுத்தம் எனப் பல்வேறு காரணங்களால். இந்த நிலைமை இன்னும் மோசமாகிவிட்டது, உதவி மையங்கள் திறனை எட்டியதால், பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எந்த உதவியும் இல்லை, கொவிட்டைத் தொடர்ந்து உருவாகும் இத்தகைய வன்முறை தீவைச் சுற்றியுள்ள எண்ணற்ற பெண்களின் வாழ்க்கையை அச்சத்தில் தள்ளியுள்ளது. எனவே பெண்களுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்குவதற்கு மாற்றங்களைச் செய்வது இலங்கைக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பது தெளிவாகிறது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் கூற்றுப்படி, "பெண்களுக்கு எதிரான வன்முறை" பாலின அடிப்படையிலான எந்தவொரு வன்முறையையும் உள்ளடக்கியது. அல்லது தன்னிச்சையான சுதந்திர இழப்புகள், பொது அல்லது தனிப்பட்ட வாழ்வில் நிகழும்"இத்தகைய வன்முறையின் மிகவும் பொதுவான வகை 'குடும்ப வன்முறை' ஆகும். உறவுகளில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான சமத்துவமின்மை, பெண்களுக்கு குறைவான சுதந்திரத்தை வழங்கும் ஆணாதிக்கத்தின் மீதான கடுமையான சமூக விதிமுறைகள், அதிகளவிலான வறுமை, அடிமையாதல் போன்ற காரணிகளால் இத்தகைய வன்முறைக்கான அடிப்படைக் காரணங்கள் உருவாகின்றன. ஆண்களின் தரப்பில் போதைப்பொருள், குடும்பங்களில் வன்முறையைக் கொண்ட குழந்தைப் பருவ அனுபவங்கள், மனநலக் கோளாறுகள் மற்றும் பல காரணங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

இலங்கையில், குடும்ப வன்முறை முதன்மையாக 2005 ஆம் ஆண்டின் குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டத்தால் நிர்வகிக்கப்படுகிறது. பிரிவு 23 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, குடும்ப வன்முறை என்பது, மனைவி, முன்னாள் துணைவி அல்லது இணைந்து வாழும் பங்குதாரர் மற்றவருக்குச் செய்யும் உடல் ரீதியான அல்லது உணர்ச்சி ரீதியான தீங்குகளை உள்ளடக்கியது.

குடும்ப வன்முறை, தங்கள் குழந்தைகளை வளர்ப்பதற்கான பெற்றோரின் திறனைக் கடுமையாகப் பாதிக்கும். துஷ்பிரயோகம் செய்யப்பட்ட தாய்மார்கள் மனச்சோர்வடைந்திருக்கலாம் அல்லது வன்முறையில் ஈடுபடலாம். அவர்கள் உணர்ச்சி ரீதியில் பின்வாங்கலாம் அல்லது உணர்வின்மை, எரிச்சல் அல்லது நம்பிக்கையற்ற உணர்வுகளைக் கொண்டிருக்கலாம். இதன் விளைவாக, தாங்கள் உணர்ச்சிவசப்படாமல் அல்லது தங்கள் குழந்தைகளின் அடிப்படைத் தேவைகளைக் கவனிக்க முடியாத பெற்றோராக இருக்கலாம். அடிக்கும் அப்பாக்கள் குறைந்த பாசம் கொண்டவர்களாகவும், தங்கள் குழந்தைகளைக் கையாள்வதில் பகுத்தறிவு குறைந்தவர்களாகவும் இருப்பார்கள். "அடிக்கப்பட்ட பெண்கள் அதிக தண்டனையான குழந்தை வளர்ப்பு உத்திகளைப் பயன்படுத்தலாம் அல்லது தங்கள் குழந்தைகளிடம் ஆக்கிரமிப்பை வெளிப்படுத்தலாம்" என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

குழந்தைகள் தங்கள் பெற்றோரையோ அல்லது பராமரிப்பாளர்களையோ சார்ந்து இருக்க முடியாதபோது உணர்ச்சிபூர்வமான ஆதரவு மற்றும் நடைமுறை ஆதரவிற்காக அவர்களின் வளர்ச்சி தீவிரமாக தாமதமாகலாம் அல்லது கடுமையான சந்தர்ப்பங்களில் நிரந்தரமாக சிதைந்து விடும்.

குழந்தைப் பருவம் என்பது சமூகத் திறன்கள் மற்றும் மனப்பான்மைகளைக் கற்றுக் கொள்ளும் காலம் என்பதால், குடும்ப வன்முறை அவர்களின் வாழ்நாள் முழுவதும் உறவுகளை உருவாக்கும் திறனைப் பாதிக்கலாம். பெண்கள் மீதான குடும்ப வன்முறையின் நீண்டகால விளைவுகள் கவலை, நாட்பட்ட மனச்சோர்வு, நாட்பட்ட வலி, இறப்பு, நீரிழப்பு, விலகல் நிலைகள், போதைப்பொருள் மற்றும் மது சார்பு, உண்ணும் கோளாறுகள் ,தூண்டுதலுக்கான உணர்ச்சி, சுகாதார பிரச்சினைகள், ஊட்டச்சத்து குறைபாடு, பீதி தாக்குதல்கள், மருத்துவ பரிந்துரைகளை மோசமாக பின்பற்றுதல், வறுமை, மீண்டும் மீண்டும் சுய காயம், சுய புறக்கணிப்பு, பாலியல் செயலிழப்பு, தூக்கக் கோளாறுகள், சிதைந்த குடும்ப உறவுகள், தற்கொலை முயற்சிகள் என்பனவாக அமையும்.

குடும்ப வன்முறைகளினால் பாதிக்கப்பட்ட பெரும்பாலானோர் அது தொடர்பாக புகார் செய்வதில்லை. தங்கள் குடும்பத்தில் நிகழ்வதை வெளிப்படையாக பேசுவதும் இல்லை. தாங்கள் வன்முறைக்கு இலக்காகின்றோம் என்ற உண்மையை அவர்கள் நிராகரிக்க கூட முடியும். ஒருவர் தனக்கு இழைக்கப்படும் கொடுமைகளை வெளிப்படையாக கூறாத வரைக்கும் குடும்ப வன்முறையை இனம் காண்பது கடினமானதாகும். இருப்பினும் சில அறிகுறிகள் குடும்ப வன்முறை நிகழ்கிறது என்பதை உங்களுக்கு உணர்த்தலாம். கை, கால், முகத்தில் தெளிவாகத் தெரியும் காயங்களை குறிப்பிடலாம். துன்புறுத்தியவர் மீது பயம் ஏற்படுதல், காயம் தொடர்பாக வினவினால் பாதிக்கப்பட்டவர் நழுவிச் செல்லுதல், தன்னுடைய காயங்களுக்கு தானே காரணம் என்று கூறுதல் அல்லது காயத்தை பெரிதுபடுத்தாமல் இருத்தல், பாதிக்கப்பட்ட சிலர் குடும்பத்தால் நிகழும் வாக்குவாதங்களை எப்படி மக்கள் கையாளுகின்றனர் என்று கேட்டறிய முற்படுவர். அதனால் குடும்பத்தில் அது நிகழ்கிறது என்பதை வெளிக்காட்டிக் கொள்ள மாட்டார்கள்.

குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களை நாம் இனம் கண்ட பின்னர் அவர்களுக்கான ஆதரவை கொடுப்பது மிகவும் முக்கியமானதாகும். இந்த வகையில் குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களைக் கையாளும் போது முதலில் அவர்களை நம்புவது முக்கியமானதாகும். பின் அவர்களுக்கு நம்பிக்கை ஊட்ட அவர்களின் விருப்பங்களை கலந்தாலோசிக்க வேண்டும். வன்முறையினால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு என்ன செய்ய முடியும். அதற்கான ஆதரவை எவ்வாறு வழங்க முடியும் என்பதை நோக்கினால், பாதிக்கப்பட்டவர்கள் உங்களிடம் தனியாக பேசுவதற்கு அமைதியான இடத்தை தேர்ந்தெடுத்தல், பாதிக்கப்படுபவரின் பாதுகாப்பை உறுதி செய்தல், பாதிக்கப்பட்டவர் மீது நம்பிக்கை வைத்து ஆதரவு குழுக்கள் குடும்ப வன்முறை பாதிக்கப்பட்டவரின் தவறு கிடையாது என்பதை அவருக்கு வலியுறுத்துதல், பாதிக்கப்பட்டவர் என்ன செய்ய விரும்புகின்றார் என்று தெரிந்து கொள்ளுங்கள் அவர் அதனை நிறைவேற்ற உதவிகளை செய்து கொடுத்தல், பாதிக்கப்பட்டவர்களுக்கு மதிப்பளித்து அவரின் குடும்ப வன்முறையை இரகசியமாக பாதுகாத்தல், பாதிக்கப்பட்டவர் எங்கு எப்படி உதவியினை நாடலாம் மற்றும் அதற்கான உள்ளூர் செய்திகள் பற்றிய தகவல்களை குறிப்பிடுதல், பாதிக்கப்பட்டவர்களின் பின்புலங்களை ஆராய்ந்து வைத்துக் கொள்ள வேண்டும்.



த. விதுஷன்...
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# முதிர்ந்த அரசியல் புரிதல் கொண்ட தலைமைக்கு வாய்ப்பளியுங்கள்

## பாராளுமன்றத்தில் இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய

75 வருடங்களாக ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் எடுத்த தவறான தீர்மானங்களினால் நாடு நெருக்கடியான நிலைக்கு வந்துள்ளதாகவும், அந்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் அந்த அரசாங்கங்களும் மக்களால் நியமிக்கப்பட்டதாகவும் ஆகவே, இத்தருணத்தில் தொலை நோக்குப் பார்வையும் முதிர்ந்த அரசியல் புரிதலும் கொண்ட தலைமைக்கு வாய்ப்பளிக்கும் பொறுப்பும் மக்கள் சார்பாகவே உள்ளது என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடு பாரிய நெருக்கடிக்கு உள்ளாகியிருந்த கடந்த காலப்பகுதியில் அந்த நிலைமைகளை அனுபவித்தவர் என்ற வகையிலும் அரச வருமானத்தை அதிகரிப்பதற்காக பாராளுமன்ற சட்டமூலங்களை கொண்டு வந்த நிதிய மைச்சர் என்ற வகையிலும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நடைபெறும் பாராளுமன்றக் கூட்டத்தின் இறுதி நாளான இன்று, பல விடயங்கள் முன்வைக்கப்பட வேண்டியுள்ளதாக தெரிவித்த அமைச்சர், அண்மைய பொருளாதார நெருக்கடியில், இலங்கையின் நிலைமை மிகவும் மோசமாக இருந்ததையும் நாடு பொருளாதார ரீதியாகவும் ஜனநாயக ரீதியாகவும் பாரிய பிரச்சி



னையில் உள்ளதை சுட்டிக்காட்டி, அதை சரி செய்யக் கூடிய ஒருவர் இருந்தால், இந்த நாட்டை கையகப் படுத்துமாறு முன்னாள் ஜனாதிபதி கோரிக்கை விடுத்தார் என்றும் சுட்டிக்காட்டினார். இலங்கையின் நிலைமை மிகவும் மோசமானதாகவும், இலங்கையைக் காப்பாற்றுவது என்பது யாராலும் முடியாத மிகப் பெரிய சவாலாக உள்ளதால், இந்தப் பிரேரணை கேலிக்கூத்தான பிரேரணை எனவும், அப்போது பிரதான எதிர்க்கட்சியின் தீர்மானம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

# நாத்தாண்டிய பிரதேச முக்கியஸ்தர்கள் சுயேச்சை வேட்பாளர் ரணிலுக்கு ஆதரவு

( நீர்கொழும்பு தினகரன் நிருபர் )

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பூரண ஆதரவை வழங்க நாத்தாண்டிய பிரதேச ஐ.தே.க ஆதரவாளர்கள் முன்வந்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் இதன்போது குறிப்பிட்டதாவது, அரச ஊழியர்களுக்கான 10 ஆயிரம் ரூபாய் வழங்குவதற்கான நடவடிக்கையை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 2023 வரவு செலவுத் திட்டத்தில் மேற்கொண்டார். இதனால் எமது பிரதேச அரச ஊழியர்களும் நன்மை அடைந்தனர்.

புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் அரச அலுவல்கள் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சருமான அசோக பிரியந்த, ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவையே ஆதரிக்கின்றார் . அவர்களுடைய ஆதரவாளர்களும் எம்மோடு இணைந்துள்ளனர்.

எமது இலங்கை தேசத்தை செழிப்பான நாடாக உருவாக்கும் திட்டங்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமே உள்ளன. எதிர்வரும் 2025ஆம் ஆண்டு முதல் இலங்கை பொருளாதார வளர்ச்சி அடைந்து வரும் நாடாக உருவாக வேண்டுமானால் நாம் ரணில் விக்கிரமசிங்கவையே ஆதரிக்க வேண்டும். எமது நாட்டு மக்கள் மிகவும் பிரச்சினைகளுக்கு உட்பட்டு இருந்தபோது மக்களின் அடிப்படையான தேவைகளை உணர்ந்து அவற்றை உரிய முறையில் தீர்த்து வைக்க முன் வந்து பாடுபட்டவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே.

சமையல் எரிவாயு தட்டுப்பாடு, டீசல், பெற்றோல் மற்றும் மண்ணெண்ணெய் தட்டுப்பாடு ஆகியவை எமது நாட்டு மக்களின் வாழ்க்கையையே பாதித்து இருந்தது. இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிகவும் தைரியமாக முன்வந்து மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைத்தார். நாட்டு மக்களின் ஆதரவு என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கே இருப்பதாகவும் அவர்கள் கருத்து தெரிவித்தனர்.





ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து அட்டாளைச்சைனை பிரதேசத்தில் ஐ.தே.கட்சியின் பொத்துவில் தொகுதி பிரதம அமைப்பாளர் யூ.கே.ஆதம்லெப்பை வீடு வீடாகச்சென்று பிரசாரத்தில் ஈடுபடுவதை படத்தில் காணலாம்.
படம் ( பாலமுனை தினகரன் நிருபர்

## மலேசியாவில் நடைபெறும்

# 64 ஆவது சர்வதேச கிராஅத் போட்டிக்கு இலங்கையிலிருந்து இருவர் தெரிவு

மலேசியாவில் நடைபெறும் 64 ஆவது சர்வதேச கிராஅத் போட்டிக்காக இலங்கையிலிருந்து இருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த போட்டியில் ஆண்கள் பிரிவில் கண்டி, தஸ்கர அல் ஹக்கானிய்யா அரபுக் கல்லூரியிலிருந்து அஷ்ஷெய்க் காரி சுஹைல் முஹ்ஸின் (ஹக்கானி) மற்றும் பெண்கள் பிரிவில் வெல்லம்பிட்டிய மத்ரஸதுல் ஹுதாவிலிருந்து பாத்திமா ஹஸீபா நுஹ்மான் ஆகிய இருவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான முதல் சுற்று, இணைய (Online) வழியாக நடைபெற்றது. இதில் 70 இற்கும் மேற்பட்ட நாடுகள் கலந்து கொண்டன. அதிலிருந்து 25 நாடுகள் இறுதிச் சுற்றுக்குத் தெரிவாகின.



மேலும் இறுதி சுற்றானது மலேசியாவில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 5 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இலங்கையிலிருந்து இறுதிச் சுற்றுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள குறித்த இரு போட்டியாளர்களையும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம்.நவாஸ் திணைக்களத்துக்கு வரவழைத்து, அவர்களுக்கான ஆவணங்களை உத்தியோகபூர்வமாகக் கையளித்து வாழ்த்துக்கள் கூறி அனுப்பி வைத்தார்.

போட்டியாளர்கள் இலங்கையில் இருந்து எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி புதன்கிழமை மலேசியாவுக்குச் செல்லவுள்ளனர்.
(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

# அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை; க.பொ.த உயர்தரப் பிரிவு தொழில்நுட்ப பீட மாணவர்களின் இருநாள் செயற்பாட்டு முகாம்

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் கல்வி பயிலும் க.பொ.த உயர்தரப் பிரிவு இறுதியாண்டு தொழில்நுட்ப பீட மாணவர்களின் செயற்பாட்டு பயிற்சி முகாம் வெற்றிகரமாக நிறைவுபெற்றது. இரண்டு நாட்கள் நடைபெற்ற இம் முகாமுக்கு அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலக கல்வி அபிவிருத்திப் பிரிவு அனுசரணை

வழங்கியது.

கல்லூரி அதிபர் ஏ.எல்.பாயிஸ் தலைமையில் நடைபெற்ற அங்குரார்ப்பண நிகழ்வில், அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.எம். றஹ்மத்துல்லாஹ், தென்கிழக்குப் பல்கலைக்கழக பதில் உபவேந்தரும், தொழில்நுட்ப பீடத்தின் பீடாதிபதியுமான கலாநிதி யூ.எல்.ஏ.மஜீட், அக்கரைப்பற்று கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் எம்.எம்.சித்தி

பாத்திமா, ஏ.எல்.அப்துல் மஜீட், பீ.ஜிஹானா, எம்.மர்துரி ஆகியோர் அதிதிகளாகக் கலந்து சிறப்பித்தனர்.



தொழில்நுட்ப பீடத்தில் கல்வி பெற்று, இம்முறை க.பொ.த உயர்தரப்ப ரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் அடைவை மேம்படுத்தும் நோக்கில் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட இம்முகாமை அக்கரைப்பற்று, கல்முனை, சம்மாந்துறை, திருக்கோவில் கல்வி வலய உயர்தரப் பிரிவு மாணவர்கள் நேரடியாக சமுகமளித்து பார்வையிட்டனர்.

தாங்கள் வகுப்பறையில் பாடரீதியாக கற்றதை, தொழில்நுட்ப பீட மாணவர்கள் நடைமுறையில் சாத்தியப்படுத்தி அதிதிகளை வியப்பில் ஆழ்த்தினர்.

முகாமில் கலந்துகொண்ட மாணவர்களையும், அவர்களைப் பயிற்றுவித்த அதிபர், ஆசிரியர்களையும், உறுதுணையாகத் தொழிற்பட்ட பெற்றார்களையும் அதிதிகள் வெகுவாகப் பாராட்டினர்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் தபால்மூல வாக்களிப்பு ஆரம்பம்



(மட்டக்களப்பு குறூப் நிருபர் )

எதிர்வரும் 21ம் திகதி நடைபெறவுள்ள 9வது ஜனாதிபதி தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகவும் அமைதியான முறையில் ஆரம்பமானது.

இம்மாவட்டத்தில் 13,116 பேர் தபால்மூலம் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளதாக மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி திருமதி ஜே.ஜே.முரளீதரன் தெரிவித்தார்.

நேற்று மட்டக்களப்பு தலைமைய பொலிஸ் நிலையம் உட்பட மாவட்டத்தில் இடங்களில் பொலிசார் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், தேர்தல் திணைக்கள உத்தியோகத்தர்கள் வாக்களித்தனர். இன்றும் தபால்மூல வாக்களிப்பு இடம்பெறவுள்ளது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன் 2024.09.04
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5586 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.23,801,912.00
ஆங்கில எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 8 1 3 9 2 4

அத சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 161 — ஆங்கில எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 3 9 2 4

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3828 — சீட்டிழுப்பு திகதி 2024.09.04 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.61,095,308.80
ஆங்கில எழுத்து V — வெற்றி இலக்கங்கள் 04 18 36 66 — விசேட எழுத்து V — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 88259

Mega POWER — சீட்டிழுப்பு இலக்கம் 1934 — 2024.09.04 — 76291 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 445,001,754.00
ஆங்கில எழுத்து V — சுப்பர் இலக்கம் 08 — வெற்றி இலக்கங்கள் 06 32 33 67
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP — திகதி 2024.09.04 — சீட்டிழுப்பு இலக்கம் 412
ஆங்கில எழுத்து J — வெற்றி இலக்கங்கள் 0 5 3 3 4 0 — L7 எழுத்து J
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 35,175,811.28

ராசி சுப பலன் — திகதி 2024.09.04 — சீட்டிழுப்பு இலக்கம் 895 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.4,153,986.40
வெற்றி இலக்கினம் தனுசு — வெற்றி இலக்கங்கள் 21 22 38 43 — தனயோக இலக்கம் 49282 — நாளுக்கான விதி எண் 02

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1616 — 2024.09.04 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.110,409,914.64
ஆங்கில எழுத்து P — வெற்றி இலக்கங்கள் 10 37 38 40 — விசேட எழுத்து P — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 55743

# அறிவிப்பு

## 2025 ஆம் ஆண்டுக்கான ஹஜ் யாத்திரை (ஹிஜ்ரி 1446)

2025 ஆம் ஆண்டில் ஹஜ் யாத்திரையை மேற்கொள்ள விரும்பும் இலங்கையர்கள் சவூதி அரேபியா அரசாங்கத்தின் ஹஜ் மற்றும் உம்ரா அமைச்சினால் வகுக்கப்பட்ட காலக்கெடுவைப் பின்பற்றுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**1. செப்டெம்பர் 04, 2024** -
I. ஆயத்த கூட்டங்களின் ஆரம்பம்.
II. சேவை வழங்குநர்களுடன் கூட்டங்களைத் தொடங்குதல் (தங்குமிட வசதி மற்றும் கேட்டரிங்)
III. விமான கேரியர்களை தெரிவு செய்தல்.

**2. ஒக்டோபர் 23, 2024** -
I. ஆயத்த கூட்டங்களின் முடிவு.
II. சேவை வழங்கும் நிறுவனங்களுடனான சேவைக்கான ஒப்பந்த கட்டத்தின் ஆரம்பம்.
III. புனிதத் தலங்களில் இடங்களை (மண்டலம்) ஒதுக்குதல்.

**3. ஜனவரி 13, 2025** -
I. ஹஜ் மாநாடு மற்றும் கண்காட்சி.
II. இலங்கை அரசுக்கும் சவுதி அரேபியா அரசுக்கும் இடையே ஹஜ் ஒப்பந்தம் கைச்சாத்திடல்.

**4. பெப்ரவரி 14, 2025** - I. சேவைகளுக்கான ஒப்பந்த கட்டத்தை முடித்தல்.

**5. பெப்ரவரி 19, 2025** - I. ஹஜ் விசா வழங்கும் கட்டத்தின் ஆரம்பம்.

**6. ஏப்ரல் 18, 2025** - I. ஹஜ் விசா வழங்கும் கட்டத்தை நிறைவு செய்தல்.

**7. ஏப்ரல் 29, 2025** - I. மக்கா, சவுதி அரேபியாவில் யாத்திரிகர்களின் வருகையின் ஆரம்பம்.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் ஹஜ் உம்ரா கமிட்டி ஆகியன பின்வருமாறு தீர்மானித்துள்ளன.

ஹஜ் யாத்திரை 2025 இற்கான அனைத்து ஹஜ் யாத்ரீகர்கள் மற்றும் பதிவு செய்யப்பட்ட ஹஜ் பயண முகவர்கள் பின்வரும் ஏற்பாடுகளை கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்:

01. 2025 ஆம் ஆண்டிற்கான ஹஜ் யாத்திரிகர்களின் பதிவு 2024 ஆம் ஆண்டு செப்டெம்பர் 10 ஆம் திகதி ஆரம்பமாகும்.
02. விண்ணப்பத்தின் போது மீளளிக்கப்படாத உறுதிப்படுத்தல் கட்டணமாக ரூ.5,000/- செலுத்துதல் (ஹஜ் யாத்திரிகர்களால் செலுத்தப்படும்).
03. ஒரு யாத்திரிகருக்கான நிர்வாகக் கட்டணம் ரூ.4,000/- வீதம் செலுத்துதல் (பதிவு செய்யப்பட்ட ஹஜ் பயண முகவரால் செலுத்தப்படும்).
04. ஒரு யாத்திரிகருக்கான மீளளிக்கப்படும் உத்தரவாதக் கட்டணம் SAR.68 வீதம் செலுத்துதல் (பதிவு செய்யப்பட்ட ஹஜ் பயண முகவரால் செலுத்தப்படும்).

ஹஜ் விண்ணப்பதாரர் தமது விவரங்களை https://muslimaffairs.info/hajjapplications_25/create எனும் இணையதள இணைப்பினூடாக பதிவு செய்வது தமது ஹஜ் பயணத்திற்கான உறுதிப்படுத்தலை பெற்றுக்கொள்ளலாம். 2025 ஆம் ஆண்டுக்கான ஹஜ் யாத்திரைக்கு முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை எனும் அடிப்படையில் ஹஜ் விண்ணப்பதாரர் உறுதி செய்யப்படுவார்.

அனைத்து யாத்திரிகர்களும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் பதிவு செய்யப்பட்ட ஹஜ் பயண முகவர்களுக்கு மாத்திரமே தங்கள் கடவுச்சீட்டைச் சமர்ப்பித்து பணம் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். பதிவு செய்யப்பட்ட ஹஜ் பயண முகவர்களின் விவரங்கள் 2024 ஒக்டோபர் முதலாம் வாரம் வெளியிடப்படும்.

**பணிப்பாளர்**
**முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்**

**தலைவர்**
**இலங்கை ஹஜ் உம்ரா கமிட்டி**

**இல.180, டி.பீ. ஜாயா மாவத்தை, கொழும்பு-10.**
**தொலைபேசி : 0112667909 / 0112667901**
**தொலைநகல்: director@muslimaffairs.gov.lk / chairmanhajj@gmail.com**

# இலவச புலமைப் பரிசில் பரீட்சை கருத்தரங்கு

இலவச புலமைப் பரிசில் பரீட்சை கருத்தரங்கு தந்தை செல்வா நற்பணி மன்றமும் கொட்டாஞ்சேனை கிராண்ட் சிடி அரிமா சங்கமும் இணைந்து நடத்தும் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கான இலவச கருத்தரங்கு எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு கிரீன் லேன் பதிரூதீன் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பிரபல சட்டத்தரணி தேவ சேனாதிபதி கலந்து கொள்ளவுள்ளார்.

# உடப்பு கோவில் எண்ணெய்க்காப்பு இன்று

(உடப்பு குறூப் நிருபர்)

வரலாற்று சிறப்பு வாய்ந்த உடப்பு ஸ்ரீருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீபார்த்த சாரதிப் பெருமாள் திரௌபதியம்மன் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் எதிர் வரும் (2024.09.08)ந்திகதி ஞாயிற்றுக்கிழமை பஞ்சமி திதியும் சுவாதி நட்சத்திரமும் ,சித்த யோகமும் கூடிய காலை 07.14மணி முதல்08.32 மணிவரையுள்ள சுப வேளையில் நடைபெற திருவருள் கூடியுள்ளது. இதன் முதல் நிகழ்வாக அம்பாளுக்கு எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வுகள் இன்று (06.09.2024) வெள்ளிக்கிழமை காலை 08.30 மணி முதல் நாளை (07.09.2024) சனிக்கிழமை பி.ப.3.00 மணி வரையும் நடைபெறவுள்ளது.

# இன்றைய பலன்கள்

(06.09.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
சொந்தத் தொழிலில் லாபம் அதிகரிக்கும். அதிகமான மூலப்பொருட்களை வாங்கி இருப்பில் வைப்பது வியாபாரத்துக்கு வழிவகுக்கும்.

**ரிஷபம் :**
சிலருக்கு வெளியூர் மாற்றம் சம்பள உயர்வு கிடைக்கக் கூடும். சொந்தத் தொழிலில் பணம் சம்பந்தமான பொறுப்பில் உள்ளவர்கள் கவனமாக இருப்பது அவசியம்.

**மிதுனம்:**
சொந்தத் தொழிலில் வாடிக்கையாளர்களிடமிருந்து நிலுவைத் தொகை வசூல் ஆகும். கூட்டு தொழில் வியாபாரம் நன்கு நடைபெறும்.

**கடகம்:**
தொழில் ரீதியாக வெளியூர் பயணம் மேற்கொள்ள நேரலாம். சொந்த தொழில் செய்பவர்கள் பணிகளில் அக்கறை செலுத்தி லாபத்தை பெருக்குவர்.

**சிம்மம்:**
சகப் பணியாளர்களிடம் சுமூகமாக நடந்து கொள்ளுங்கள். சொந்தத் தொழிலில் அலைச்சலுக்கு பின் வருமானம் கிடைக்கும்.

**கன்னி:**
சக பணியாளர்கள் மற்றும் நண்பர்கள் விஷயத்தில் அனுசரித்து போவது பிரச்சனைகளை தவிர்க்கும்.

**துலாம்:**
சொந்தத் தொழிலில் அதிக அலைச்சலை சந்திக்க நேரிடும். கூட்டு தொழில் செய்பவர்கள் பணிகளில் அதிக கவனம் செலுத்தினால் லாபம் பெருகும்.

**விருச்சிகம்:**
வாடிக்கையாளர்களின் தேவையை பூர்த்தி செய்வீர்கள். குடும்பத்தில் சிறு சிறு பிரச்சனைகளை சந்திக்க நேரலாம்.

**தனுசு:**
சிலருக்கு அலுவலகத்தின் மூலம் பெற வேண்டிய கடன் தொகை கைக்கு வந்து சேரும். சொந்தத் தொழில் செய்பவர்கள் மேன்மையான மாற்றத்தை அடைவார்.

**மகரம்:**
சொந்தத் தொழில் பணியாளர்களை ஊக்கப்படுத்தி வாடிக்கையாளர்களுக்கான தேவையை எளிதில் நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:**
கூட்டுத் தொழில் செய்பவர்கள் வியாபாரத்தில் கவனமாக இருங்கள். கூட்டாளிகளின் தலையீடு காரணமாக பணிகள் பாதிக்கும்.

**மீனம்:**
சொந்தத் தொழில் வியாபாரம் நன்கு நடைபெற்று எதிர்பார்க்கும் லாபம் கிடைக்கும். புதிய தொழில் முயற்சிகளில் கவனம் செலுத்துவீர்கள்.

## பொருளாதாரத்தை...

**மத்துகமையிலிருந்து லோரன்ஸ் செல்வநாயகம்**

இது அணி சேர்க்கும் தேர்தலல்ல, ஜனாதிபதி தேர்தல் மட்டுமே. அணி சேர்க்கும் தேர்தல் பொதுத் தேர்தலே என்பதை எமது அணி ('டீம்') என்ன என கேட்பவர்களுக்கு கூறிக்கொள்ள விரும்புவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அணி பற்றி பேசுபவர்கள் இரண்டு அணிகளாக பிளவு பட்டு செயல்படுவதாக தெரிவித்த ஜனாதிபதி, அவை பிளவுபட்டு காணப்படுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். 'நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு மேலும் மூன்று வருடங்கள் அவசியமென்றும் ஆரம்பித்துள்ள பயணத்தை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு நாட்டு மக்களின் ஆணை அவசியம் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தாம் பல்வேறு பதவிகளையும் வகித்தாயிற்று என குறிப்பிட்ட ஜனாதிபதி, இம்முறை தாம் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது நாட்டு மக்களுக்காகவே என்றும் தெரிவித்ததுடன் நாட்டின் வெற்றிக்காக நாட்டு மக்கள் இம்முறை தேர்தலில் அதற்கான ஆணையை தமக்கு வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இயலும் ஸ்ரீலங்கா" ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் மாபெரும் மக்கள் பேரணிக் கூட்டம் நேற்று மத்துகம நகரில் நடைபெற்றது.இங்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார். கூட்டத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி,

எது எமது 'டீம்' எது என கேள்வி கேட்கின்றனர். இதில் டீம் எதுவும் கிடையாது. இது ஜனாதிபதித் தேர்தல். யார் ஜனாதிபதி என்பதை தெரிவு செய்வதே இப்போதைய தேவை. டீமை தெரிவு செய்வது நான். நாட்டின் அரசியலமைப்பின்படி பாராளுமன்றத்துக்கு 225 பேரை தெரிவு செய்ய வேண்டும். அவர்களே பிரதமரை தெரிவு செய்வர். ஊழல் மோசடி இல்லாத சிறந்த வேலைத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு திறமையான டீம் எம்மிடமுள்ளது என்பதை நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

சஜித் பிரேமதாசவின் கொள்கை விளக்க விஞ்ஞாபனம் முழுமையற்றது மட்டுமின்றி அர்த்தமற்றது. ஒன்றுக்கொன்று முரணானது.ஒன்றல்ல இரண்டு டீம்களின் கொள்கைகள் காணப்படுகின்றன. அதில் ஒன்று ஒன்பது மாதக் குழந்தை போன்றது.

அதில் ஜீ. எல் பீரிஸும் நாலக கொடஹேவாவும் அதில் இடம்பெறுகின்றனர்.

மற்றது 10 மாதக் குழந்தை போன்றது அதில் ஹர்ஷ டி சில்வாவும் கபீர் ஹாசிமும் உள்ளனர் ஒரே அணியில் இவ்வாறான பிளவுகள் காணப்படுகின்றன.

நாம் நாட்டின் எதிர்காலத்தையும் மக்களுக்கு நிவாரணம் மற்றும் தொழில் வாய்ப்புகள், வரிக் குறைப்பு ஆகியவற்றுக்கு முக்கியத்துவமளித்து எமது கொள்கை விஞ்ஞாபனத்தை வெளியிட்டுள்ளோம்.

கடந்த இரண்டு வருடங்கள் தொடர்பில் சிந்திக்கும்போது. இந்த நாட்டில் தேர்தல் நடத்த முடியுமா என்ற நிலையே காணப்பட்டது. அது மட்டுமன்றி நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற முடியுமா? எவ்வாறு முன்னேற்றுவது?என்ற கேள்வியே எழுந்தது.

தற்போது பொருளாதாரம் இயல்பு நிலைக்கு கொண்டுவரப்பட்டு தேர்தலும் நடத்தப்படுகிறது. நாம் பெரும் சவால்களுக்கு மத்தியில் அர்ப்பணிப்புடன் முன்னெடுத்த வேலைத் திட்டங்களால் இது சாத்தியமாகியுள்ளது.

நான் இந்த நாட்டை தனி ஒரு பாராளுமன்ற உறுப்பினராகவே பொறுப்பேற்றேன். எனக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் பொதுஜன பெரமுன கட்சியினர் ஒத்துழைப்பு வழங்கினர்.

தற்போது நாடு இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது. பாடசாலைகள் இயங்குகின்றன. வைத்தியசாலைகள் உட்பட அனைத்தும் இயங்குகின்றன. நாடு மிக மோசமான நெருக்கடியில் காணப்பட்டபோது நான் இந்த நாட்டை பொறுப்பேற்றேன்.

டொலரின் பெறுமதி வெகுவாக அதிகரித்திருந்தது. பணவீக்கமும் அதிகரித்திருந்தது. நாம் பொருளாதாரத்தை முன்னேற்றி பொருட்களின் விலைகளை தற்போது குறைக்க முடிந்துள்ளது.

முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்களை சாத்தியமாக்க மேலும் மூன்று வருடங்கள் அவசியமாகிறது. இந்தப் பயணம் தொடரப்பட வேண்டும். அதற்கு நாட்டு மக்களின் ஆணை மிக முக்கியமாகும்.

இந்த முறை நான் நாட்டு மக்களாகிய உங்களுக்காகவே தேர்தலில் நிற்கின்றேன். உங்கள் எதிர்காலமே எனக்கு முக்கியம்.

2042 ஆம் ஆண்டு வரையிலான காலத்துக்கு எமக்கு சர்வதேசத்தின் மூலம் 10 பில்லியன் டொலர்கள் கிடைக்கும். சர்வதேச நாணய நிதியம் 3 பில்லியன் அமெரிக்க டொலர்கள், இந்தியா மூன்று பில்லியன் டொலர்கள் அதில் உள்ளடங்குகிறது. நாட்டில் புதிய மாற்றம் மட்டுமன்றி பொருளாதாரத்திலும் புதிய மாற்றம் ஏற்பட்டுள்ளது.

## தேர்தலில் புதிய முகமூடியுடன்...

பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். அவர்கள் புதிய முகமூடியுடன் இந்த நாட்டில் ஒரு புது யுகம் படைக்க வேண்டுமென்றால் ஒரு மாற்றம் வரவேண்டுமென்றால், எங்களுக்கு தாருங்கள் என்று கேட்கிறார்கள். அவர்களுக்கு இந்த நாட்டில் பொருளாதாரம் சமபந்தமாக பேசுவதற்கு இருக்கின்ற ஒரு விடயம் ஊழலை ஒழிப்போம் என்பது மாத்திரம்தான். ஆனால் எப்படி ஒழிக்கப் போகின்றார்கள் என்பதற்கான எந்தவொரு திட்டமுமே கிடையாது. இவர்களுக்கு அனுபவமுள்ள பொருளாதார நிபுணர்களே இல்லை என ரவூப் ஹக்கீம் எம்.பி தெரிவித்தார்.

## புதிய வேலைத்திட்டத்தை...

சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"நாடு புதிதாக ஒன்றை கேட்கிறது. அதற்காக நாம் நிற்கிறோம். வேறு யாரும் வேறு எதையும் முன்வைக்கவில்லை. எமது மூலோபாய திட்டத்தில் மாற்று யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த மாற்றத்தை சிறந்த மாற்றமாக பார்க்குமாறு இலங்கை மக்களை நாம் கேட்டுக்கொள்கிறோம்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அரச, தனியார் துறையினருக்கு...

குழு தெரிவித்துள்ளது. எதிர்வரும் 21ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் தேர்தல்கள் ஆணைக்குழு இவ்வாறு அறிவித்துள்ளது. இந்நிலையில் 40 கிலோமீற்றர் அல்லது அதற்கு குறைந்த தூரத்துக்கு அரை நாள் (1/2)விடுமுறையும், 40 கிலோமீற்றருக்கும் 100 கிலோமீற்றருக்கும் இடைப்பட்ட தூரத்துக்கு ஒருநாள் (1) விடுமுறையும், 100 கிலோமீற்றருக்கும் 150 கிலோமீற்றருக்கும் இடைப்பட்ட தூரத்துக்கு ஒன்றரை (11/2) நாள் விடுமுறையும், 150 கிலோமீற்றருக்கு மேற்பட்ட தூரத்துக்கு இரண்டு நாள் விடுமுறையும் வழங்குமாறு, தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## அரச ஊழியரின் சம்பள உயர்வு...

ஒதுக்கப்பட்ட தொகை தொடர்பான தரவுகள் அடுத்த மாதம் அச்சிடப்பட்டு வெளியிடப்படவுள்ள வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டு ஆவணத்தில் காண முடியுமென்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். எனவே அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் அரசியல் வாக்குறுதி தேர்தல் விஞ்ஞாபனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை உடனடியாக வாபஸ் பெறுமாறு எதிர்க் கட்சிகளிடம் கோரிக்கை விடுப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## வீடு வீடாக சென்று தேர்தல்...

பொலிஸார் நடமாடும் ரோந்து பணியை முன்னெடுக்க வேண்டுமென தெரிவித்த தேர்தல்கள் ஆணைக்குழு, குறிப்பிட்ட சில அரசியல் கட்சிகளை சேர்ந்தவர்கள் வீடு வீடாக சென்று வருகின்றமை தொடர்பாக தமக்கு ஏராளமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்தது. இவ்வாறான செயல்கள் சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலுக்கு இடையூறாக இருப்பதாகவும், தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டது.

சட்டவிரோதமான முறையில் நடத்தப்படும் தேர்தல் அலுவலகங்கள் தொடர்பாக சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்துமாறும் பொலிஸாருக்கு தேர்தல்கள் ஆணைக்குழு பணித்துள்ளது.

## UNP யுடன் ஐ.ம.சக்தி...

தெரிவித்துள்ளார். இச்சந்திப்பில் மேலும் தெரிவித்துள்ள அவர்,

"நாட்டை கட்டியெழுப்ப சரியான நோக்கு, வேலைத்திட்டம், குழு என்பன அவசியமாகும். அந்த சரியான நோக்கு, வேலைத்திட்டம், சிறந்த குழு, என்பன ஐக்கிய மக்கள் கூட்டணியில் காணப்படுகின்றன. அத்தோடு கீழ் மட்டத்தில் உள்ளவர்களின் எதிர்பார்புகளை நிறைவேற்றுபவர்களை ஆட்சியில் அமர்த்துகின்ற யுகத்தை உருவாக்க மக்கள் இந்தமுறை ஜனாதிபதி தேர்தலில் செயற்பட வேண்டும். இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் குழுவும் சஜித் பிரேமதாசவின் குழுவும் ஒன்றாக இணைவதாக செய்திகள் பரப்பப்படுகின்றன. ஐக்கிய மக்கள் சக்தி என்பது ஐக்கிய தேசியக் கட்சியின் வடிவமாகும். ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவின் ஏகமனதான தீர்ப்பின் அடிப்படையிலேயே ஐக்கிய மக்கள் சக்தி உருவாக்கப்பட்டது. நாம் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் மிகவும் கடினமான போராட்டங்களை பல வருடங்களாக முன்னெடுத்தோம். போராட்டத்தின் முடிவாகவே ஐக்கிய மக்கள் சக்தி உருவெடுத்தது" எனத் தெரிவித்துள்ளார்.

## நான் ஜனாதிபதியானதும்...

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ள போது,

"காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினைக்கு நிச்சயமாக பதில் வழங்கியேயாக வேண்டும். தொடர்ந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக ஆணைக் குழுக்களை நியமிப்பதில் அர்த்தமில்லை. ஆகவே இதற்கு பதில் வழங்க வேண்டும். பதில் வழங்க நான் தயாராக இருக்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

## தமிழரசு கட்சியுடனேயே...

தெரிவித்துள்ளார். 'நமக்காக நாம்' என்ற தேர்தல் பிரசார பணிக்காக வவுனியாவுக்கு பயணம் மேற்கொண்டிருந்த போது அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் தொடர்ந்து தெரிவித்த அவர்,

மக்கள் நல்ல உத்வேகத்துடன் இருக்கின்றனர். பல துன்பங்களை சந்தித்திருக்கின்றோம். இது புள்ளடி போடும் ஒரு போராட்டம். அனைவரும் இந்த பணியை உறுதியுடன் செய்ய வேண்டும்.

எனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் மீனவர் பிரச்சினை, விவசாயிகள் பிரச்சினை உள்ளடக்கப்பட்டுள்ளன. அது பிரதி எடுக்கப்படும் போது தற்செயலாகவே விடுபட்டுள்ளது. அந்த விடயங்கள் இறுதி பிரசுரத்தில் நிச்சயம் உள்ளடக்கப்படும்" எனத் தெரிவித்துள்ளார்.

## கல்வியியல் கல்லூரிகள்...

நாட்டிலுள்ள 19 கல்வியியல் கல்லூரிகளையும் இணைத்து கல்வி பல்கலைக்கழகம் அமைப்பதற்கான இறுதி வரைவு சட்ட மாஅதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதற்கான நடவடிக்கைகளை அடுத்த வாரத்திற்குள் நிறைவு செய்த பின்னர் சட்டமூலம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை ஆசிரியர் சேவையின் வினைத்திறன் பரீட்சைக்காக தற்போதுள்ள கட்டக (Modular) முறைக்கு பதிலாக எளிமையான பரீட்சை நடத்தப்படவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். இதற்காக ஆசிரியர் யாப்பில் திருத்தம் செய்து அரச சேவை ஆணைக் குழுவின் இணக்கப்பாட்டுடன் சாதகமான முறையொன்று நடைமுறைப்படுத்தப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேலும் தெரிவித்தார்.

## யாழ்– மதுரைக்கு...

இதற்காக இந்தியாவிலிலுள்ள தனியார் விமான நிறுவனங்களுடன் இலங்கை விமான சேவை கலந்துரையாடியதாகவும், அச்செய்திகள் தெரிவிக்கின்றன.

மதுரைக்கும் கொழும்புக்குமிடையே முதல் சர்வதேச விமான சேவை கடந்த செப்டெம்பர் 2012 இல் நடைபெற்றது. தற்போது மதுரையிலிருந்து கொழும்புக்கு நேரடி விமான சேவையை இன்டிகோ ஏயார்லைன்ஸ் மற்றும் ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் முன்னெடுத்து வருகிறது.

இவ்வாறிருக்க செப்டெம்பர் முதலாம் திகதியிலிருந்து இன்டிகோ ஏயார்லைன்ஸ் நிறுவனம் சென்னையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு தினசரி விமான சேவையை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பல்கலை வெட்டுப்புள்ளி...

மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. மேலும் குறித்த நடவடிக்கைகள் இறுதிக்கட்ட பணியில் உள்ளதாகவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

## ஐ.தே.கவின் 78ஆவது...

கட்சியின் பிரதி தலைவர் ருவான் விஜேவர்த்தன உள்ளிட்ட அதிகாரிகள் ஏற்பாடுகளை செய்துள்ளனர்.

## நாட்டை பலியாக்க...

நோக்கில் 'வெற்றி பெறும் நாட்டுக்கு துணிச்சலான இணைவு' என்ற தொனிப்பொருளில், நாட்டின் பரந்துபட்ட அரசியல் கூட்டமைப்பாக பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணியின் ஆரம்ப நிகழ்வு நேற்று (05) பத்தரமுல்ல வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இப்புதிய பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவராக பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் அதன் செயலாளர் நாயகமாக அமைச்சர் ரமேஷ் பத்திரன ஆகியோர் இணைந்து பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணியின் சின்னமாக 'வெற்றிக் கிண்ணத்தை' வெளியிட்டு வைத்ததுடன், கட்சியில் இணைந்த ஏனைய அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டனர். இதன்படி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மை குழுவை பிரதிநிதித்துவப்படுத்திய அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளர் திஸ்ஸ யாப்பா ஜயவர்தன, ஐக்கிய மக்கள் கட்சி சார்பில் அமைச்சர் டிரான் அலஸ், ஈழமக்கள் ஜனநாயக கட்சி சார்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி சார்பாக சிவநேசதுரை சந்திரகாந்தன், தேசிய காங்கிரஸை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏ.எல்.எம். அதாஉல்லா, ஐக்கிய மக்கள் கட்சி சார்பில் அரவிந்தகுமார், தேசிய ஐக்கிய முன்னணி சார்பில் அசாத் சாலி, தேசப்பற்றுள்ள ஜனதா பலவேகய சார்பில் சுகத் ஹேவாவிதாரண ஆகியோர் புதிய அரசியல் கூட்டணியுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டனர் எனத் தெரிவித்துள்ளார்.

## சமூக வலைத்தளங்கள் ஊடாக...

பிறப்பித்துள்ளார். பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவை பிரதிவாதியாக குறிப்பிட்டு வேலுகுமார் எம்.பி தாக்கல் செய்த வழக்கை பரிசீலித்த பின்னர் இந்த தடை உத்தரவு நேற்று (05) பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அக்குரஸ்ஸவில் ஜக்கிய மக்கள் சக்தியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொதுக்கூட்டத்தில் தயாசிறி ஜயசேகர எம்.பி. தெரிவித்த கருத்தின் அடிப்படையில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், உண்மைக்கு புறம்பான மற்றும் தீங்கிழைக்கும் காரணத்தினால் ஏற்பட்ட தவறான அபிப்பிராயத்துக்காக 500 மில்லியன் ரூபா நட்டஈடு வழங்குமாறும் இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. முறைப்பாட்டில் முன்வைக்கப்பட்ட விடயங்களை பரிசீலித்த மாவட்ட நீதிபதி, தயாசிறி ஜயசேகர எம்.பியின் முகநூல் பக்கத்திலோ அல்லது ஜக்கிய மக்கள் சக்தியின் முகநூல் பக்கம் உள்ளிட்ட சமூக ஊடகங்களிலோ இது தொடர்பான விடயங்களை மேலும் வெளியிடுவதை தடுக்கும் தடை உத்தரவை பிறப்பித்ததுடன், எதிர்வரும் 19ஆம் திகதி இது தொடர்பான விடயங்களை முன்வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

## ஜனாதிபதி ரணிலின்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

நாடு பூராகவும் நடைமுறைப்படுத்தப்பட்ட சில திட்டங்கள் ஹோமாகம பிரதேசத்திலிருந்தே ஆரம்பிக்கப்பட்டன.

கிராமிய பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவை அமைச்சராகவும், பிரதிநிதி அமைச்சராகவும் மிகவும் கஷ்டப் பிரதேசமாக காணப்பட்ட மீகொட பிரதேசத்தில் பொருளாதாரம் மத்திய நிலையம் ஒன்றை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்தேன். பின்னர் தம்புத்தேகம, நுவரெலியா, வெயாங்கொடைட, எம்பிலிபிட்டிய, நாராஹேன்பிட்டி ஆகிய பிரதேசங்களிலும் பொருளாதார மத்திய வலையமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. ஒரு தேசிய பாடசாலை கூட இல்லாத இந்தப் பிரதேசத்தில் ஆசியாவிலேயே மிகப்பெரிய இடைநிலை பாடசாலையான மஹிந்த ராஜபக்ஷ வித்தியாலயத்தை ஆரம்பிக்க கல்வி அமைச்சர் என்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. பாரம்பரிய உயர் கல்வி பாடநெறியில் தொழில்நுட்பவியல் அறிமுகப்படுத்தப்பட்டது.

யுனெஸ்கோ நிர்வாகக் குழுவின் உறுப்பினராக, தெற்காசியாவின் ஆசிரியர்களுக்காக இந்தப் பகுதியில் ஆசிய, ஆசிரியர் பயிற்சி மேம்பாட்டு மையம் நிறுவப்பட்டது. இந்தப் பிரதேசத்தை மையமாக கொண்டு பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடங்கள், அரச நிறுவனங்களின் திணைக்களங்கள் உட்பட பல நிறுவனங்களை நிறுவ முடிந்தது. அதன்படி கடந்த இரண்டு தசாப்தங்களில் இலங்கை முழுவதிலும் அதிகளவான அபிவிருத்தி திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட பிரதேசமாக ஹோமாகம தேர்தல் களம் காணப்படுகின்றது.

சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் பத்தில் ஒரு பங்கு கூட மாற்றப்பட்டால், ஒரு மாதத்துக்கு மேல் இந்த நாட்டை எந்த அரசாங்கமும் நடத்த முடியாது. இந்நிலைமையின் அடிப்படையில் 2048ஆம் ஆண்டுவரை குறிப்பிட்ட வேலைத்திட்டத்துடன் சுயேச்சை வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதுடன் அந்த வேலைத்திட்டம் தொடர்பான திட்டங்கள் பாராளுமன்றத்தில் சட்டமாக ஏற்றுக் கொள்ளப்படும். அந்த வேலைத்திட்டத்தை அடுத்த 5 வருடங்களுக்கு அரசியல் கட்சி நிற பேதமின்றி தொடரும் நோக்கில் மாத்திரம் சுயேச்சை வேட்பாளரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளோம். தவிர இந்த நேரத்தில் அதற்கான தகுதியும் அனுபவமும் உள்ள ஒரே வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டுமே" எனத் தெரிவித்துள்ளார்.

## பாதுகாக்கக்கூடிய ஒரே... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

'இயலும் ஸ்ரீலங்கா' ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் மக்கள் பேரணிக் கூட்டம் நேற்று மத்துகம நகரில் நடைபெற்றது. கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கூட்டத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் இந்த நாடு வரலாற்றில் ஒருபோதும் இல்லாத பாரிய வீழ்ச்சியை எதிர்கொண்டது.யுத்த காலத்தில் கூட இந்த நாடு இவ்வாறு ஒரு நெருக்கடியை எதிர்கொண்டிருக்கவில்லை.அப்போது அவரை தவிர இந்த நாட்டில் வேறு எந்த தலைவரும் நாட்டையும் நாட்டு மக்களையும் பொறுப்பேற்க முன்வரவில்லை. அவர் மட்டுமே பாரிய சவால்களை ஏற்றுக் கொண்டு நாட்டையும் மக்களையும் பொறுப்பேற்றார். அவரால் மட்டுமே நாட்டில் மீள நிர்வாகத்தையும் சட்டம்,ஒழுங்கையும் நிலைநாட்டவும் முடிந்தது.

சர்வதேச நாணய நிதியம்,உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றுடன் நேரடியாக தொடர்பு கொள்ளக்கூடிய ஒரே வேட்பாளர் அவர் மட்டுமே என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

கடந்த ஒன்றரை வருட காலத்தில் நாடு இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளதுடன் மக்கள் பட்ட கஷ்டங்களிலிருந்து படிப்படியாக மீண்டுள்ளனர்.

எதிர்காலத்திலும் நாட்டைப் பாதுகாத்து மக்களை பாதுகாக்கும் சமாதி ஜனாதிபதியை இம்முறை தேர்தலில் மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும். மக்கள் அனைவரும் கேஸ் சிலிண்டருக்கு வாக்களித்து ஜனாதிபதியை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

## பொதுஜன ஐக்கிய சுதந்தி... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

1956 இல் பண்டாரநாயக்காவுடன் இணைந்து பிலிப் குணவர்தன மக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் வெற்றி பெற்றார் எனத் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி தேர்தலில்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

வாக்களிக்க முடிவு செய்யும் போது அனைத்து வாக்காளர்களும் தீவிரமாக சிந்திப்பதுடன், தனிப்பட்ட நபரை கருத்தில் கொள்ளாமல் ஒவ்வொரு வேட்பாளரும் நாடு தொடர்பில் முன்வைக்கும் செயற்றிட்டங்கள், நடைமுறைகளை கருத்தில் கொள்ள வேண்டும். திட்டங்களை செயற்படுத்த வேட்பாளர்கள் பயன்படுத்தும் அமைப்புகள், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்பாக இருப்பவர்கள் தொடர்பிலும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். அத்துடன் கல்வி, சுகாதாரம், விவசாயம் (குறிப்பாக சிறு விவசாயிகள்), சிறு மற்றும் நடுத்தர தொழில் துறைகளுக்கான கொள்கை தொடர்பிலும் வாக்காளர்கள் கவனம் செலுத்துவதுடன் நிறுவனங்கள், முக்கிய தொழில்கள் மற்றும் ஏற்றுமதிகளின் பல்வகைப்படுத்தல், பெருந்தோட்டத்துறை, சர்வதேச வர்த்தகம் மற்றும் சுற்றுலாத்துறை உள்ளிட்ட விடயங்களில் தாம் தெரிவு செய்யும் வேட்பாளர் கொண்டுள்ள நிலைப்பாட்டிலும் கவனம் செலுத்துவது முக்கியமாகும்.

இந்த விடயங்களில் வாக்காளர்கள் தாம் விரும்பும் வேட்பாளரிடமிருந்து உறுதிமொழியை கோருவதற்கு மறுக்க முடியாத உரிமை இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# தலைமைக்கான சிறந்த முன்மாதிரி



தலைமைப் பொறுப்பை ஏற்பதற்குப் பொறுத்தமானவர்களை தேடுபவர்கள் அதற்கான சிறந்த முன்மாதிரியாகக் கொள்ளத்தக்கவராக உலகுக்கே சிறந்த தலைவராக வாழ்ந்து காட்டிய உலகத்தாருக்கான அருட்கொடையான முஹம்மத் (ஸல்) அவர்களை எடுத்துக் கொள்ள முடியும்.

'நிச்சயமாக நமது தூதரிடத்தில் அழகிய முன்மாதிரி இருக்கிறது' (அல் குர்ஆன் 33:21) என்று அல்லாஹுத்தஆலா குறிப்பிட்டுள்ளான். அந்த வகையில் நபிகளார் வழங்கிய தலைமைத்துவப் பண்புகள் எமக்கான தலைவருக்கு சிறந்த முன்மாதிரியாக அமைய முடியும்.

நபி (ஸல்) அவர்கள் தலைமைத்துவப் பொறுப்பை ஏற்க முன்பே அன்றைய சமூகத்தில் உண்மையாளர் (அஸ்ஸாதிக்), நம்பிக்கையாளர் (அல்அமீன்) என்ற பண்புகளுக்கான முன்னுதாரணமாகத் திகழ்ந்தார்கள். தலைமைத்துவத்தை ஏற்பவர்களுக்கான அடிப்படைத் தகைமையாக இந்த இரு பண்புகளையும் காணலாம்.

நபியவர்கள் வாழ்ந்த காலத்தில் இருந்த அனைத்து மக்களுமே நபியவர்களின் இப்பண்புகளுக்கு சாட்சியாக இருந்தார்கள். தனது வியாபாரப் பொருட்களையெல்லாம் பாதுகாப்புக்காக நபியவர்களிடம் ஒப்படைத்துச் செல்லும் பழக்கத்தைக் கொண்ட அன்னை கதீஜா (ரழி) அவர்கள், நபியவர்களைத் திருமணம் பேசுவதற்காக தூதனுப்பிய போது நபியவர்களின் இந்த அமானிதம் பேணும் பண்பை சிலாகித்துக் கூறி அனுப்பியிருந்தமை இதற்குச் சான்றாகத் திகழுகிறது.

நபியவர்களின் தலைமைத்துவப் பண்புகளில், தம்மை சர்வ வல்லமை கொண்ட தலைவராக அடையாளப்படுத்திக் கொள்ளாமை பிரதானமானது எனலாம். தான் எவ்வளவு பெரிய தலைவராக இருந்தாலும் தனக்கும் மேலால் சர்வ வல்லமை படைத்த அல்லாஹ்தஆலா இருக்கிறான் என்பதையும் ஏனைய மக்களைப் போலவே தானும் அவனது அடிமை என்பதையும் அன்னார் மக்களுக்கு உணர்த்தினார்கள்.

தானும் அல்லாஹ்வின் அடிமை என்பதன் ஊடாக தனக்குக் கீழால் இருக்கும் மக்களை அடிமைப்படுத்த அவர் முயற்சிக்கவும் இல்லை, மக்கள் அப்படியானதொரு தலைவராக அவரைப் பார்க்கவுமில்லை என்பது முக்கியமானதாகும்.

தொலைநோக்குள்ள தலைவராக (Visionary Leader) நபியவர்கள் காணப்பட்டமை அவரது தலைமைத்துவத்துவப் பண்புகளில் எடுத்துக்காட்டாகும். இறைவன் மீதான நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதிலும் சுவர்க்கம் எனும் உயர்ந்த வெகுமானம் கிடைக்கவிருப்பதிலும் நபியவர்கள் தமது மக்களுக்கு ஆழமான நம்பிக்கையை ஊட்டினார்கள். தாம் தமது தோழர்களுடன் மக்காவிலிருந்து வெளியேறியபோது கூட தாம் இந்த உலகத்தில் ஏற்படுத்தப்படப் போகும் மாற்றத்தில் எந்த நம்பிக்கையீனமும் மக்களிடம் ஏற்படாமல் தமது இலக்கில் உறுதியாக இருந்தார்கள்.

மதீனாவுக்கு ஹிஜ்ரத் செல்லும் வழியில் தம்மைக் கைது செய்ய வந்த சுராக்காவிடம் அகப்பட்ட போது, அவருக்கு கிஸ்ரா மன்னனுடைய ஆபரணத்தை பரிசளிப்பதாகச் சொன்ன போது, கிஸ்ரா என்ற பாரசீக வல்லரசைக் கைப்பற்றுவோம் என்ற நம்பிக்கை அவரிடம் இருந்தமை வெளிப்படுகிறது. அகழி யுத்தத்துக்காக அகழி வெட்டும் போது இடையில் குறுக்கிட்ட பாறாங்கல்லை ஸஹாபாக்கள் தகர்த்திய வேளையில் வெளிவந்த தீப்பொறிகளைப் பார்த்த நபி (ஸல்) அவர்கள் ரோமப் பேரரசின் வெற்றியை நான் காண்கிறேன் என்று சொன்ன வார்த்தைகள் பெரும் வல்லரசுகளையும் தமது தூது சென்றடையும் என்ற தூரநோக்கை வெளிப்படுத்துவதாக அமைந்தது.

அதே போன்று தாயிபில் நபியவர்கள் துன்புறுத்தப்பட்ட போதும் கூட, இப்பொழுது எதிர்த்தாலும் இவர்களுக்குப் பின்னால் வரும் சமூகம் என்னை ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையையே அன்னார் வெளிப்படுத்தினார்கள். மக்காவில் நபியவர்கள் கடும் வெயிலிலும் வீடு வீடாகச் சென்று தமது தூதை எத்திவைத்து களைப்புடன் வந்த போது, தண்ணீர் எடுத்து வந்து நபியவர்களது முகத்தைக் கழுவி, அருந்தவும் கொடுத்த அவரது அருமை மகளார் பாத்திமா (ரழி), ஏன் தந்தையே அவர்கள் இப்படி நடந்து கொள்கிறார்கள் எனக் கேட்டார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், 'கவலைப்பட வேண்டாம் மகளே..., ஒரு காலம் வரும். அப்போது பூமியின் மூலை முடுக்குகளில் எல்லாம், குடிசைகளிலும் மாளிகைகளிலும் எனது தூது சென்றடையும் என நம்பிக்கையுடன் கூறினார்கள். மக்களை ஆட்சி செய்கின்ற தலைவர்களிடம் இருக்க வேண்டிய முக்கியமான பண்பு இதுவாகும்.

மக்கள் தமது தலைவராக நபியவர்களைப் பின்பற்றுவதில் மக்களுக்கு அவர்கள் விதைத்த நம்பிக்கை முக்கியமானதாகும். இதனை அப்படியே ஏற்றுக்கொள்வதற்கு அவர் இறைதூதராக இருந்தது மட்டுமன்றி அவரிடம் காணப்பட்ட உண்மையை மட்டுமே பேசுதல், நம்பிக்கைக்கு மோசடி செய்யாமலிருத்தல் என்பனவும் அடிப்படையானவையாகும்.

நபியவர்களிடம் காணப்பட்ட தலைமைத்துவப் பண்புகளில் அனைவரையும் சமமாக நடத்துதலும் ஒன்றாகும். அடிமையாய் இருந்த நீக்ரோ பிலால் (ரழி) அவர்களுக்கும் நபியவர்கள் சமமான மனித அந்தஸ்தை வழங்கினார்கள். குறைஷியர்களில் செல்வாக்குள்ள சில செல்வந்தர்கள் தாங்கள் நபியவர்களின் தூதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் ஆனால் பிலால் (ரழி) போன்றவர்களுடன் சமமாக அமர்வதற்குத் தம்மால் முடியாது எனவும் தெரிவித்த போது, நபியவர்கள் உயர் அந்தஸ்து எதிர்பார்ப்பவர்களை புறக்கணித்தார்களே ஒழிய சகலரையும் சமமாக மதிக்கும் தமது பண்பாட்டை விட்டுக் கொடுக்கவில்லை.

அத்தோடு தமது குடும்பத்தார் என்பதற்காக மக்களுக்கிடையே நீதியை நிலைநாட்டுவதிலும் நபியவர்கள் தவறாக நடந்து கொள்ளவில்லை. ஒரு முறை பாத்திமா என்ற பெண்மணி களவெடுத்ததற்காக நபியவர்களிடம் சிலர் பரிந்து பேசிய போது, 'எனது மகள் பாத்திமா (ரழி) களவெடுத்தாலும் கையை வெட்டத் தயங்கமாட்டேன்' எனக் கூறினார்கள்.

அல்லாஹுத்தஆலா அல்குர்ஆன் வசனங்கள் மூலம் தடுக்கும் வரை, அவரது தோழர்கள் நபியவர்களை வீடு தேடிச் சென்றால் முஹம்மதே (ஸல்) என்று அழைக்கும் பழக்கத்தைக் கொண்டிருக்கும் அளவுக்கு நபியவர்கள் தமது மக்களுடன் தோழமையாக இருந்தார்கள். நபியவர்களைப் பற்றி அல்லாஹ் கூறும் போது, முஹம்மதுர் ரஸூலுல்லாஹ், அவர் தம்முடன் இருப்பவர்களுடன் இரக்கமாக நடந்து கொள்வார் (அல் குர்ஆன் 48:29) எனக் கூறுகிறான்.

நபியவர்கள் தலைவராக இருந்த போதிலும் அவர் தலைமைத்துவத்தில் இருந்து கட்டளையிடுபவராக இருக்கவில்லை. மக்களோடு மக்களாக இருந்து செயற்படுபவராகவே நபியவர்கள் காணப்பட்டார்கள். குறிப்பாக யுத்த காலங்களில் அரியாசனத்தில் இருந்து கட்டளையிடுபவராக அவர் இருக்கவில்லை. மாறாக தமது இராணுவத்துக்குத் தலைமை தாங்கி களத்தில் அவர்களுடன் இருந்து போராடுபவர்களாக இருந்தார்கள். அகழி தோண்டும் வேளையிலும் பசியைத் தாங்கிக் கொள்வதற்காக வயிற்றிலே கல்லைக் கட்டிக் கொண்டு வேலை செய்தார்கள்.

அன்னார், தம்மிடம் இருந்ததையெல்லாம் பொதுமக்களுக்காகச் செலவழித்தார்களே அன்றி சொத்துக்களைக் குவிப்பதற்காக தமது தலைமைத்துவப் பதவியைப் பயன்படுத்தவில்லை. நபியவர்களது வாழ்வைப் பற்றி இங்கிலாந்தின் வரலாற்றாசிரியர் பார்னபி ரொஜர்ஸன் (Barnaby Rogerson) தனது ப்ரொபட் முஹம்மத் எனும் நூலில், அவர் கதீஜாவின் (ரழி) அவர்களின் செல்வத்தைக் கூட, தானதர்மங்களுக்கேயன்றிப் பயன்படுத்தவில்லை. அவர் சாதாரண வியாபாரியாக வாழ்ந்த போது எப்படி வாழ்ந்தாரோ அதே போலவே தான் தலைவரான போதும் எளிமையாக வாழ்ந்தார்கள் என்றுள்ளார். அவர் மரணிக்கும் தருவாயில் அவருக்காக எந்தச் சொத்துக்களையும் அவர் சேர்த்து வைத்திருக்கவில்லை. அவர் மரணிக்கும் போது ஒரு சில தீனார்கள் மாத்திரமே அன்னாரிடம் இருந்திருக்கின்றன.

உலகம் நீதியை இழந்து அநியாயம் கோலோச்சும் அளவுக்கு மாறி அராஜகம் தழைத்தோங்கும் நிலைக்கு ஆளாகியிருப்பதற்கு தலைமைகளிடம் இப்படியான பண்புகள் அரிதாகியிருப்பதே காரணமாக முடியும். உலகம் அமைதியான சுபீட்சமான சொர்க்கபுரியாக மாற வேண்டுமென்றால் சிறந்த தலைமைத்துவப் பண்புகளைக் கொண்டவர்களை தலைவராகத் தெரிவு செய்வது அனைவரதும் பொறுப்பாகும்.

பியாஸ் முஹம்மத்...

ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# சகிப்புத்தன்மையின் சிறப்பு



இறையச்சமுள்ள முஸ்லிம், அனைத்து சந்தர்ப்பங்களிலும் சகிப்புத் தன்மையையும், கோபத்தைக் கட்டுப்படுத்துவதையும் வழமையாக்கிக் கொண்டிருப்பார்.

இது தொடர்பில் அல் குர்ஆன், 'அவர்கள் கோபத்தை விழுங்கிவிடுவார்கள். மனிதர்(களின் குற்றங்)களை மன்னித்து விடுவார்கள். அல்லாஹ் (இத்தகைய) நல்லோரை நேசிக்கிறான்'. (03:134) என்று குறிப்பிட்டுள்ளது.

இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் வலிமையானவர், தனது உடல் பலத்தால் மனிதர்களைத் தாக்கி வெற்றி கொள்பவரல்ல. மாறாக, கோபத்தை அடக்கும் ஆற்றல் பெற்று நிதானத்தைக் கடைபிடிப்பவரேயாவார்.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'வலிமை என்பது தாக்குவதைக் கொண்டல்ல. வலிமையானவர் யாரெனில் கோபம் ஏற்படும் சமயத்தில் தனது மனதைக் கட்டுப்படுத்துபவரே' என்று குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

கோபத்தின்போது தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்வது ஆண்மையின் அடையாளமாகும். கோபத்தை தீவிரமாக வெளிப்படுத்திவிட்ட பிறகு அதனைத் தணித்துக் கொள்வது வீரமல்ல. பொதுவாக கோபம் ஏற்படும்போது மென்மையைக் கடைபிடிக்க வேண்டும். ஒரு மனிதன் தனது உணர்வுகள் வெடித்துக் கிளம்பும்போது அதைக் கட்டுப்படுத்தி உறுதியாக இருந்து கொண்டால் தர்க்கம், குழப்பம் போன்றவற்றை தவிர்க்க முடியும். அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தையும் மனிதர்களின் அன்பையும் பெற்று இலட்சியத்தை எளிதாக அடையமுடியும்.

ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் 'எனக்கு உபதேசம் செய்யுங்கள்' என்று திரும்பத் திரும்ப கூறியபோது அன்னார், 'கோபப்படாதே' என்ற ஒரே வார்த்தையைக் கூறிக்கொண்டிருந்தார்கள்.

(ஆதாரம்: ஸஹீஹுல் புஹாரி)

இந்த உபதேசம் ஒட்டுமொத்த நற்பண்புகளையும் உள்ளடக்கியுள்ளது. ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் 'அஷஜ் அப்த கைஸுக்கு, 'உம்மிடத்தில் அல்லாஹ் நேசிக்கும் இரு பண்புகள் இருக்கின்றன என்றும் அவற்றில் ஒன்று சகிப்புத்தன்மை மற்றையது நிதானம் என்று கூறியுள்ளார்கள்.

(ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம்)

ஆகவே இஸ்லாம் போதிக்கும் சகிப்புத்தன்மையையும் நிதானத்தையும் வாழ்வில் எடுத்து நடக்க முயற்சிப்போம். அதன் ஊடாக அல்லாஹ்வின் அன்பையும் அருளையும் பெற்றுக் கொள்ள முயற்சிப்போம்.

அப்துல்லாஹ்...

# இஸ்லாம் எடுத்தியம்பும் சகோதரத்துவம்

பரந்து விரிந்த இந்த உலகில் உள்ள அனைத்து ஜீவராசிகளையும் படைத்து, பரிபாலனம் செய்பவன் ஏக இறைவன் அல்லாஹ் ஒருவன் தான். அவன் எல்லோருக்கும் பொதுவானவன், அவன் எந்த தேவையும் அற்றவன். அதேநேரத்தில் தேவைகளை வேண்டி தன்னை நாடி வரும் அடியார்களின் தேவைகளை நிறைவேற்றி வைப்பவன். மாபெரும் கருணையாளன் அவன். அவனிடம் இருகரம் ஏந்திக்கேட்டால் இல்லை என்று சொல்லாதவன்.

'அல்லாஹ் அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையவன்' என்று (அல் குர்ஆன் (1:3) குறிப்பிட்டிருக்கிறது.



அத்தகைய சிறப்பு மிக்க இறைவனின் அருளைப்பெற வேண்டும் என்றால் அவன் நமக்கு காட்டிய வழியில் நடக்க வேண்டும். திருக்குர்ஆன் கட்டளைப்படியும், இறைத்தூதர் முகம்மத் (ஸல்) அவர்கள் வாழ்ந்து காட்டிய வழிமுறைகளைப் பின்பற்றியும் நாம் வாழ வேண்டும். இறையச்சத்துடன் வாழ்ந்து, கலிமா, தொழுகை, நோன்பு, ஸக்காத், மற்றும் ஹஜ் ஆகிய கடமைகளை நிறைவேற்றி வந்தால் அந்த ஏக இறைவனின் திருப்பொருத்தத்தை எம்மால் பெற்றுக்கொள்ள முடியும்.

அந்த வகையில் சக மனிதர்களிடம் நாம் எப்படி நடந்துகொள்ள வேண்டும்? என்பது குறித்து நபி (ஸல்) அவர்கள் எடுத்தியம்பியுள்ளார்கள். ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள் கூறியதாக இப்னு உமர் (ரழி) அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள்.

'ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமின் சகோதரன் ஆவான். அவனுக்கு இவன் அநீதி இழைக்கவும் மாட்டான். அவனை (பிறரது அநீதிக்கு ஆளாகும்படி) கைவிட்டு விடவும் மாட்டான். எவர் தம் சகோதரனின் தேவையை நிறைவு செய்வதில் ஈடுபட்டிருக்கின்றாரோ, அவரது தேவையை நிறைவு செய்வதில் அல்லாஹ்வும் ஈடுபட்டிருக்கின்றான். எவர் ஒரு முஸ்லிமின் ஒரு துன்பத்தை நீக்குகின்றாரோ, அவரது மறுமை நாளின் துன்பத்தை அல்லாஹ்வும் நீக்குகின்றான். எவர் ஒரு முஸ்லிமின் குறைகளை மறைக்கின்றாரோ, அவரது குறைகளை மறுமை நாளில் அல்லாஹ்வும் மறைக்கின்றான்' என்று நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: புஹாரி)

இந்நபிமொழியின் ஊடாக சகோதரத்துவத்தின் முக்கியத்துவமும் சிறப்பும் தெளிவாக எடுத்தியம்பப்பட்டிருக்கிறது. இருந்தும் அது தொடர்பில் கவனம் செலுத்தாதவர்களும் சமூகத்தின் மத்தியில் காணப்படவே செய்கின்றனர்.

நம்மில் பலர் வசதி, வாய்ப்புகள் நிறைந்த வாழ்க்கையை அனுபவிக்கலாம். சிலருக்கு அந்நிலை இல்லாமல் இருக்கலாம். இல்லாதவர்களுக்கு இருப்பவர்கள் கொடுத்து உதவ வேண்டும் என்பதையே இந்நபி மொழி வலியுறுத்துகிறது. அவ்வாறு ஒரு முஸ்லிம், சக முஸ்லிம்களின் தேவையை கருணையுடன் நிறைவேற்றினால், அல்லாஹ் அவரது தேவையை நிறைவேற்றுவான், துன்பங்களை நீக்குவான் என்பதை இந்நபி மொழி மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

மேலும் நாம் ஒருவருக்கு ஒருவர் கருணை காட்டுவதிலும், அன்பு செலுத்துவதிலும் எப்படி இருக்க வேண்டும் என்பது குறித்து நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள்.

'ஒருவருக்கொருவர் கருணை புரிவதிலும், அன்பு செலுத்துவதிலும், இரக்கம் காட்டுவதிலும் (உண்மையான) இறைநம்பிக்கையாளர்களை ஓர் உடலைப் போன்று நீ காண்பாய். (உடலின்) ஓர் உறுப்பு சுகவீனமடைந்தால் அதனுடன் மற்ற உறுப்புகளும் (சேர்ந்து கொண்டு) உறங்காமல் விழித்துக் கொண்டிருக்கின்றன. அத்துடன் (உடல் முழுதும்) காய்ச்சலும் கண்டு விடுகிறது'. (ஆதாரம்: புஹாரி)

அவ்வாறு நாம் கருணையுடன் மற்றவர்களிடம் நடந்துகொண்டால், இறைவனின் கருணை நமக்கு கிடைக்கப்பெறும் என்பதையும் நபி(ஸல்) அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

'(படைப்பினங்களின் மீது) கருணை காட்டாதவர், (படைத்தவனால்) கருணை காட்டப்பட மாட்டார்'. (ஆதாரம்: புஹாரி)

'ஒரு முஸ்லிம் மரம் ஒன்றை நட்டு அதிலிருந்து ஒரு மனிதனோ அல்லது (மற்ற) உயிரினமோ உண்டால் (அதன் காரணத்தால்) ஒரு தர்மம் செய்ததற்கான பிரதிபலன் அவருக்குக் கிடைக்காமல் இருப்பதில்லை'.

(ஆதாரம்: புஹாரி)

எனவே சக முஸ்லிம்களிடமும், பிற உயிர்களிடமும் நாம் அன்பு காட்டுவோம், கருணையுடன் நடந்துகொள்வோம். இதன் மூலம் இறைவனின் அருளையும், திருப்பொருத்தத்தையும் நாம் பெற்றுக்கொள்வோம்.

அபூ மதீஹா...

# இம்மையிலும் மறுமையிலும் நன்மைகள் பெற்றுத்தரும் நற்குணம்

ஒவ்வொரு மனிதர்களும் வணக்க வழிபாடுகளில் மட்டுமல்ல, நற்பண்புகளையும் பேண வேண்டும் என்பதையும் இஸ்லாம் வலியுறுத்துகிறது. இஸ்லாத்தின் சிறப்பே நற்குணம் தான். ஒரு முஸ்லிமிடம் இருக்க வேண்டிய குணநலன்களை இஸ்லாம் விரிவாக விவரிக்கிறது. இத்தகைய குணங்கள் இருந்தால் அவன் முஸ்லிம் என்று, நற்பண்புகளுக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுக்கிறது இஸ்லாம்.

தன்னுடைய வருகையின் நோக்கத்தைக் குறித்து முஹம்மத் (ஸல்) அவர்கள் குறிப்பிடும்போது, 'நற்குணங்களைப் பரிபூரணம் செய்வதற்காகவே நான் அனுப்பப்பட்டுள்ளேன்' என்று கூறியுள்ளார்கள். (ஆதாரம்: மாலிக்)

இந்த நபிமொழி நற்குணங்களின் பெறுமதியை தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. அப்படியிருக்கையில், ஒரு சமூகத்தில் ஏமாற்று, மோசடி, நம்பிக்கைத் துரோகம், வஞ்சனை என்று கெட்ட செயல்கள் குடிகொண்டிருந்தால் அந்த சமூகத்திற்கு இறைவனின் அருள் எவ்வாறு கிடைக்கப் பெறும்? அல்லது, ஒரே குடும்பத்தில் இருக்கும் உறுப்பினர்கள் ஒருவரோடு ஒருவர் வெறுப்புடனும், பொறாமையுடனும் நடந்து கொண்டால் அந்த குடும்பத்திற்கு அல்லாஹ்வின் அருள் எவ்வாறு கிடைக்கும்? என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இஸ்லாம் அமைதியானதும் பண்பானதும், நற்பண்புகள் நிறைந்ததுமான இறைநம்பிக்கையாளர்களை உருவாக்கவே எதிர்பார்க்கிறது.

அதனால் நாம் புரிந்துகொள்ள வேண்டியது யாதெனில், அல்லாஹ்வின் அருளுக்கும் நற்குணங்களுக்கும் இடையில் இருக்க வேண்டிய நெருக்கத்தையும் முக்கியத்துவத்தையும் ஆகும்.

இஸ்லாம் கூறும் வணக்க வழிபாடுகளின் நோக்கமே நற்குணங்கள் தான் என்பதை அருள்மறை அல் குர்ஆனைப் புரட்டிப் பார்த்தால் புரிந்துகொள்ளலாம். இஸ்லாத்தின் நோக்கங்களையும் இலக்குகளையும் சரியாக புரிந்து கொள்ளாவிட்டால் வணக்கங்கள் அனைத்தும் வெறும் உடற்பயிற்சிகளாகவே அமையும். நற்குணங்களில் பலவீனமாக இருப்பவன் இறை நம்பிக்கையிலும் (ஈமான்) பலவீனமானவனாகவே இருப்பான்' என்று இஸ்லாம் கூறுகின்றது.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'இறைவன் மீது ஆணையாக..! அவன் இறை நம்பிக்கையாளன் அல்லன், இறைவன் மீது ஆணை..! அவன் இறை நம்பிக்கையாளன் அல்லன், இறைவன் மீது ஆணை..! அவன் இறை நம்பிக்கையாளன் அல்லன்!' என்று மூன்று தடவை கூறினார்கள். அப்போது நபித்தோழர்கள், 'அல்லாஹ்வின் தூதரே..! யாரைக் குறித்து இவ்வாறு கூறுகின்றீர்கள்?' அதற்கு அண்ணலார், 'எவனுடைய தீங்கிலிருந்து அண்டை வீட்டார் பாதுகாப்பு பெறவில்லையோ அவன்' என்று கூறினார்கள். (ஆதாரம்: முஸ்லிம், அஹ்மத்)

மேலும், நபி(ஸல்) அவர்கள், 'வெட்கமும் இறை நம்பிக்கையும் இரண்டு கொம்புகள். ஒன்று போனால் மற்றொன்றும் போய்விடும்' என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

(ஆதாரம்: தபரானி, ஹாகிம்)

இதன் ஊடாக இறைநம்பிக்கை கொண்ட ஒருவர், ஒரு போதும் வெட்கம் கெட்ட செயலில் ஈடுபட மாட்டார் என்பதையே நபி (ஸல்) இங்கு எடுத்துக்காட்டியுள்ளார்கள்.

நற்குணங்களைப் பேணுபவனுக்கு இம்மையிலும் மறுமையிலும் நன்மையே கிடைக்கப்பெறும். இதன் சிறப்புக்களைக் குறித்து முஹம்மத் (ஸல்) அவர்கள் பல சந்தர்ப்பங்களில் எடுத்தியம்பியுள்ளார்கள்.

'மறுமையில் நன்மை தீமை நிறுக்கப்படும் தராசில் அதிக கனம் தருவது நற்குணங்களே.

(ஆதாரம்: அபூதாவூத், திர்மதி)

'நற்குணங்களில் பரிபூரணம் பெற்றவரே இறை நம்பிக்கையில் பரிபூரணம் பெற்றவராவார்'. (ஆதாரம்: அபூதாவூத், அஹ்மத்)

'நான் அதிகம் நேசிப்பவரும், என்னோடு மறுமை நாளில் மிக நெருக்கமாக இருப்பவரும் யார் எனில், சிறந்த நற்குணங்கள் கொண்டவரே!'. (ஆதாரம்: திர்மதி, அஹ்மத்)

'சுவனத்தில் மனிதன் அதிகம் நுழைவதற்குக் காரணமாக அமைவது இறையச்சமும், நற்குணமும் தான்.' (ஆதாரம்: திர்மதி, இப்னு மாஜா)

'இரவெல்லாம் நின்று வணங்கி, பகலெல்லாம் நோன்பு நோற்பவனுக்கு கிடைக்கும் பாக்கியத்தைவிட நற்குணத்தால் சிறந்தவனுக்கு அதிக பாக்கியம் கிடைக்கும்'.

(ஆதாரம்: அபூதாவூத், அஹ்மத்).

ஆகவே இம்மையிலும், மறுமையிலும் பல்வேறு நன்மைகளைப் பெற்றுத்தரும் நற்குணத்தில் சிறந்துவிளங்கி இறைவனின் அருளையும் அன்பையும் பெற்றுக் கொள்வோம்.

பிந்த் இஸ்மாயீல்...

# கிழக்கின் குரல்







வரலாற்று பிரசித்தி பெற்ற வெருகலம்பதி ஸ்ரீ சித்திர வேலாயுதர் சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் கொடியேற்றத்திருவிழா நேற்று காலை பக்தி பூர்வமாக இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

## மீனவர் வலையில் சிக்கிய திருவுருவச் சிலை

(காரைதீவு குறூப் நிருபர்)



பெரியநீலாவணை கடற்கரையில் மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது வலையில் எதிர்பாராத விதமாக சிவலிங்கம் ஒன்று சிக்கியுள்ளது.

இந்த சிவலிங்க திருவுருவச் சிலையை மீனவர்கள் அதே பகுதியில் பொருத்தமான மரத்தடியில் வைத்துள்ளதுடன் பக்தர்கள் வழிபட்டு வருகின்றனர்.

### சம்மாந்துறை சுகாதாரப் பிரிவில்

## அதிகளவான தொழுநோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக தகவல்

(ஒலுவில் விசேட நிருபர்)

சம்மாந்துறை சுகாதார வைத்திய பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அண்மைக்காலமாக அதிகளவான தொழுநோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எஸ்.ஐ.எம். கபீர் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

தொழு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ள பிரதேசங்களில் அதனை எவ்வாறு தடுப்பது என்பது தொடர்பாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் விழிப்புணர்வு செய்து வருகின்றனர்.

தொழு நோயாளர்களுக்கு ஆரம்ப பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்தார்.



உடலில் உள்ள உணர்வற்ற தழும்புகள் போன்றவை காணப்படுமிடத்து, பிரதேச சுகாதாரப் பரிசோதகர், குடும்ப நல உத்தியோகத்தர், சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோரை நாடி ஆலோசனையை பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அது ஒரு தொழுநோயாக இருக்குமாயின், 6 மாத கால மருந்து மாத்திரைகளை எடுத்தால் முற்றாக குணமடையலாம் என அவர் தெரிவித்தார்.

தொழு நோயாளர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு சிகிச்சையளித்து தொற்று பரவலை தடுப்பதற்கான திட்ட வரைபுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தொழு நோய் பரவலை கட்டுப்படுத்துவதற்கு எல்லோரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். அப்போதுதான் எமது பிராந்தியம் தொழு நோய் அற்ற பிராந்தியமாக காணப்படும்.

அரசாங்க வைத்தியசாலைகளுக்குச் சென்று தொழு நோய்க்கான சிகிச்சைகளை நோயாளர்கள் பெற்றுக்கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளனர்.

## பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் கட்டணம் செலுத்தும் சிகிச்சைப் பிரிவு விரைவில் ஆரம்பம்

பாலமுனை விசேட நிருபர்



பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறும் விடுதி (Paying ward) வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன. அதுதொடர்பான உயர்மட்டக் கலந்துரையாடலொன்று அண்மையில் பொத்துவில் ஆதார வைத்தியசலையில் நடைபெற்றது.

சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள், இலங்கை சுற்றுலா அதிகார சபையின் உயர் அதிகாரிகள், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி மெலிண்டன் கொஸ்தா, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் திருமதி சகீலா இஸ்ஸடீன், ஆகியோரின் பங்கேற்புடன் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் பொத்துவில் மற்றும் திருக்கோவில் ஆதார வைத்தியசாலைகளின் வைத்திய அத்தியட்சகர்களான டொக்டர் நித்தின் ரணவக்க, டொக்டர் ஏ.பி.மசூத், பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம்.மாஹிர், கிழக்கு மாகாண சுகாதார திணைக்களத்தின் பொறியியலாளர் ஏ.எம்.ஹக்கீம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது நடைபெற்ற கலந்துரையாடலையடுத்து உயர்மட்ட குழுவினர் கட்டணம் செலுத்தும் சிகிச்சைப்பிரிவு (Paying Ward) அமையவுள்ள இடங்களையும் பார்வையிட்டனர். பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் கட்டணம் செலுத்தும் சிகிச்சை (Paying Ward) வசதிகள் ஏற்படுத்தப்படும் பட்சத்தில் அறுகம்பே பிரதேசத்துக்கு வருகைதரும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் பெரிதும் நன்மையடைவதுடன், எமது நாட்டுக்கும் பெரும் வருமானத்தை ஈட்டிக்கொடுக்கின்ற ஒரு நிறுவனமாகவும் பொத்துவில் வைத்தியசாலை திகழும்.

## தபால்மூல வாக்களிப்பு திருகோணமலையில் சுமுகம்



(கந்தளாய் தினகரன் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தில் 2024 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்களிப்பு மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்களிப்பானது நேற்றுமுன்தினம் ஆரம்பமானதுடன் தொடர்ந்து ஏனைய அரச அலுவலகங்களில் நேற்றும் (05) நடைபெற்றது. அதேபோல் அதன் தொடர்ச்சியாக இன்றும் தபால்மூல வாக்களிப்பு நடைபெறவுள்ளது.

இதன்போது மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## அம்பாறை மாவட்ட இளைஞர், யுவதிகளுக்கு ஊடகத்துறை வலுவூட்டும் செயலமர்வு



(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

அம்பாறை மாவட்ட ஸ்ரீ லங்கா யுனைட்ஸ் செயற்பாட்டு நிலையம் ஏற்பாடு செய்த ஊடக கல்வியறிவு மற்றும் விமர்சன சிந்தனை பற்றிய செயலமர்வு அம்பாறை செயற்பாட்டு நிலையத்தில் அண்மையில் நடைபெற்றது.

நம்பகமான தகவல் தொடர்பு ஆதாரங்களை நம்பத்தகாத தகவல் தொடர்பு மூலங்களிலிருந்து வேறுபடுத்தி அறியவும், தவறான தகவல்களைப் பரப்புவதற்குப் பயன்படுத்தப்படும் நுட்பங்களைப் புரிந்துகொள்ளவும் , சமூகத்திலுள்ள தவறான தகவல்களைக் கண்டறிந்து அது பரவுவதைத் தடுப்பது தொடர்பாகவும் ஊடகவியலாளர்களின் கடமை தொடர்பில் இச்செயலமர்வில் விரிவாக ஆராயப்பட்டன.

இச்செயலமர்வில் அம்பாறை மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகப்பிரிவிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மூவின இளைஞர் யுவதிகள் பங்கேற்றனர்.

## தம்பலகாமத்தில் வீடு தீப்பற்றி எரிந்து நாசம்

(தம்பலகாமம் குறூப் நிருபர்)



தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீரா நகர் கிராமசேவகர் பகுதியில் வீடொன்று தீப்பற்றி முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

இதனால் பல இலட்சம் பெறுமதியான உபகரணங்கள் எரிந்து சாம்பலாகியுள்ளதாக வீட்டில் தங்கியிருந்தோர் தெரிவிக்கின்றனர்.

மின் ஒழுக்கு காரணமாக தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

குறித்த வீட்டின் உரிமையாளர் வெளிநாட்டில் வசிப்பதாகவும் வாடகைக்கு தங்கியிருந்தவர்களின் உபகரணங்களே இவ்வாறு தீப்பற்றி எரிந்து நாசமாகியுள்ளதாக தெரியவருகின்றது.

சம்பவ இடத்துக்கு மீரா நகர் கிராம சேவையாளர் சென்று அங்குள்ள களநிலவரங்களை அறிந்து கொண்டார். இச்சம்பவத்தில் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## கல்முனை கமநலசேவை பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் சிறுபோக நெற்செய்கையில் அமோக விளைச்சல்

(கல்முனை நிருபர்)

கல்முனை கமநல சேவைக்குட்பட்ட கனவாகுப்பற்று பிரதேச விவசாய நிலங்களில் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக நெற்செய்கையில் விவசாயிகளுக்கு அமோக விளைச்சல் கிடைத்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

ஆயிரத்து முன்னூற்று அறுபத்தைந்து ஏக்கரில் நெற் செய்கை பண்ணப்பட்டதாகக் குறிப்பிட்ட விவசாயிகள் 66 கிலோ கொண்ட நெல்மூடை 8300 ரூபாவுக்கு தனியாரால் கொள்வனவு செய்யப்படுவதாகவும் தெரிவித்தனர்.

சுமார் 40 தொடக்கம் 45 மூடை வரை விளைச்சல் கிடைத்துள்ளதாகவும் இதன்மூலம் நல்ல இலாபமும் கிடைத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். நெற்காணிகள் ஒரு போகத்தில் மட்டும் செய்கை பண்ணப்படும் நிலங்களாகும். கல்முனை மாநகருக்கு அடுத்து இந்த வயல்நிலங்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நாவிதன்வெளி மத்திய முகாம் பிரதேச வைத்தியசாலை அபிவிருத்தி கூட்டம்

(நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)



நாவிதன்வெளி மத்திய முகாம் பிரதேச வைத்தியசாலையின் அபிவிருத்தி தொடர்பான கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

மத்திய முகாம் வைத்தியசாலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வைத்தியசாலை அபிவிருத்திக்குழுவினர் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் ஸஹீலா இஸ்ஸதீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வைத்தியசாலை அபிவிருத்தி தொடர்பாக முன்னெடுக்கப்படும் இவ்வேலைத்திட்டம் மற்றும் குறைபாடுகள் குறித்து இங்கு விரிவாக ஆராயப்பட்டன.

கலந்துரையாடலில் பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர்.எம்.சீ.எம்.மாஹீரும் இணைந்து கொண்டார்.

வைத்தியசாலைக்குச் தேவையான சக்கரநாற்காலியொன்றும் வழங்கி வைக்கப்பட்டது.

## போதைப்பொருட்களுடன் அரச உத்தியோகத்தர் கைது

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

ஐஸ் போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்ட அரச உத்தியோகத்தரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கல்முனை விசேட அதிரடிப்படையின் விசேட தேர்ச்சி பெற்ற புலனாய்வு பிரிவின் தகவலுக்கமைய நீண்டநாட்களாக ஐஸ் போதைப்பொருள் வியாபாரம் இடம்பெற்றுவருவதாக தெரியவருகின்றது.

ஐஸ் போதைப்பொருளை மோட்டார் சைக்கிளில் விநியோகம் செய்து வந்துள்ளதாக தெரியவருகின்றது. ஐஸ் போதைப்பொருளை சாய்ந்தமருது உட்பட கல்முனை போன்ற பகுதிகளில் நீண்டகாலமாக விநியோகித்து வந்துள்ளார்.

## இராணுவத்தின் முயற்சியில் வறிய குடும்பமொன்றுக்கு புதிய வீடு

(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)



இலங்கை இராணுவ 241ம் படைப்பிரிவின் மனிதாபிமான வேலைத்திட்டத்தின் கீழ் தமண பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட நீத்தை மடவளலந்த கிராமத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் இளம் விவசாய தம்பதியினருக்கு சகல வசதிகளையும் கொண்ட வீடு இராணுவத்தின் முயற்சியில் வைபவரீதியாக கையளிக்கப்பட்டது .

இலங்கை இராணுவத்தின் பிரதம கட்டளை அதிகாரி லெப்டினென்ட் ஜெனரல் எச்.எல்.வீ.எம். லியனகேயின் எண்ணக்கருவில் உருவான இத்திட்டம் கிழக்கு மாகாண கட்டளை பிரதானி மேஜர் ஜெனரல் செவன்த் குலதுங்கவின் வழிகாட்டலிலும், மல்வத்த இராணுவ தலைமையகத்தின் 24ஆவது காலாட் படைப்பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் அனில் சாந்த பெரேரா ஆலோசனைக்கமைவாகவும் இராணுவ 241ம் படைப்பிரிவின் கட்டளை அதிகாரியின் மேற்பார்வையில் நடைபெற்றது.

அக்கரைப்பற்றிலுள்ள வர்த்தகப் பிரமுகர்கள், தனவந்தர்கள் மற்றும் சிவில் சமுக அமைப்புகளின் பிரதிகள் ஆகியோரின் நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட இந்த வீட்டின் கட்டட நிர்மாண வேலைகளையும் தச்சு வேலைகளையும் இராணுவ 241ம் படைப்பிரிவினரினரே மேற்கொண்டிருந்தனர். அத்தோடு வீட்டிற்குத் தேவையான தளபாடங்களும் சமையல் உபகரணங்களையும் இப்பகுதியைச் சேர்ந்த நலன்விரும்பிகள் வழங்கியிருந்தனர்.

## கல்முனை பிராந்திய வைத்தியசாலைகளில் என்பு முறிவு வைத்தியர்களுக்கு பற்றாக்குறை

(நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)

அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் என்பு முறிவு சிகிச்சைக்கென அதிகமானோர் வருகை தருவதாக தெரிவிக்கின்றனர்.

கல்முனை பிராந்திய கரையோர வைத்தியசாலைகள் பலவற்றில் என்பு முறிவு விசேட வைத்திய நிபுணர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதால் இந்நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, பாலமுனை பிரதேசங்களிலிருந்தே அதிகளவானோர் சிகிச்சைக்கு வருகின்றனர்.

அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் கடமை புரியும் விசேட வைத்திய நிபுணர் அக்கரைப்பற்று சம்மாந்துறை வைத்தியசாலைக்கு பதில் கடமைக்காக சென்று வருவதாகவும் தெரியவந்துள்ளது.

இருந்தும் வருகைதரும் நோயாளிகள் அனைவரும் விசேட வைத்திய நிபுணரால் பார்வையிடப்படுகின்றனர். அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் பதில் கடமை நிமித்தம் விசேட வைத்தியர் ஒருவர் வாரத்தில் ஒருநாள் வருகை தருவதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

# நகர்வலம்



## தொண்டமான்கள் எப்போதும் வெல்லும்; பக்கமே இ.தொ.கா வின் உடன்படிக்கைகள் எப்போதும் மலையக மக்களுடனேயே

### இ.தொ.காவின் இரத்தினபுரி மாவட்டத் தலைவர் ரூபன் பெருமாள்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

தொண்டமான்கள் எப்போதும் தேர்தலில் வெற்றி பெறுகின்ற தரப்புடனேயே இருந்துள்ளார்கள்.

இம்முறையும் ஜீவன் தொண்டமான் சார்ந்துள்ள வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க நிச்சயம் வெற்றி பெறுவது உறுதி என இ. தொ. கா வின் இரத்தினபுரி மாவட்டத் தலைவர் ரூபன் பெருமாள் தெரிவித்தார்.

திகாம்பரம், மனோ கணேசன் உள்ளிட்டவர்கள் சஜித் பிரேமதாசவுடன் உடன்படிக்கை செய்துள்ளார்கள். ஆனால் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எப்போதும் மலையக மக்களுடனேயே உடன்படிக்கை செய்து வந்துள்ளது. இம்முறையும் அவ்வாறு தான் என்றும் அவர் தெரிவித்தார்.

'இயலும் ஸ்ரீ லங்கா, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் மாபெரும் மக்கள் பேரணிக் கூட்டம் பெல்மதுளை நகரில் நடைபெற்ற போது அங்கு மக்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



கூட்டத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர், மலையக மக்கள் பாரிய கஷ்டங்களில் உள்ள போதெல்லாம் அமைச்சர் ஜீவன் தொண்டமான தனது சிறந்த வேலைத் திட்டங்களால் அவர்களுக்கு உதவி வருகின்றார்.

கடந்த முறை பொதுத் தேர்தலில் இரத்தினபுரி மாவட்டத்திலிருந்து 36,000 மக்கள் வாக்களித்த போதும் மனோ கணேசன் இரத்தினபுரி மாவட்டத்திலிருந்து ஒரு பாராளுமன்ற உறுப்பினரை வழங்காதது ஏன்? மனோ கணேசன் இரத்தினபுரி மாவட்டத்திற்கு என்ன செய்துள்ளார்? என கேட்க விரும்புகின்றேன்.2015 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரை சஜித் பிரேமதாச வீடமைப்பு அமைச்சராக பதவி வகித்தார்.

அந்தக் காலத்தில் இரத்தினபுரி மாவட்டத்தில் எந்த தமிழ் மக்களுக்கும் அவர் வீடுகளை வழங்கவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 ரூபா சம்பளம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார். அதற்காக அவருக்கு நன்றி கூற வேண்டும்.

மலையக மக்கள் இம்முறை தேர்தலில் அவருக்கு முழுமையான ஆதரவளிப்பது அவசியம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## றபீஉல் அவ்வல் மாதத்திற்கான தலைப்பிறை தென்பட்டது

### 04ஆம் திகதி மஃரிப் தொழுகையுடன் ஆரம்பம்

(கொழும்பு தினகரன் நிருபர்)

ஹிஜ்ரி 1446 றபீஉல் அவ்வல் மாதத்திற்கான தலைப்பிறை பார்க்கும் மாநாடு நேற்று முன்தினம் 04ஆம் திகதி புதன்கிழமை கொழும்பு பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்றது.

இதன்போது கொழும்பு உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளில் தலைப்பிறை தென்பட்டதால் இலங்கை வாழ் மக்கள் புனித றபீஉல் அவ்வல் மாதத்தை புதன் கிழமை 04ஆம் திகதி மஹ்ரிபு தொழுகையுடன் ஆரம்பிக்குமாறு கொழும்பு பெரிய பள்ளிவாசலின் பிறைக் குழுவின் தலைவர் மௌலவி எம்.பி.எம். ஹிஸாம் (அல்பத்தாஹி) உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

கொழும்பு பெரிய பள்ளிவாசலின் ஏற்பாட்டில் அதன் தலைவர் தாஹிர் ரஷீன் தலைமையில் இடம்பெற்ற மாநாட்டில் பெரிய பள்ளிவாசலின் பிறைக்கு குழு உறுப்பினர்கள், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைவர் உள்ளிட்ட பிரதிநிதிகள், கொழும்பு பெரிய பள்ளிவாசலின் நம்பிக்கையாளர்கள், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள அதிகாரிகள், வளிமண்டலவியல் திணைக்கள சிரேஷ்ட அதிகாரிகள், ஸ்ரீ லங்கா ஷரீஆ கவுன்சில் பிரதிநிதிகள், ஏனைய பள்ளிவாசல்கள், தரீக்காக்கள், ஸாவியாக்களின் பிரதிநிதிகள், மேமன் சங்க பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் பிரகாரம் மீலாதுன் நபி விழா எதிர்வரும் 16ஆம் திகதி (பிறை 12) திங்கட் கிழமை அனுஷ்டிக்கலாம் எனவும் பிறைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

## அநுராதபுரம் மாவட்டத்தில் 'டிராகன்ஃப்ரூட்' செய்கை வெற்றிகரமாக முன்னெடுப்பு

(திறப்பனை தினகரன் நிருபர்)

அநுராதபுரம் மாவட்டத்தில் 'டிராகன்ஃப்ரூட்' செய்கை தற்போது மாவட்டம் முழுவதும் இடம்பெற்று வருகின்றது. வரண்ட காலநிலையை தாங்கக்கூடிய, குறைந்த உழைப்பு, பூச்சி ஆபத்துகள் இல்லாத, பசளை பயன்பாடு குறைந்த, சந்தையில் நல்ல நிலையில் உள்ள டிராகன்ஃப்ரூட் செடி தோட்டத்தில் அலங்கார செடியாகவும் இன்று வளர்க்கப்படுகிறது.

புற்றுநோயை எதிர்த்துப் போராடும், சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்தும், செரிமானத்துக்கு, ரத்தத்தில் உள்ள கொழுப்பின் அளவைக் குறைத்து, ரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தும் மருத்துவக் குணங்கள் இப்பழத்தில் இருப்பதால், இப்பழத்தின் மீதான அக்கறையும் அதிகரிக்க காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.இது கற்றாழை இனத்தைச் சேர்ந்த தாவரம் என்றும் அழைக்கப்படுகிறது.



வைட்டமின்கள், தாதுக்கள் நிறைந்த டிராகன் பழம் நார்ச்சத்து நிறைந்த உணவாகவும் இன்று பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

2021 இல் கெக்கிராவ அலகமுவ பிரதேசத்தில் இந்த பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்பட்டது.

அதேபோன்று, மஹாவிலச்சிய பிரதேச செயலகப் பிரிவிலும் வெற்றிகரமாக இச் செய்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.உள்நாட்டில் மட்டுமின்றி வெளிநாட்டுச் சந்தையிலும் இதற்கான தேவை இருப்பதால், இது மிகவும் நல்ல மற்றும் சுவையான பழம் என்பதாலும் பலர் இதை தங்கள் தோட்டங்களில் உற்பத்தி செய்து வருகின்றனர்.

உலகின் பல நாடுகளில் பொருளாதாரப் பயிராகப் பயிரிடப்படும் இந்தப் பழம், அன்னியச் செலாவணியை பெற்றுத் தரக் கூடியதாகவும் உள்ளது. எளிதில் பராமரிக்கக்கூடிய டிராகன்ஃப்ரூட் வளர்ப்பதன் மூலம், மனநலம், உடல் ஆரோக்கியம், பொருளாதார வளர்ச்சி போன்ற பல நன்மைகள் இதில் காணப்படுவதால் எவரும் இலகுவில் ஆரம்பிக்கக்கூடிய ஒன்றாகவும் காணப்படுகின்றது.

## அநுராதபுரம் ஸாஹிரா மாணவர்கள் மாகாண மட்டப்போட்டிக்கு தெரிவு



(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

நடைபெற்று முடிந்த சிங்கள தின வலய மட்ட போட்டிகளில் அநுராதபுரம் ஸாஹிரா கல்லூரியிலிருந்து பங்குபற்றிய 30 மாணவர்களினுள் 26 மாணவர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

இதில் 11 மாணவர்கள் தனி நிகழ்ச்சியில் முதலாம் இடத்தையும் 08 மாணவர்கள் குழு நிகழ்ச்சி ஒன்றில் 1 ஆம் இடத்தையும் 06 மாணவர்கள் இரண்டாம் இடத்தையும் ஒரு மாணவர் மூன்றாம் இடத்தையும் பெற்று மாகாண மட்ட போட்டிகளுக்கு தெரிவாகியுள்ளனர்.

வலய மட்டத்தில் ஸாஹிரா கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர்களை பயிற்றுவித்த ஆசிரியர்களான கே.ரீ. சாந்தி லதா ,எம்.எம். தஸ்லிமா, டபிள்யூ. பீ. பாத்திமா உள்ளிட்ட குழுவினருக்கு பாடசாலை சமூகம் பாராட்டுகளை தெரிவித்துள்ளது

## கொழும்பு உம்மு ஸாவியாவில் 'ஷமாயிலுத் திர்மிதி' ஆரம்பம்

ஷாதுலியாத் தரீக்காவின் தலைமையகமான கொழும்பு உம்மு ஸாவியாவில் 122ஆவது வருட புனித 'ஷமாயிலுத் திர்மிதி' பாராயண மஜ்லிஸ் நேற்று (5) வியாழக்கிழமை ஆரம்பமானது.இறைத்தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் அவதரித்த புனித ரபீஉல் அவ்வல் மாதத்தினை சிறப்பிக்கும் வகையில் இம் மஜ்லிஸ் வருடாந்தம் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. உம்மு ஸாவியா பிரதம இமாம் அஜ்வாத் அல் பாஸி அரபுக் கல்லூரி முதல்வர் கலீபதுஷ்ஷாதுலி மௌலவி எம். எஸ். அஹ்மத் சூபி (மஹ்ழரி) தலைமையில் ஆரம்பமான இம் மஜ்லிஸ் 16ஆம் திகதி முற்பகல் தமாம் செய்யப்படும்.

இலங்கை வானொலி முஸ்லிம் சேவை 12 தினங்களும் ஹதீஸ் பாராயண நிகழ்சிகளை தினமும் காலை 7:30 மணி முதல் 8:00 மணி வரை நேரடியாக அஞ்சல் செய்யும். வெள்ளிக்கிழமை தினம் மாத்திரம் காலை 8:00 மணி முதல் 8.30 மணி வரை அஞ்சல் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.கலீபதுஷ் ஷாதுலி மௌலவி அஹமத் சூபி (மஹ்ழரி) ஹதீஸ் விளக்கவுரை நிகழ்துவார்.

## பேருவளையில் நாளை ஐ.ம.ச வின் விசேட கலந்துரையாடல்

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து களுத்துறை மாவட்டந்தோறும் பல்வேறு தேர்தல் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக ஐ.ம.சவின் பேருவளைத் தொகுதி பிரதம அமைப்பாளர் இப்திகார் ஜெமீல் தெரிவித்தார்.

அந்தடிப்படையில், களுத்துறை மாவட்ட ஐ.ம.சவின் அமைப்பாளர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் நகர, பிரதேச சபை உறுப்பினர்கள் உட்பட முக்கியஸ்தர்கள் கலந்துகொள்ளும் விசேட கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை (07) சீனன்கோட்டை, பளீல் ஹாஜியார் மாவத்தையிலுள்ள ஐ.ம.சவின் பிரதான காரியாலயத்தில், பிரதம அமைப்பாளர் இப்திகார் ஜெமீல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் மாவட்டத்தில் முன்னெடுக்கவுள்ள பிரசார நடவடிக்கைகள், கூட்டங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளதோடு மாவட்டத்திலுள்ள முஸ்லிம் ஊர்களை மையப்படுத்தி முன்னெடுக்கப்படவுள்ள பிரசார நடவடிக்கைள் தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்படவுள்ளதாக இப்திகார் ஜெமீல் தெரிவித்தார்.

## சீனன்கோட்டை ஜாமிஅதுல் பாஸிய்யாவில் 16ஆவது வருடாந்த புனித மௌலித் மஜ்லிஸ் ஆரம்பம்

(பேருவளை விசேட நிருபர்)

பேருவளை, சீனன்கோட்டை அல் ஜாமிஅதுல் பாஸிய்யதுஷ் ஷாதுலிய்யா கலாபீடத்தில் புனித ரபீயுனில் அவ்வல் மாதம் 12 தினங்கள் வருடாந்தம் நடைபெறும் புனித ஹரீரி மௌலித், ஸுப்ஹான மௌலித் மஜ்லிஸ் புதன்கிழமை (04) இஷா தொழுகையைத் தொடர்ந்து அதிபர் மௌலவி எம்.ஏ.எம் அஸ்மிகான் (முய்யிதி) தலைமையில் ஆரம்பமானது. ஆரம்ப நிகழ்வில் கலீபாக்கள், உலமாக்கள், கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. இம் மஜ்லிஸ் தொடர்ந்து 11 தினங்கள் இஷா தொழுகையை தொடர்ந்து நடைபெறும்.

## கம்பளை எழுத்தாளர் அஸ்மா டீன் எழுதிய "ஆலமரம்" சமூக நாவல் வெளியீடு



கம்பளை எழுத்தாளரும், கவிஞரும், கலைஞருமான அஸ்மா டீன் எழுதிய சமூக நாவலான "ஆலமரம் "அண்மையில் கம்பளை ஸாஹிரா கல்லூரி மஹ்மூத் கேட்போர் கூடத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது. பேராசிரியர் எம். எஸ். என். அனஸ் தலைமையில் நடைபெற்ற இவ் வெளியீட்டு விழாவில் விஷேட அதிதிகளாக கலாபூஷணம் திருமதி நயீமா சித்தீக், பேராசிரியை கலாநிதி சாதியா ஸலாம் மற்றும் கலாபூஷணம் அரபா மன்சூர் ஆகியோர் கலந்து சிறப்பித்ததோடு எழுத்தாளர்கள், நலன் விரும்பிகள், புத்தி ஜீவிகள் என பெருந்திரளானோர் இதில் கலந்து சிறப்பித்தனர். வானொலி அறிவிப்பாளர் சியாமுதீன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

# இன்னல்களை தீர்ப்பதற்கான இலக்கே ஜனாதிபதி தேர்தல்

### புள்ளடி போடும் ஒரு போராட்டம் என்கின்றார் தமிழ் பொதுவேட்பாளர் பா.அரியநேந்திரன்

(வவுனியா விசேட நிருபர்)

இன்னல்களை தீர்ப்பதற்கான இலக்காகவும் அடையாளமாகவும் இத்தேர்தல் அமையுமென தமிழ் பொதுவேட்பாளர் பா.அரியநேந்திரன் தெரிவித்தார்.

தேர்தலின் பின்னர் தமிழரசுக்கட்சியுடன் மாத்திரமே பயணிப்பேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

'நமக்காக நாம் ' என்ற தேர்தல் பிரசாரப் பணிக்காக வவுனியாவுக்கு விஜயம் செய்த அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

மக்கள் நல்ல உத்வேகத்துடன் இருக்கின்றனர். சங்கு சின்னத்துக்கு ஆதரவு கொடுக்க வேண்டும் என தீர்மானித்து விட்டனர். கடந்த எட்டு ஜனாதிபதிகளாலும் நாங்கள் ஏமாற்றப் பட்டிருக்கின்றோம், பல துன்பங்களை சந்தித்திருக்கின்றோம்.



இந்த தேர்தல் வெற்றி பெறுவதற்கு அல்ல. இனம் வெற்றி பெற வேண்டும் என்பதே இலக்கு. இனத்தின் அடையாளமாகவே நான் நிறுத்தப்பட்டிருக்கின்றேன். எனது சின்னத்துக்கு வாக்களிக்கும் ஒவ்வொருவரும் உங்களுக்கு நீங்களே வாக்களிப்பதாகவே அர்த்தம்.

கடந்தகால இன்னல்களை தீர்ப்பதற்கான இலக்காகவும் அடையாளமாகவும் இந்த தேர்தல் இருக்கும். தேர்தல் முடிவுகள் சர்வதேசத்தின் மனசாட்சியை நிச்சயம் உறுத்தும். இந்தியாவிற்கும் ஒரு செய்தியை சொல்லும்.

தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமையை வழங்கவேண்டும் என்று அரசாங்கத்தை வலியுறுத்தும்.

கடந்தகாலங்களில் பல போராட்டங்களை தமிழினம் கண்டுள்ளது. இது புள்ளடி போடும் ஒரு போராட்டம்.

எனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் மீனவர் பிரச்சினை விவசாயிகள் பிரச்சினை உள்ளடக்கப்பட்டிருந்தது. அது பிரதி எடுக்கப்படும் போது தற்செயலாகவே விடுப்பட்டுள்ளது. அந்த விடயங்கள் இறுதிப் பிரசுரத்தில் நிச்சயம் உள்ளடக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

## நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய அலங்கார உற்சவம் ஆரம்பம்

(நாகர்கோவில் விஷேட நிருபர்)

வரலாற்று சிறப்பு மிக்க நாகர் கோவில் பூர்வீக நாகதாம்பிரான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் வியாழக்கிழமை 12ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறும்.

அந்தவகையில் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பாம்பு திருவிழாவும், 18 ஆம் திகதி புதன் கிழமை கப்பல் திருவிழாவும், 19ஆம் திகதி வியாழக்கிழமை வேட்டைத் திருவிழாவும், 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பர திருவிழாவும், 21ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்த திருவிழாவும், 22ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பட்டுத் தீர்த்தமும் இடம் பெறும் என ஆலய பரம்பரை நம்பிக்கை பொறுப்பாளரும் பரிபாலன சபையினரும் அறிவித்துள்ளனர்.

# வடக்கின் உதயம்



இலங்கை கமநல சேவைகளுக்கிடையிலான போட்டியில் பி பிரிவில் கரவெட்டி கமநல சேவைகள் நிலையம் மாகாண மட்டத்தில் முதலிடத்தையும் தேசிய ரீதியில் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டது. இதற்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கொழும்பு கமநல அபிவிருத்தி மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற போது கமத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர கரவெட்டி கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் மீ.கோபிநாத்துக்கு சான்றிதழ் வழங்குவதை படத்தில் காணலாம்.

படம் - கரவெட்டி தினகரன் நிருபர்

## மாதகல் படகு விபத்து; காணாமல் போன இளைஞன் சடலமாக மீட்பு

(யாழ் . விசேட நிருபர்)

யாழ்ப்பாணம் மாதகல் கடற்பகுதியில் படகு விபத்துக்குள்ளானமையால் கடலில் மூழ்கி காணாமல் போன இளைஞன் சடலமாக நேற்று காலை மீட்கப்பட்டுள்ளார். மாதகல் பகுதியை சேர்ந்த கடற்றொழிலாளியான நாகராஜா பகீரதன் (வயது 21) எனும் இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். மாதகல் பகுதியில் இருந்து நேற்றுமுன்தினம் புதன்கிழமை அதிகாலை கடற்றொழிலுக்காக இருவர் படகொன்றில் சென்ற சமயம் படகு கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதன் போது படகிலிருந்த இருவரும் கடலில் மூழ்கியுள்ளார் , அதில் ஒருவரை அருகில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த சக கடற்றொழிலாளர்கள் கண்டு விரைந்து சென்று காப்பாற்றியுள்ளனர். மற்றையவர் கடலில் மூழ்கி காணாமல் போன நிலையில் , அவரை தேடும் பணிகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையில் நேற்றையதினம் காலை காணாமல் போனவரின் சடலம் கரையொதுங்கியுள்ளது.

## முதியோர் இல்லங்களால் புறக்கணிக்கப்பட்ட முதியவர்: கருணை கொலை செய்யுமாறு கோரிக்கை

(யாழ் . விசேட நிருபர்)

யாழ்ப்பாணத்தில் உறவினர்கள் மற்றும் முதியோர் இல்லங்களால் கைவிடப்பட்ட முதியவரொருவர் தன்னை கருணை கொலை செய்யுமாறு, வடமாகாண ஆளுநர் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் ஆகியோரிடம் கடிதம் மூலம் கோரியுள்ளார்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளையதம்பி ஜெயக்குமார் எனும் முதியவரே இவ்வாறு கோரியுள்ளார்.

குறித்த முதியவர் ஒரு காலை இழந்து, நோய்வாய்ப்பட்டு ஆதரவற்ற நிலையில் மானிப்பாய் உதயதாரகை சனசமூக நிலையத்தில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் தஞ்சமடைந்துள்ளார்.

அவரை அப்பகுதி மக்கள் முதியோர் இல்லமொன்றில் சேர்க்க முயற்சிகளை எடுத்தனர். முதியோர் இல்லங்கள் அவரை ஏற்க மறுத்த நிலையில், கிராம சேவையாளரின் சிபாரிசு கடிதத்துடனும் முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் எந்த முதியோர் இல்லமும் அவரை சேர்க்கவில்லை

இந்நிலையில் பிரதேச செயலாளரின் சிபாரிசு கடிதத்துடன் பளையில் உள்ள முதியோர் இல்லம் ஒன்றில் சேர்ப்பதற்காக தமது செலவில் வாகனம் ஒன்றில் அவரை ஊரவர்கள் அழைத்து சென்ற போதிலும், அங்கும் அவரை சேர்த்துக்கொள்ள நிர்வாகம் மறுத்துள்ளது.

அதனால் மீண்டும் தமது சனசமூக நிலையத்திற்கே அவரை அழைத்து வந்திருந்தனர்.

எந்தவொரு முதியோர் இல்லங்களோ, அமைப்புக்களோ, நிறுவனங்களோ தன்னை பொறுப்பேற்காத காரணத்தால், தன்னை கருணை கொலை செய்து விடுமாறு, வடமாகாண ஆளுநர் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளரிடம் கடிதம் மூலம் அவர் கோரியுள்ளார்.

## வட்டுக்கோட்டையில் அத்துமீறி நுழைந்த வன்முறை கும்பல்

(யாழ் . விசேட நிருபர்)

யாழ்ப்பாணம் வட்டுக் கோட்டை பொலிஸ்பிரிவுக் குட்பட்ட பகுதியிலுள்ள வீடொன்றில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு அத்துமீறி நுழைந்த வன்முறை கும்பலொன்று சிறுவர்கள், பெண்கள் உள்ளிட்ட ஐவர் மீது தாக்குதலை நடாத்தி விட்டு தப்பி சென்றுள்ளது.

தாக்குதலாளிகளை கைது செய்ய வேண்டும் என கோரி பாதிக்கப்பட்ட குடும்பத்தினருடன் , அயலவர்களும் இணைந்து வட்டுக் கோட்டை பொலிஸ் நிலையம் முன்பாக இரவு கூடி இருந்தனர்.



சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண்ணொருவர் தெரிவிக்கையில்,

ஆறு பேர் கொண்ட வன்முறை கும்பல் ஒன்று இரவு வீட்டுக்கு வந்து, இருவர் வெளியில் காவல் நிற்க ஏனைய நால்வரும் வீட்டிற்குள் வந்து அங்கிருந்த 05 வயதான என் மகனை தாக்கினார்கள்.

பின்னர் எனது சகோதரி குழந்தைக்கு பாலூட்டிக்கொண்டிருந்த வேளை அவர் மீதும் தாக்குதல் நடத்தினார் , அதனை தடுக்க சென்ற சகோதரனையும் தாக்கினார்கள். அங்கிருந்த எனது மற்றைய மகனையும் தாக்கினார்கள்.

நாங்கள் அவலக்குரல் எழுப்ப , வீட்டில் நின்ற எனது மோட்டார் சைக்கிளை தள்ளி விட்டு, கதிரைகளை அடித்து உடைத்து அட்டகாசம் புரிந்து விட்டு தப்பி சென்றனர். வன்முறை கும்பலின் தாக்குலில் காயமடைந்த எனது சகோதரியை சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளோம் என அவர் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## "வீரர்களின் போர்" மாபெரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி

வீரர்களின் போர்" என வர்ணிக்கப்படும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக்கும், சுன்னாகம் ஸ்கந்த வரோதயாக் கல்லூரிக்கும் இடையிலான 2024ஆம் ஆண்டுக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டி எதிர் வரும் 7ஆம் மற்றும் 08ஆம் திகதிகளில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். ஊடக அமையத்தில் நேற்றைய தினம் புதன்கிழமை இரு கல்லூரிகளின் அணித்தலைவர்களும் , அதிபரும் கலந்து கொண்டு போட்டிகள் தொடர்பில் அறிவித்தனர்.

கடந்த 21 ஆண்டுகளாக நடைபெற்ற இக்கிரிக்கெட் சுற்றுப்போட்டிகளில் தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி அணி ஐந்து முறை வெற்றியீட்டியதுடன், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி நான்கு முறை வெற்றி ஈட்டியதுடன் 12 போட்டிகள் சமநிலையில் நிறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்தும் இலக்கியக்களம்

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திரா தலைமையில் இன்று (06) வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு விநோதன் மண்டபத்தில் நடைபெறவுள்ள இலக்கியக்களம் நிகழ்ச்சியில் “இலக்கியத்தின் நுண்அரசியல் ‘கலிங்கு’ நாவலை முன்வைத்து” என்னும் தலைப்பில் எழுத்தாளர், கவிஞர் க. ரமணேஸ் உரை நிகழ்த்தவுள்ளார்.

## இந்தியாவின் "தரங் சக்தி" பயிற்சியில் இலங்கை விமானப்படையின் விமானம்

இலங்கை விமானப்படைக்கு சொந்தமான பீச்கிராஃப்ட் விமானம் இந்திய விமானப்படையால் ஏற்பாடு செய்யப்பட்ட "தரங் சக்தி" வான் போர் பயிற்சியில் இணைந்தது. மேலும் இந்த பயிற்சியில் 11 நாடுகளைச் சேர்ந்த சுமார் 150 விமானங்கள் பங்கேற்றன.

"தரங் சக்தி "விமானப் போர் பயிற்சியின் முதல் கட்டம் 2024 ஆகஸ்ட் 06 முதல் 14 ம் திகதி வரை இந்தியாவின் தமிழ்நாடு, சூலூர் விமானப்படை தளத்தில் வெற்றிகரமாக நடத்தப்பட்டதுடன். இரண்டாவது மற்றும் இறுதி கட்ட பயிற்சிகள் 14 செப்டம்பர் 2024 அன்று ராஜஸ்தானில் உள்ள ஜோத்பூர் விமானப் படை தளத்தில் நடைபெறவுள்ளது. இந்த விமான போர் பயிற்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் இலங்கை விமானப்படையின் பீச்கிராஃப்ட் விமானம் பங்களிப்பை வழங்கியுள்ளது.



பூகோள பாதுகாப்பு ஒத்துழைப்பை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் இந்தியாவினால் இதுவரை நடத்தப்பட்ட மிகப்பெரிய சர்வதேச விமானப் பயிற்சியான "தரங் சக்தி" பயிற்சியில் இலங்கை விமானப்படை பங்குபற்றுவதன் மூலம் இலங்கை விமானப்படைக்கு சர்வதேச இராணுவ உறவுகளை வலுப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் அமைவதுடன் இலங்கை விமானப்படையின் விமானிகள் மற்றும் விமானப் பணியாளர்களுக்கு இதனூடாக புதிய அனுபவத்தைப் பெறுவதற்கான வாய்ப்பு கிடைக்கப் பெற்றது.

பொலிஸ் சார்ஜன்ட் செலுத்திய,

## வான், மோ. சைக்கிளுடன் மோதி விபத்து; தாய், மகள் உயிரிழப்பு

### எப்பாவல பகுதியில் சம்பவம்

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

எப்பாவல கெக்கிராவ பீ 213 வீதியில் கட்டியாவ சந்திக்கு அருகாமையிலுள்ள வளைவில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் செலுத்திய வான் மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் (04) மாலை மோதி இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த தாய் மற்றும் மகள் இருவரும் உயிரிழந்துள்ள நிலையில் குழந்தை ஒன்று படுகாயமடைந்து அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக எப்பாவல பொலிசார் தெரிவித்தனர்.

கல்கமுவ போகஸ்வெவ பகுதியைச் சேர்ந்த என். சந்திரலதா (58) வயதுடைய நான்கு பிள்ளைகளின் தாய் மற்றும் அவரின் மகள் இந்திராணி (38) வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயுமே உயிரிழந்துள்ளனர்.

எப்பாவவையில் இருந்து கெக்கிராவ பகுதிக்கு சார்ஜன்ட் செலுத்திய வான் கெக்கிராவ பகுதியிலிருந்து எப்பாவல பகுதிக்கு சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்திற்குள்ளாகியுள்ளது.

விபத்தில் உயிரிழந்துள்ள பெண்ணின் கணவர் இராணுவ சேவையில் பணியாற்றி வருவதுடன் எப்பாவல நல்லமுதாவ பகுதியில் அமைந்துள்ள பிரதான வீட்டுக்கு சென்று மீண்டும் கல்கமுவ நோக்கி பயணித்து கொண்டிருந்த போது விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை எப்பாவல பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தர்கா நகரில் நூல் வெளியீடு



'சம்ஸுதீன் பக்தாதி பரம்பரையில் வந்த யாக்கூப் லெப்பை மரிக்கார் சம்ஸுதீன்' என்ற தலைப்பில் தர்கா நகர் ரிக்காஸ் சம்ஸுதீன் திரட்டியுள்ள நூலின் வெளியீட்டு வைபவம் அவரது இல்லத்தில் இடம்பெற்ற போது, நூலின் முதல் பிரதி தர்காநகர் அல் ஹம்றா வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் எம். இஸட். எம் நயீமுக்கு வழங்கி வெளியிட்டு வைக்கப்படுவதையும் முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் இப்திகார் ஜெமீல் நூலாசிரியருக்கு நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிப்பதையும் படத்தில் காணலாம்.

## அஹதியா பாடசாலை வருடாந்த மாநாடு

கிண்ணியா தினகரன் நிருபர்

கொழும்பு மாவட்ட அஹதிய்யா பாடசாலைகள் சம்மேளனத்தின் வருடாந்த மாநாடு எதிர் வரும் ஞாயிற்றுக் கிழமை (08 ) மாலை 4 மணி முதல் 6 மணி வரை ஹில்காசல் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி மாநாட்டில் கொழும்பு மாவட்டத்தை சேர்ந்த அஹதியா பாடசாலைகளின் அதிபர்கள் உட்பட ஒவ்வொரு அஹதியா சார்பாகவும் மேலதிகமாக இரண்டு உறுப்பினர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக கொழும்பு மாவட்ட அஹதிய்யா பாடசாலைகள் சம்மேளன செயலாளர் தெரிவித்தார்.

## புத்தளம் கிளீன் அமைப்பின் ஆவணம் நாமல் ராஜபக்ஷவிடம் கையளிப்பு

புத்தளம் தினகரன் நிருபர்

புத்தளம் வண்ணாத்திவில்லு, அருவைக்காடுவில் திண்மக் கழிவு அகற்றும் நடவடிக்கைகளினால் ஏற்படும் சூழல் பாதிப்பு தொடர்பான ஆவணம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவிடம் கிளீன் புத்தள அமைப்பினரால் கையளிக்கப்பட்டது.

கிளீன் புத்தளம் பிரசாரத்தை, வேட்பாளர்களிடையே பேசும் பொருளாக மாற்றுவதற்கான தொடர் முயற்சிகளில் ஒன்றாக இது நடந்து முடிந்தது.

இந்த ஏற்பாட்டை ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன புத்தளம் தொகுதி அமைப்பாளர் ஏ.எளச்.எம். ரியாஸ் மேற்கொண்டிருந்தார்.



## சர்வதேச கணிதப் போட்டியில் தங்கம் வென்றார் உயர் ஸ்பா

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

லண்டன் சிதம்பரா கல்வி நிலையத்தினால் நடத்தப்பட்ட கணித அறிவுப் போட்டியில், மாவனல்லை கே/பள்ளிப் போருவ முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தரம் 9 இல் கல்வி கற்கும் மாணவனான உயர் ஸ்பா தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.

அகில இலங்கை ரீதியாக பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட இப் போட்டியில் பல மாணவர்கள் பங்கு பற்றியுள்ள நிலையில், இறுதியில் 20 மாணவர்கள் வெற்றிபெற்றுள்ளனர்.இப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களும் பதக்கங்களும் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.






# புதியவர்களுக்கு நாம் வாக்களித்து சோதித்து பார்க்கும் தருணமல்ல இது

(ஹற்றன் சுழற்சி நிருபர்)



மலையக பெருந்தோட்டப்பகுதிகளை கிராமங்களாக்கும் திட்டம் பற்றி சிலர் போலியான தகவல்களை பரப்பி வருவதாகவும், ஏனைய கிராம மக்கள் தமது உரிமைகளை எவ்வாறு அனுபவிக்கின்றனரோ அதே உரிமைகள் பெருந்தோட்டப்பகுதி மக்களுக்கும் நிச்சயம் கிடைக்கப்பெறும் எனவும் இ.தொ.காவின் உப தலைவரும், பெருந்தோட்ட மனிதவள நிறுவனத்தின் தலைவருமான பாரத் அருள்சாமி தெரிவித்தார்.ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து நேற்றுமுன்தினம் (04) புஸ்ஸலாவ மற்றும் நாவலப்பிட்டி ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற பிரசார கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் இதனை தெரிவித்த அவர்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வந்தால் ஊழல்வாதிகளைப் பாதுகாப்பார் என்ற கருத்தாடல் தான் கிராம மட்டங்களில் இன்று நிலவுகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எவரையும் பாதுகாக்கவில்லை. நாட்டையும், நாட்டு மக்களையும்தான் அவர் பாதுகாத்துள்ளார். குறுகிய காலப் பகுதிக்குள் அவர் தலைமையில்தான் ஊழல்களுக்கு எதிராக பல சட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. உரிய சட்ட ஏற்பாடுகள் இருந்தால் எவரும் தப்ப முடியாது. அதற்குரிய வழிகளை ஜனாதிபதி சிறப்பாக செய்துள்ளார். எனவே, ஊழல்வாதிகளை பாதுகாப்பார் எனக் கூறப்படுவது அப்பட்டமான பொய்யாகும்.

புதியவர்களுக்கு வாக்களித்து பரிசீலித்து பார்க்கக்கூடிய தருணம் இதுவல்ல. அவ்வாறு முயற்சித்தால் அது பாதக விளைவுகளை ஏற்படுத்தி மீண்டும் வரிசை யுகம் தோற்றம் பெறலாம். ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் பாராளுமன்றத் தேர்தல், மாகாணசபைத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் என்பன நடைபெறவுள்ளன. அவற்றின்போது மாற்றம் பற்றி பரிசீலித்து பாருங்கள். உங்களுக்கு பிடிக்காத, மக்களுக்கு சேவை செய்யாத அரசியல்வாதிகளை நிராகரியுங்கள். ஆனால் ஜனாதிபதி தேர்தல் என்பது அவ்வாறு அல்ல. அதில் எவ்வித ஒத்திகையையும் பார்க்ககூடாது.

தோட்டங்களின் காணி உரிமை அரசு வசம் உள்ளது. கம்பனிகளுக்கு அது குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனால் மக்கள் தமக்குரிய விடயங்களை செய்வதில் சட்டரீதியான தடைகள் உள்ளன. எனவேதான் தோட்டங்களை கிராமங்களாக்குவதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன. அவ்வாறு செய்துவிட்டு மக்களுக்கு காணி உரிமையை வழங்கிவிட்டால், தோட்ட நிர்வாகம் தலையிட முடியாது. தமக்குரிய காணியில் மக்கள் எதனையும் செய்யலாம். கிராமத்துக்கென தகனசாலை, மைதானம் என ஏனைய கிராமங்களில் உள்ளவாறு அனைத்தும் உள்ளடங்கும் என அவர் தெரிவித்தார்.

# கல்விப் புரட்சியின் மூலமே மலையகத்தில் நிலையான மாற்றத்தை ஏற்படுத்தலாம்

## மருதபாண்டி ராமேஷ்வரன் எம்.பி தெரிவிப்பு



கல்வி புரட்சி மூலமே மலையகத்தில் நிலையானதொரு மாற்றத்தை ஏற்படுத்தலாம் என தாம் உறுதியாக நம்புவதாகவும் அதனாலேயே, கல்வி அபிவிருத்திக்கு முக்கியத்துவமும், முன்னுரிமையும் வழங்கி வருவதாகவும் இ.தொ.காவின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து நேற்று முன்தினம் (04) பொகவந்தலாவை பகுதியில் இடம்பெற்ற பிரசார கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது இதனை தெரிவித்த அவர்,

கல்விக்காக அமைச்சர் ஜீவன் தொண்டமான் அதிகளவான நிதி ஒதுக்கீடுகளை செய்து வருகின்றார். அதனால்தான் இன்று அனைத்து துறைகளிலும் எமது சமூகத்தினர் பிரகாசித்து வருகின்றனர். பெருந்தோட்டப் பகுதி மக்களுக்கு சமுர்த்தி வழங்கப்படவில்லை. ஆனால் அஸ்வெசும வந்தபோது எமது மக்களும் உள்வாங்கப்பட வேண்டும் என அமைச்சர் ஜீவன் தொண்டமான் திட்டவட்டமாக எடுத்துரைத்தார்.

இதனையடுத்து எமது மக்களும் உள்வாங்கப்பட்டனர். அதுமட்டுமன்றி காணி உரிமை வழங்குவதற்குரிய ஏற்பாடுகளும் இடம்பெறுகின்றன. தோட்டங்களை கிராமங்களாக்குவதற்குரிய அமைச்சரவைப் பத்திரமும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எமது மலையகத்துக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்துள்ளார்.

வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றி வருகின்றார். எனவேதான் மக்கள் பக்கம் நின்று நாம் அவரை ஆதரிக்கின்றோம். அத்துடன் நடைமுறைக்கு சாத்தியமான விடயங்களையே அவர் உறுதிமொழியாக வழங்கி வருகின்றார்.

தேர்தலில் வாக்குவேட்டை நடத்துவதற்காக பெருந்தோட்ட நிறுவனங்களின் நிபந்தனைகளை ஏற்று ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு நாம் தயாரில்லை.

தொழிலாளர்களின் நலனே எமக்கு முக்கியம். எனவே, 1,700 ரூபாவை நிச்சயம் பெற்றுக்கொடுப்போம். தற்போது அடிப்படை நாள் சம்பளமாக 1,350 ரூபா கிடைக்கப்பெற்றுள்ளது. மேலதிக கொடுப்பனவாக 350 ரூபாவை பெறுவதற்குரிய பேச்சுவார்த்தை இடம்பெறுகின்றது.

இது தேர்தல் காலம் என்பதால், வாக்குகளைப் பெறுவதற்காக கம்பனிகளின் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட முடியாது. அவ்வாறு செய்தால் அது தொழிலாளர்களுக்கே பாதிப்பாக அமையும்.

எனவே, மீண்டும் வரிசை யுகம் ஏற்படாமல் இருப்பதற்காகவும், எமது மக்களின் வாழ்வு மேம்படுவதற்காகவும் செப்டெம்பர் 21 ஆம் திகதி சிந்தித்து வாக்களிக்குமாறு அவர் மேலும் தெரிவித்தார்.

# இரத்தினபுரியில் 08 மாதத்துக்குள் 115 டெங்கு நோயாளர்கள் பதிவு

இரத்தினபுரி, கிரியெல்ல பிரதேச செயலகப் பிரிவில், இவ் வருடத்தின் 08 மாத காலப்பகுதிக்குள் 115 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக கிரியல்ல சுகாதார வைத்திய அதிகாரி அசேல துசான் தெரிவித்தார்.

இதனால், கிரியெல்ல பிரதேச செயலக பிரிவில் டெங்கு நுளம்புகளை கட்டுப்படுத்தும் நோக்கத்தில் சிரமதான நிகழ்வுகள் மற்றும் வீதி நாடகம் போன்றவைகளும் இடம்பெற்றதாக அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், இலங்கையில் தற்போது 35 ஆயிரத்திற்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் அவர்களில் 3,500 டெங்கு நோயாளர்கள் இரத்தினபுரி மாவட்டத்திலேயே பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் சுகாதார அதிகாரி அசேல துசான் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இரத்தினபுரி மாவட்ட செயலாளர் வசந்த குணரத்னவின் கண்காணிப்பின் கீழ், கிரியல்ல பிரதேச செயலக காரியாலயம், சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம், குருவிட பிரதேச சபை கிரியெல்ல பொலிஸ் நிலையம் மற்றும் பிரதேசத்திலுள்ள சமூக சேவை அமைப்புகள் ஒன்றிணைந்து டெங்கு நுளம்புகளை கட்டுப்படுத்துவதற்கான விசேட வேலை திட்டங்களை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இரத்தினபுரியில் தபால் மூலம் வாக்களிக்க 338 மத்திய நிலையங்கள் ; 32,530 பேர் தகுதி

(பலாங்கொடை தினகரன் நிருபர்)

இரத்தினபுரி மாவட்டத்தில் தபால்மூலம் வாக்களிப்பதற்கு 32,530 அரசதிகாரிகள் தகுதி பெற்றுள்ளதாகவும் தபால்மூலம் வாக்களிப்பு 338 மத்திய நிலையங்களில் இடம்பெற்றுவருவதாகவும் இரத்தினபுரி மாவட்ட செயலாளர் மற்றும் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி வசந்த குணரத்ன தெரிவித்தார்.

கடந்த 04 ஆம் திகதி ஆரம்பமான தபால் மூலம் வாக்களிப்பு நடவடிக்கைகள், பொலிஸ் நிலையம், விசேட செயலணி பிரிவு, மாவட்ட செயலகம் மற்றும் தேர்தல் காரியாலயத்தில் இன்று(06) வரை இடம்பெற்று வருகின்றது.அதன்படி, நேற்றும் (05) இன்றும் (06) அனைத்து அரச நிறுவனங்களிலும் தபால்மூல வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட செயலாளர் தெரிவித்தார்.

இத்தினங்களில் தபால் மூல வாக்களிப்பை தவறும் அரசதிகாரிகளுக்கு எதிர்வரும் 11 ஆம், 12ஆம் திகதிகளில் மாவட்ட செயலக காரியாலயத்தில் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட செயலாளர் மேலும் தெரிவித்தார்.

# சிறுநீரகங்கள் இரண்டும் பாதிக்கப்பட்ட இளைஞருக்கு 615,000 ரூபா நிதியுதவி

## இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் ஏற்பாடு



சிறுநீரகங்கள் இரண்டும் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக பேராடும் நபரொருவருக்கு, கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமாரின் முயற்சியில் சுமார் 6,15,000 ரூபா நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இதற்கான காசோலையை, நோயாளியின் தாயாரிடம் இராஜாங்க அமைச்சர் கையளித்தார்.

பசறை, எல்டெப் தோட்ட கீழ்ப்பிரிவைச் சேர்ந்த 26 வயது இளைஞனின் இரண்டு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்டுள்ளதால் அவரின் உறவினர் ஒருவர் சிறுநீரகமொன்றை வழங்க முன்வந்துள்ளார்.

இவருக்கான சத்திர சிகிச்சை செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்விடயம் கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமாரின் கவனத்துக்கு கொண்டுச்செல்லப்பட்டது.

பாதிக்கப்பட்ட நபருக்கு நிதியுதவியை வழங்கும் முகமாக, ஆளுந்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் 60 பேரிடமிருந்து அவர்களின் சம்பளத்திலிருந்து அறவிடும்படியாக ஆறு இலட்சத்து பதினைந்தாயிரம் ரூபா நிதி சேகரிக்கப்பட்டு நிதி உதவிசெய்யப்பட்டுள்ளது.

# மொனராகலை வீதியில் விபத்து ; பாடசாலை மாணவி உயிரிழப்பு

## மற்றுமொரு மாணவி படுகாயம்

(ஊவா சுழற்சி நிருபர்)

பிபிலை, மொனராகலை வீதியில் நன்னபுராவ மகா வித்தியாலயத்துக் கருகில் இடம்பெற்ற வீதி விபத்தில் இரு மாணவிகள் படுகாயமடைந்துள்ள நிலையில், ஒரு மாணவி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பிபில, மெதகம, காலபெந்கெடிய பிரதேசத்தைச் சேர்ந்த 15 வயதுடைய ஆர்.எம்.துலாஸி கேஷலா என்ற மாணவியே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார். இவ் விபத்து கடந்த மாதம் 27 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

பிபில, நன்னப்புராவ மகா வித்தியாலயத்தில் தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவிகள் இருவர் பகுதி நேர வகுப்பை முடித்து விட்டு, வீடு திரும்புவதற்காக பஸ்ஸூக்காக காத்திருந்தபோது, எதிர்திசையில் வேகக் கட்டுப்பாடின்றி வந்த காரொன்று மதிலில் மோதி, மாணவிகள் மீது குடைசாய்ந்துள்ளது.

இதில், படுகாயமடைந்த இரு மாணவிகள் பிபில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் அதிலொரு மாணவி மேலதிக சிகிச்சைக்காக பதுளை போதனா வைத்திசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர், சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் (4) உயிரிழந்ததாகவும் மெதகம போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில், பதுளை, புசல்லாவை, தல்தென பகுதியைச் சேர்ந்த 18 வயதுடைய சுற்றுலா உதவியாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்

கைதுசெய்யபட்ட இளைஞனை பிபில நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது, சந்தேகநபரை எதிர்வரும் 10 திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மெதகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது,

# கடும் மழையால் பத்தாயிரம் தொழிலாளர்கள் பாதிப்பு

இரத்தினபுரி மாவட்டத்தில், கடந்த சில நாட்களுக்கு முன்னர் பெய்த கடும் மழை காரணமாக, சுமார் பத்தாயிரம் பேரின் தொழிற்றுறை வருமானம் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தொடர் மழை காரணமாக, பல ஆறுகள் பெருக்கெடுத்தமையினால், இரத்தினக்கல் அகழ்வு தொழிலில் ஈடுபடும் சுமார் பத்தாயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், தேயிலை, இறப்பர், கொழுந்து பறித்தல் மற்றும் பால் சேகரித்தல் போன்ற தொழிற்றுறையைச் சேர்ந்தவர்களும் கடந்த சில நாட்களாக பெய்த கடும் மழையினால் அசௌரியங்களுக்குள்ளாகியுள்ளதாக கவலை வெளியிட்டுள்ளனர்.

# கடந்த மூன்று நாட்களில் 06 கொள்ளைச் சம்பவங்கள்

## ஆடையின்றி செல்லும் மர்ம நபர்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

கடந்த மூன்று நாட்களாக காவத்தை மற்றும் அதனை அண்மித்த சில பகுதிகளில் பல கொள்ளைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக காவத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்படி, காவத்தை நகரில் கையடக்கத் தொலைபேசி வியாபார நிலையம், இறப்பர் சேகரிப்பு நிலையம், சில்லறை வியாபார நிலையம் ஆகியவற்றில் இவ்வாறு கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அத்துடன் கெட்டேதன்ன என்ற புறநகர பகுதியில் சில்லறை வியாபார நிலையமொன்றிலும் கொள்ளையிடப்டப்பட்டுள்ளது. மேலும். வெல்லந்துர பகுதியில் வீடொன்றுக்குள் ஆடையின்றி நுழைந்த திருடன், பெண்களை அச்சுறுத்தி கொள்ளையிட முயற்சித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இதேவேளை, எல்லெகிவத்த பகுதியில் பல வீடுகள் உடைக்கப்பட்டுள்ள நிலையில் இதில் ஒரு சம்பவம் வீடொன்றில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.டி.வி கெமராவில் பதிவாகியுள்ளது. இச்சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் உயிரிழப்பு

தம்புள்ள தினகரன் நிருபர்

காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி 50 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவமொன்று நாவுல பிரதேச செயலக பிரிவிலுள்ள ரஜாவெல கிராமத்தில் பதிவாகியுள்ளது.

கொன்கஹவெவ ரஜாவெல பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதுடைய மூன்று பெண் பிள்ளைகளின் தந்தையான யூ.ஜி. சமிந்த பண்டார என்பவரே இவ்வாறு காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர், அவரது வீட்டிற்கருகில் இடம்பெற்றிருந்த மரண சடங்கொன்றில் கலந்துகொண்டு தனது நண்பர்கள் இருவருடன் இரவுவேளையில் வீடு திரும்புகையில், காட்டு யானை துரத்தியுள்ளது.

இதன்போது மூவரில் இருவர் தப்பிச் சென்றுள்ள நிலையில், குறித்த நபர் யானையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளதாக கிராமவாசிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில், ரஜாவெல கிராமத்துக்கு யானை பாதுகாப்பு மின்வேலி அமைத்துக்கொடுக்கப்பட்ட போதிலும், அவ்வேலிக்கு இன்னமும் மின் இணைப்பு ஏற்படுத்திக்கொடுக்கப்படவில்லையென கிராமவாசிகள் குற்றஞ்சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நுவரெலியாவில் அமைதிவழி போராட்டம்

பொகவந்தலாவ நிருபர்



"சகல உரிமைகளும் கொண்ட மலையகம்" எனும் தொனிப்பொருளின் கீழ், கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில், நுவரெலியாவில் நேற்று (05) அமைதிவழி போராட்டமொன்று இடம்பெற்றது.



இந்த அமைதி வழி போராட்டமானது நுவரெலியா தலாவாகலை பிரதான வீதியில் ஆரம்பிக்கப்பட்டு நுவரெலியா சினிசிட்டா மண்டபத்தின் நுழைவாயினை வந்தடைந்தது.

இதன்போது, ஆயரக்கணக்கானோர் இந்த போராட்டத்தில் ஈடுபட்டிருந்ததுடன், பல வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தி நின்றதையும் அவதானிக்க முடிந்தது. இதனைதொடர்ந்து மாநகரசபை மண்டபத்தில் மக்களுக்கான பொது கூட்டம் இடம்பெற்றது. இதன்போது,எதிர்வரும்ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் மலையக மக்களுக்கு தீர்க்கப்பட வேண்டிய உரிமைசார் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் ஏனைய சமூகங்களுடன் மலையக தமிழ் மக்களையும் இணைத்து பயணிக்க பாதையமைத்தல் தொடர்பாக தயாரிக்கப்பட்டிருந்த அறிக்கை தொடர்பாகவும் முன்மொழியப்பட்டது.

# இரத்தினபுரி மாவட்டத்தில் 67 இடங்களில் மண்சரிவு அபாயம்

இரத்தினபுரி மாவட்டத்தில் 16 பிரதேச செயலகப் பிரிவுகளில், 67 இடங்கள் மண்சரிவு அபாயமுள்ள பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

பெரும்பாலும் அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்கும் மாவட்டங்களில் இரத்தினபுரி மாவட்டமும் உள்ளடங்குவதனால், இம் மாவட்ட மக்களை ஒன்றிணைத்து அறிவுறுத்தல் வழங்கும் வேலை திட்டமொன்றை நடத்தவது சிறந்ததென இரத்தினபுரி மாவட்ட செயலாளர் கே. ஏ. டப்ளிவ். எல். குணரத்ன தெரிவித்தார்.அத்துடன், இனங்காணப்பட்டுள்ள மண்சரிவு அபாயமுள்ள 67 மக்கள் குடியிருப்புக்களையும் இனங்காட்டி, வரைபடத்துடன் கைநூல் ஒன்றினை மக்களுக்கு பகிர்ந்தளிக்க தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

மேலும், இரத்தினபுரி மாவட்டத்தில் மண்சரிவு அபாயமுள்ள வீடுகள் மற்றும் இடங்கள் தொடர்பாகவும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் ஆராய்ந்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தொலைநோக்கு பார்வை மிக்க தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட 09ஆவது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான ஜனாதிபதித் தேர்தலில் 39 பேர் அபேட்சகர்களாக வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர். என்றாலும், அவர்களில் ஒருவரே ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார். அவர் யாராக இருக்க வேண்டும், எப்படிப்பட்டவராக இருக்க வேண்டும் என்பதை தீர்மானிப்பது அவசியம்.

39 ஜனாதிபதி வேட்பாளர்களிலும் நாடு முகம் கொடுக்கக்கூடிய சவால்களை எதிர்கொள்ளக்கூடிய முன்னோடி அனுபவமுள்ள ஒரு வேட்பாளரைத் தெரிவு செய்வது வாக்காளர்களின் பொறுப்பாகும். அந்த வகையில் தொலைநோக்கு பார்வை கொண்ட தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே களத்தில் இருக்கிறார். அவரை இலங்கையின் 9வது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தெரிவு செய்ய வேண்டியதற்கான நியாயங்கள் ஏராளம் உள்ளன. அவற்றை நாம் கருத்தில் கொண்டு செயற்படுவது அவசியம்.

# கொஞ்சம் வரலாற்றைப் பார்ப்போம்

கொழும்பு றோயல் கல்லூரியில் கல்வி பயின்ற ரணில் விக்கிரமசிங்க கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்ட பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டு சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று நாட்டின் பிரதமரான ஒரே நபர் இவர்தான்.

1970 இல் ஐக்கிய தேசியக் கட்சியின் களனித் தொகுதியின் பிரதம அமைப்பாளராகவும் பின்னர் பியகம தொகுதியின் பிரதான அமைப்பாளராகவும் ஆனார். ஜே.ஆர் ஜயவர்தன அரசாங்கத்தின் அமைச்சரவையில் இளம் அமைச்சராக இருந்த இவர், இளைஞர் விவகார அமைச்சராக நியமிக்கப்பட்டார். அவரது அரசியல் வாழ்க்கையில், அவர், கல்வி, நிதி, இளைஞர் விவகாரம், பொருளாதார மேம்பாடு, தொழில்நுட்பம் உள்ளிட்ட பல அமைச்சு பதவிகளை மாத்திரமல்லாமல் எதிர்க்கட்சி தலைவராகவும் பிரதமராகவும் பதவிகளை வகித்துள்ளார். அவர் அமைச்சர் பதவிகள் வகித்த காலத்தில் நாட்டுக்கு ஆற்றியுள்ள சேவைகள், புரிந்துள்ள சாதனைகள், எதிர்காலத்திற்கான புதிய பாதைகளைத் திறப்பதற்கு அடித்தளமிட்டுள்ளன.

தொலைநோக்கு கொண்ட அரசியல் தலைவரான இவர், 1993 முதல் 2022 வரையான காலப்பகுதியில், ஐந்து தடவைகள் இலங்கையின் பிரதமராகப் பதவி வகித்துள்ளார். 1994 முதல் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக இருந்து வருகிறார்.

**அராஜகம் மற்றும் போராட்டம்**

2022 இன் முதல் பாதியில் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டு முற்றிலும் அராஜகமான சூழ்நிலை நாட்டில் ஏற்பட்டிருந்தது. அண்மைக்கால வரலாற்றில் ஒட்டுமொத்த நாடும் மிக மோசமான பொருளாதார, சமூக, அரசியல் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டது. எரிபொருள், பால் மா, சமையல் எரிவாயு உள்ளிட்ட அனைத்துக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டதால் மக்கள் நீண்ட வரிசையில் நாட்கணக்கில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதற்கு எதிரான கோபம் மக்கள் போராட்டமாக வெளிப்பட்டது. இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியை மக்களே பதவியில் இருந்து அகற்றிய முதல் சந்தர்ப்பமாக அது அமைந்தது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ச 2022 ஜூலை 13ஆம் திகதி நாட்டை விட்டு வெளியேறினார். அச்சமயம் நாட்டின் தலைமையை ஏற்க எவரும் முன்வராத சூழலில் நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவே அப்பதவியை ஏற்றார். அவர் நாட்டைப் பொறுப்



பேற்ற போது, இலங்கையின் வெளிநாட்டு செலாவணி கையிருப்பு 50 மில்லியன் டொலருக்கும் குறைவாகவே இருந்தது. அச்சமயம் அவர் தமது அரசியல் முதிர்ச்சியை வெளிப்படுத்தத் தொடங்குகினார்.

அதன் ஊடாக அவர் மீது நாட்டு மக்களிடையே நம்பிக்கை ஏற்பட்டது. நாளாந்த மின்வெட்டு முடிவுக்கு வந்தது. அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு நீங்கியது. எரிபொருள், எரிவாயு வரிசை யுகம் நாட்டை விட்டு நீங்கின. பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் வழக்கம் போன்று இயங்கும் நிலை உருவாகின. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்த பொருளாதார வேலைத்திட்டங்கள் மற்றும் தீர்மானங்களினால் நாடு பொருளாதார மறுமலர்ச்சி பாதையில் பிரவேசித்தது.

**இணையம் மற்றும் கையடக்கத் தொலைபேசி**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்ற தொலைநோக்கு தலைவரின் எதிர்காலப் பார்வைக்கு இரண்டு சான்றுகள் உங்கள் கைகளில் உள்ளன. நீருக்கடியில் இருப்பதும், கைப்பேசியும் தான் இரண்டு ஆதாரங்கள் என்று சொன்னால், நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள் என்பதில் சந்தேகமில்லை.

தொலைநோக்கு பார்வை கொண்ட தலைவர் ரணில் விக்கிரமசிங்க தான் தெற்காசியாவில் இணையத்தை பயன்படுத்தும் முதல் நாடாக இலங்கையை மாற்றினார். இணையம் அறிமுகப்படுத்தப்பட்டபோது பழங்குடியினர் பொறுத்துக் கொள்ளவில்லை. இணையத்தை சாப்பிட முடியுமா? என்று கேட்டார்.

இன்று அதே இணையத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகப் பொய்ப் பிரசாரங்களை முன்னெடுப்பதற்கு பயன்படுத்தப்படுவது எவ்வளவு வேடிக்கையானது?

அதேபோன்று தொலைநோக்கு பார்வை கொண்ட தலைவரான ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சிகளின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் கைத்தொலைபேசியை இலங்கைக்கு அறிமுகப்படுத்தினார்.

இணையம், கணினி, கையடக்கத் தொலைபேசி அறிமுகத்துடன் நின்றுவிடாத ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, உலகில் எதிர்கால சந்ததியினரின் இருப்பு பற்றிய தொலைநோக்குப் பார்வையைக் கொண்டிருந்ததால் கணனி விஞ்ஞான கட்டமைப்புக்கு முன்னுரிமை அளித்து வேலைத்திட்டங்களை ஆரம்பித்தார்.

இவர் நாட்டுக்காக ஆற்றிய பணிகளில் ஒரு சிறுபகுதியே இவை. எனினும் அவர் அரசியலில் இருந்து புகழோ, பணமோ, அதிகாரமோ தேடவில்லை என்பதற்கு போதுமான ஆதாரங்கள் உள்ளன. ஜென்டில்மேன் குணங்கள் நிரம்பிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பாரம்பரியச் சொத்தைக் கூட தொண்டுக்காக நன்கொடையாக அளித்துள்ளார். ஆகவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி தீர்மானம் எடுக்க வேண்டிய பொறுப்பு மக்கள் முன்பாக உள்ளது. அது நாட்டின் எதிர்காலத்திற்கான முதலீடாகும்.

ஏ.என்.எம். பௌமி
புத்தளம்

# பி. தயாரத்னவின் 38 வருடகால அரசியல் பயணம் இன்றைய அரசியல்வாதிகளுக்கு சிறந்த முன்மாதிரி

**திகாமடுல்லயில் அரை நூற்றாண்டு எனது பயணம்' நூல் நாளை வெளியீடு**

1977 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை 38 வருடங்களாக பாரராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய முன்னாள் அமைச்சர் பி.தயாரத்ன அவர்களின் வாழ்க்கைத் தகவல்களைக் கொண்ட ' திகாமடுல்லயில் அரை நூற்றாண்டு எனது பயணம் ' என்ற நூல் 2024ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 07ஆம் திகதி(நாளை) பண்டாரநாயக்க மாநாட்டு மண்டப லோட்டஸ் வளாகத்தில் வெளியிடப்படவுள்ளது.

களுத்துறை மாவட்டத்தின் கொடிகமுவ கிராமத்தில் 01.10.1936 இல் பிறந்த தயாரத்ன, ஏழு பேர் கொண்ட குடும்பத்தில் இரண்டாமவராக இருந்தார். தந்தை பொல்கஸோவிட்ட வேத்தர கிராமத்தைச் சேர்ந்த பெடிகிரிகே விமலசேன ஆவார். தாயார் தெனிப்பிட்டியைச் சேர்ந்த லீலாவதி குணவர்தன ஆவார்.

வேத்தர கிராமப் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைப் பெற்ற அவர், இடைநிலைக் கல்விக்காக 1946 இல் கொழும்பு ஆனந்த வித்தியாலயத்தில் சேர்ந்தார். பாடசாலை படிப்பை முடித்தவுடன் மருதானை தொழில்நுட்பக் கல்லூரியில் நுழைந்து இரண்டு வருட பொறியியல் படிப்பை மேற்கொண்டார். அவர் 1961 இல் ,ங்கிலாந்து சென்று பிரைட்டன் தொழில்நுட்பக் கல்லூரியில் (தற்போது பிரைட்டன் பல்கலைக்கழகம்) சேர்ந்தார்.

அங்கு 1965 இல் மின்பொறியியலாளர் பட்டம் பெற்றார். அவர் தாய்நாட்டிற்கு வந்து 03 வாரங்களின் பின்னர் 1965 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி கல் ஓயா அபிவிருத்திச் சபையின் உதவி மின்பொறியியலாளராக நியமிக்கப்பட்டார்.

1. கீழே விபரிக்கப்பட்டவாறும் பெசேவ நீங்கலாக ஏறத்தாழ 10.1 மில்லியன் ரூபாவில் மதிப்பீடு செய்யப்பட்டதுமான ரிதியகம சவாரி பூங்காவில் பிரேத பரிசோதனை அறையின் நிர்மாணத்திற்காக தகுதியும் தமைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்கள, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரைக்குறி பொறியிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

   வேலைத்தளமானது ரிதியகம தேசிய மிருகக்காட்சிசாலை சவாரி பூங்காவில் அமைந்துள்ளது. நிர்மாண வேலையானது பிரதானமாக தளத்தை சுத்தமாக்கல், கொங்கிறீட் வேலைகள், உருக்கு வேலைகள், நீர்ப்புகா வேலைகள் மற்றும் மின்னியல் வேலை மற்றும் தளத்தின் குழாய் வேலைகள் ஆகியவற்றை பிரதானமாக கொண்டுள்ளது.

   **வேலைகளின் முழுமையான பூர்த்திசெய்யப்பட வேண்டிய காலமானது 90 நாட்களாகும்.**

2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதியைப் பெறுவதற்காக, சித்திகரமான விலைமனுதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டோரின் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் பின்வரும் தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்தவராகவுமிருத்தல் வேண்டும்.
   - தரம் சி-6 அல்லது சி-5 மற்றும் மேற்பட்டதில் கட்டிட நிர்மாண வேலைகளுக்காக நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை நிறுவனத்துடன் பதிவு பெற்றிருத்தல்.

4. ஒப்பந்தத் தகைமைக்காக தேவைப்படும் தகைமைத் தேவைப்படுத்தல்கள் பின்வருமாறு.

   கடந்த ஐந்து வருடங்களில் நிறைவேற்றப்பட்ட நிர்மாண வேலையின் வருடாந்த சராசரி நிதிப்புரள்வானது 15.2 மில்லியன் ரூபாவாக இருத்தல் வேண்டும்.

   நிகரான தன்மை மற்றும் சிக்கல் தன்மையில் அத்துடன் நிகரான மற்றும் மேற்பட்ட பெறுமதியில் நிர்மாண செயற்றிட்டமொன்றின் பிரதான ஒப்பந்தக்காரராக எதிர்பார்த்தளவு பூர்த்தி செய்திருத்தல்.

   ஏனைய ஒப்பந்தரீதியிலான கடப்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்ட பின்னர், அத்துடன் இந்த ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு முற்பணக்கொடுப்பனவுகள் நீங்கலாக திரவச் சொத்துக்கள் மற்றும்/ அல்லது கடன் வசதிகளின் ஆகக் குறைந்த தொகையானது 10.1 மில்லியன் ரூபாவிற்கு குறையாமலிருத்தல் வேண்டும்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை தெஹிவளை,அனகாரிக்க தர்மபால மாவத்தை, தேசியமிருகக்காட்சிச்சாலைகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்திடமிருந்து பெற்று (தொலைபேசி: 011-2896779, தொலைநகல்: 011-2731851) 2024.09.06 ஆம் திகதியிலிருந்து 2024.09.26 ஆம் திகதிவரையும் சாதாரண வேலை நேரங்களில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

6. 2024.09.06 ஆம் திகதியிலிருந்து 2024.09.25 ஆம் திகதியன்று வரையும் சாதாரண வேலைநாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் (3,500 இலங்கை ரூபாவை மூவாயிரத்து ஐந்நூறு) செலுத்திய பின்னர், மேலேயுள்ள முகவரிக்கு தேசிய மிருகக்காட்சிச்சாலைகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

7. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2024.09.26 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக மேலேயுள்ள முகவரியில் கிடைக்கும் வகையில் பணிப்பாளர் நாயகம், தேசிய மிருகக்காட்சிச்சாலைகள் திணைக்களம், அனகாரிக்க தர்மபால மாவத்தை, தெஹிவளை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் இரு பிரதிகளில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது தெஹிவளை, அனகாரிக்க தர்மபால மாவத்தை, தேசிய மிருகக்காட்சிச்சாலைகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடியபின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.

8. விலைமனுவானது 2024.11.12 ஆம் திகதியன்று வரையும் (விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 77 நாட்களுக்கு) செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

9. அனைத்து விலைமனுக்களும் 122,000 ரூபா (ஒரு இலட்சத்து இருபத்திரண்டாயிரம் ரூபா) பெறுமதியுள்ள விலைமனு பிணையாக அல்லது வங்கி உத்தரவாதமாக இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு பெற்ற எந்தவொரு வர்த்தக வங்கியிலிருந்தும் பெறப்பட்டதாக அல்லது 2025.01.08 ஆம் திகதியன்று வரையும் (விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 105 நாட்கள்) செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதுமாகவிருத்தல் வேண்டும்.

10. ரிதியகம சவாரி பூங்கா தேசிய மிருகக்காட்சிசாலைகள் மேலதிக பணிப்பாளரின் அலுவலகத்தில் 2024.09.16 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மிருகக்காட்சிச்சாலைகள் திணைக்களம்,**
**தெஹிவளை.**

---

# பெறுகை அறிவித்தல்

## ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தின் ரிதீபான நூல் சாயமிடும் நிலையத்தில் சாயக் கழிவுநீர் சுத்திகரிப்புப் பிரிவொன்றை நிர்மாணித்தல் - 2024

ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவராக என்னால் ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்திற்கு 2024ஆம் வருடத்திற்குத் தேவையான மேற்கூறிய அம்சத்திற்காக உள்நாட்டு உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள் மற்றும் இறக்குமதியாளர்களிடமிருந்து 2024-08-19ஆம் திகதிய பத்திரிகை விளம்பரம் மூலம் விலைமனுக்கள் கோரப்பட்டன என்பதுடன் அதில் விலைமனுகள் திறக்கப்படும் திகதி 2024-09-09ஆம் திகதி என இருந்தது. அந்த விலைமனுக்கள் திறக்கப்படும் திகதி இத்தால் நீடிக்கப்படுகின்றது.

**விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம்** - 2024-09-25ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தின் மாகாண கைத்தொழில் பணிப்பாளரின் உத்தியோகபூர்வ அறையில்

**விலைமனுக்கள் திறக்கப்படுதல்** - 2024-10-02ஆம் திகதி பி.ப. 02.00 மணிக்கு ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தின் மாகாண கைத்தொழில் பணிப்பாளரின் உத்தியோகபூர்வ அறையில்

02. இது தொடர்பான மேலதிக விபரங்களை ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்திற்கு வருகை தந்து அல்லது எமது 055 2222607 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

2024-09-05ஆம் திகதி.

**மாகாண கைத்தொழில் பணிப்பாளர்,**
**பெறுகைக் குழுவின் தலைவர்.**

**ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம்,**
**ஊவா மாகாண சபை,**
**பதுளை.**

---

# மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்

## 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்து பதிவுச் சட்டம்
## பிரிவு 55

புத்தளம் மாவட்டத்தின் வென்னப்புவ பிரதேச செயலாளர் பிரிவில் வென்னப்புவ எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல 410028 பிரிவு இல 02 தாள் இல 01 துண்டு இல 11 ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த. இல. 805, வன்சஸ் லாவஸ் பெரேரா மாவத்தை, வென்னபுவ எனும் விலாசத்தைக் கொண்ட பொன்னம்பெருமகே ஹெலென் ரத்ன பெர்ணான்டோ என்பவர் 15.12.2021ஆந் திகதி மரணமடைந்துள்ளார். அவரது உரித்தாளர் எவரேனும் மாரவில வீதி, நாத்தாண்டிய என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்திற்கு 2024.10.05ஆந் திகதிக்கு முன்னர் சமுகம் தரவும்.

**ஆணையாளர் நாயகம்**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்.**

---

# பெறுகை அறிவித்தல்

## தனமல்வில, கிதுல் கோட்டே நீண்டதூர பஸ் சேவைக்காக வசதிகள் வழங்கும் நிலையம் மற்றும் முழுமையான வளாகத்தை குத்தகைக்கு விடல்

### ஊவா மாகாண விளையாட்டு அமைச்சு
### ஊவா மாகாண சபை

ஊவா மாகாண விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார, சுற்றுலா, போக்குவரத்து, கலாசார மற்றும் நெசவுக் கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சிற்கு சொந்தமான தனமல்வில, கிதுல் கோட்டே நீண்டதூர பஸ் சேவைக்காக வசதிகள் வழங்கும் நிலையங்கள் உட்பட முழுமையான வளாகத்தை குத்தகைக்கு விடுவதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. இவ் இடத்தை குத்தகைக்கு விடுவதற்கான குறித்த கேள்வி அழைப்பு (Invitation for Bid) மற்றும் முழுமையான விபரங்களை ஊவா மாகாண விளையாட்டு அமைச்சிற்கு சொந்தமான உத்தியோகபூர்வ இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.
2. இணையதளம் - www.sportsmin.up.gov.lk
3. கேள்வி விண்ணப்பங்களை 2024.09.06 முதல் 2024.09.26 வரை விடுமுறை தினம் தவிர்த்து அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ள முடிவதுடன் 2024.09.27 மு.ப. 10.00 இற்கு கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளல் முடிவுறுத்தப்படும்.
4. 2024.09.27 மு.ப. 10.00 இற்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்.
5. இது பற்றிய மேலதிக விபரங்களை கீழ்க்காணும் தொ.பே.இலக்கம் ஊடாக பெற்றுக் கொள்ளலாம்.

   தொ.பே.இலக்கம் : 055 - 2231973

**2024.09.06ம் திகதி**
**ஊவா மாகாண விளையாட்டு அமைச்சு,**
**ஊவா மாகாண சபை**
**பதுளை**

**செயலாளர்,**
**ஊவா மாகாண**
**விளையாட்டு அமைச்சு**

---

லங்கா இலெக்ரிசிட்டி கம்பனி (பிரைவட்) லிமிட்டட்

# பழுதடைந்த கொங்கிறீட் தூண்களை அகற்றுதல்

நுகேகொடை தூண் களஞ்சியத்தில் உள்ள பழுதடைந்த கொங்கிறீட் தூண்களை அகற்றுவதற்காக பொறியிடப்பட்ட விலைமனுக்களை லங்கா இலெக்ரிசிட்டி கம்பனி (பிரைவேட்) லிமிட்டட் அழைக்கின்றது.

- பழுதடைந்த கொங்கிறீட் தூண்கள் (வலுவூட்டப்பட்டது மற்றும் முன் அழுத்தப்பட்டது - 01 லொட்

**பரிசீலனை**

முன் ஏற்பாட்டின் பின்னர் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 4.00 வரை **லங்கா இலெக்ரிசிட்டி கம்பனி (பிரைவட்) லிமிட்டட், நுகேகொட தூண் களஞ்சியத்தில் (சிரிகொத்த கட்டிடத்திற்கு அருகில்)** பரிசீலனைக்காக தூண்கள் காணப்படும்.

செல்லுபடியாகும் விலைமனுப் படிவத்தைப் பெற்றுள்ள விலைமனுதாரர்களுக்கு மாத்திரம் பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கப்படும்.

**விலைமனுப் படிவங்கள்:**

ஓர் மீளளிக்கப்படாத ரூ. 1000/- செலுத்துவதன் பேரில் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை லங்கா இலெக்ரிசிட்டி கம்பனி (பிரைவட்) லிமிட்டட், நுகேகொட கிளை அலுவலகத்திலிருந்து விலைமனு ஆவணங்கள் மற்றும் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**விலைமனுக்கள் மூடப்படல் மற்றும் திறத்தல்**

**விலைமனுக்கள் 2024 செப்டெம்பர் 20 பி.ப. 3.00 மணிக்கு மூடப்படும். அத்துடன் மூடப்படும் நேரத்தின் பின்னர் உடனடியாகத் திறக்கப்படும்.**

**பிரதம பொறியியலாளர் (கிளை) நுகேகொடை,**
**லங்கா இலெகரிசிட்டி கம்பனி (பிரைவட்) லிமிட்டட்,**
**இல. 240, ஹைலெவல் வீதி,**
**நுகேகொடை.**

**தொ.பே. - 011 2856380, 2813509**

---

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## உள்ளூராட்சித் திணைக்களம்

### ஊவா மாகாணம்

1. திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் இயைபுடைய உள்ளூராட்சி நிறுவனங்களின் (ஊவா மாகாணம்) சார்பில் பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம், வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
2. விலைக்கோரல்கள் ''1987ஆம் ஆண்டின் பொது ஒப்பந்தச் சட்டம் இல. 03" இன் விதிகளால் நிர்வகிக்கப்படுகிறது. ஆகையால், மொத்த மதிப்பு ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சினால் மட்டும் (இல. ரூபா 5,000,000.00) இலங்கையின் பொது ஒப்பந்தங்களின் பதிவாளரால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் பதிவு சான்றிதழை (FORM PCA 03) விலைமனுதாரர் அந்தச் சட்டத்தின் 11வது பிரிவின் பிரகாரம் விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். (http://www.drc.gov.lk/)
3. விலைக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்.
4. ஒப்பந்தத்தைக் கையளிக்க தகுதி பெறுவதற்கு வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்திற்கு இயைபுடைய துறையில் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும்.
5. தகுதித் தேவைப்பாடுகள் விலைமனு ஆவணத்தின் 4ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலதிக விவரங்கள் விலைமனு ஆவணத்தின் அட்டவணையின் 5ஆம் பிரிவில் (விலைக்கோரல் தரவு / ஒப்பந்த தரவு) வழங்கப்பட்டுள்ளன.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை அட்டவணையில் பட்டியலிடப்பட்ட அந்தந்த உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர் / செயலாளர் அவர்களிடமிருந்து வாரநாட்களில் 09.00 மணித்தியாலம் முதல் 15.00 மணித்தியாலம் வரை பெற்றுக்கொள்ளலாம்.
7. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் அந்தந்த உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அல்லது ஊவா - உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு 2024-09-06ஆம் திகதி முதல் 2024-09-26ஆம் திகதி வரை 09.00 மணித்தியாலம் முதல் 15.00 மணித்தியாலம் வரை மீளளிக்கப்படாத 7500.00 கட்டணத்தைச் செலுத்தி ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கட்டணங்களை ரொக்கப் பணமாகவே செலுத்துதல் வேண்டும்.
8. விலைமனுக்களை 2024-09-27ஆம் திகதி 10.00 மணித்தியாலம் அல்லது அதற்கு முன்பதாக உள்ளூராட்சித் திணைக்களம் - ஊவா, மார்ட்டின் சில்வா மாவத்தை, பதுளை எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
9. பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் சகல விலைமனுக்களுடன் விலைமனுப் பிணை இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
11. 2024-09-13ஆம் திகதி 10.00 மணித்தியாலத்தில் பதுளை, மார்ட்டின் சில்வா மாவத்தை, ஊவா - உள்ளூராட்சித் திணைக்களத்தில் விலைக்கோரலுக்கு முன்னரான கூட்டம் இடம்பெறும். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் தங்கள் சொந்த செலவில் இந்த கூட்டத்தில் பங்கேற்கலாம்.

| உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்த இல. | வேலை விபரங்கள் | மதிப்பீட்டுக் கிரயச் செலவு (இல.ரூ. மில்லியன்) | ஒப்பந்தக் காலம் | தேவையான தரம் | விலைக் கோரல் பிணைத் தொகை (ரூபா) | விலைக் கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் | விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இடம் மற்றும் தொ.பே. இலக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| தனமல்வில பிரதேச சபை | CLG/UP/MO/TPS/ W/C/2024/1 | தனமல்வியில் தகனச்சாலையை நிர்மாணித்தல் | 25.74 | 80 நாட்கள் | C5 மற்றும் C4 கட்டிடங்கள் | 257,400.00 | 2025-01-24 | உள்ளூராட்சித் திணைக்களம் - ஊவா, மார்ட்டின் சில்வா மாவத்தை, பதுளை. 0552222407 |
| படல்கும்புர பிரதேச சபை | CLG/UP/MO/ BKPS/ W/C/ 2024/1 | படல்கும்புரயில் தகனச்சாலையை நிர்மாணித்தல் | 25.65 | 80 நாட்கள் | C5 மற்றும் C4 கட்டிடங்கள் | 256,500.00 | 2025-01-24 | |
| சியம்பலாண்டுவ பிரதேச சபை | CLG/UP/MO/ SPS/ W/C/ 2024/1 | சியம்பலாண்டுவயில் தகனச்சாலையை நிர்மாணித்தல் | 25.65 | 80 நாட்கள் | C5 மற்றும் C4 கட்டிடங்கள் | 256,500.00 | 2025-01-24 | |

**ஆணையாளர்,**
**உள்ளூராட்சித் திணைக்களம்,**
**ஊவா மாகாணம்.**
**0552222407**
2024-09-06.

---

# சிலாபம் பிரதேச சபை

## 2025 – பெறுகை அறிவித்தல்

01. சிலாபம் பிரதேச சபைக்குச் சொந்தமான இறைச்சிக்கடை, பொதுக்காணிகளில் தென்னை விளைச்சல், மாதம்பை பஸ் நிறுத்தும் நிலையம் மற்றும் பொது மலசலகூடம், மாதம்பை வார சந்தையை 2025.01.01 முதல் 2025.12.31 வரை ஒரு வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கு மற்றும் மாதம்பை சுற்றாடல் நிலையத்தை 2025.01.01 முதல் 2026.12.31 வரை 2 வருடத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கு, முன்னேஷ்வரம் ஓய்வு மண்டபம், மாதம்பை பஸ் நிறுத்துமிட இரு மாடிக் கட்டிடத்தின் F2 கடை அறையை 2025.01.01 முதல் 2027.12.31 வரை மூன்று வருடங்களுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கும் 2024.09.06 முதல் 2024.09.26 பி.ப.3.00 வரை பெறுகை மாதிரிப் பத்திரங்கள் என்னால் விநியோகிக்கப்படும் என்பதை இத்தால் அறிவிக்கிறேன்.
02. 2024.09.06 முதல் கேள்விப் பிணை மற்றும் படிவக் கட்டணத்தை செலுத்திய பின்னர் சிலாபம் பிரதேச சபையின் தலைமையகத்தில் பெறுகை மாதிரிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

    (கேள்விப் பிணை பெறுகை விண்ணப்பங்கள் திறக்கப்பட்ட பின்பு மீளளிக்கப்படும்)
03. பூர்த்தி செய்யப்பட்டு பொறியிடப்பட்ட பெறுகை விண்ணப்பங்கள் 2024.09.27 மு.ப.10.00 வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் மு.ப.10.00 இற்கு பிறகு கிடைக்கும் சகல விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.
04. பெறுகை விண்ணப்பங்கள் திறத்தல் 2024.09.27 மு.ப.10.30 இற்கு சிலாபம் பிரதேச சபை தலைமையகத்தில் இடம்பெறும்.
05. பெறுகை நிபந்தனைகள் மற்றும் மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் நேரில் அல்லது தொ.பே.இல.032-4934226/032-2247675 மூலம் விசாரித்துப் பெற்றுக்கொள்ளலாம்.
06. விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளும் போது விண்ணப்பதாரரின் ஆளடையாளத்தை உறுதி செய்வதற்காக ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் அடையாள அட்டை அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய அடையாள அட்டையை மற்றும் பதிவை உறுதி செய்வதற்காக கிராம அதிகாரி சான்றிதழை கட்டாயமாக சமர்ப்பித்தல் வேண்டும்.
07. சகல பெறுகைகள் பற்றிய இறுதித்தீர்மானம் எடுத்தல் சிலாபம் பிரதேச சபைக்கு உரியது.

**ஆர்.எம்.பி.என்.ரணதுங்க**
**செயலாளர்,**
**சிலாபம் பிரதேச சபை**

**2024.09.04**
**சிலாபம் பிரதேச சபையில்**

SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383
E-mail - classified@lakehouse.lk

### 1964 இலக்கம் 28 காணி கையகப்படுத்தல் (திருத்தங்கள்) சட்டத்தின் அடிப்படையில் காணி கையகப்படுத்தல் சட்டம் (460 ஆம் அத்தியாயம்) 7 (1)ஆம் பிரிவு

காணி சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் அரசினால் சுவீகரிக்கப்பட்ட பின்வரும் காணிகளுக்கான மேற்படி சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் கோரிக்கைகள் மற்றும் இழப்பீடு விசாரணைகளை 2024 ஆம் ஆண்டு 09/11 திகதி பொல்பித்திகம பிரதேச செயலகத்தில் நான் மேற்கொள்வேன் என்பதை பொதுமக்களின் தகவலுக்காக இதன் மூலம் அறியத்தருகின்றேன். இந்தக் காணிகளுடன் தொடர்புபட்டவர்கள் விசாரணைக்கு சமுகமளிக்க வேண்டும். மேலும் விபரங்களுக்கு இலக்கம் 2363/68 மற்றும் 2023/12/22 ஆம் திகதியிடப்பட்ட அரசின் சிறப்பு வர்த்தமானியைப் பார்க்கவும்.

**காணி அமைச்சின் இலக்கம் - 4-3/18/2019 / CEB/612**

**எனது இலக்கம் - DIVPP/LAND/LA / ACQUI/3/10/7**

| | |
|---|---|
| மாவட்டம் | - குருநாகல் |
| பிரதேச செயலகப்பிரிவு | - பொல்பித்திகம |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | - 371/ மாஎளிய - வடக்கு |
| அடிப்படை காணி | - வ.- 421511, வலய இலக்கம் -01, படிவ இலக்கம் - 01 |
| காணி அமைந்துள்ள கிராமம் | - மாஎளிய |
| காணி இலக்கம் | - 01 |
| மொத்த காணியின் அளவு | - ஹெக்டயார் 0.0455 |

**டி.எம்.எஸ். தஸநாயக்க**
**பிரதேச செயலாளர்**
**பொல்பித்திகம**

திகதி – 2024.08.29

### 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 (1) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

**எனது குறிப்பு இலக்கம் :- KDS / AKU/ 4/ 2 /1/102**
**சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் குறிப்பு இலக்கம் :- 4 - 3 / 18/2020/WS/81**

இங்கு கீழ்குறிப்பிடப்பட்ட உப அட்டவணையில் விபரிக்கப்படும் காணியை அரசாங்கத்திற்கு எடுத்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. மேலதிக விபரங்களுக்கு 2024.08.16 ஆந் திகதிய இலக்கம் 2397/68 ஐக் கொண்ட இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் (111) ஆம் பகுதியைப் பார்க்கவும்.

**உப அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | - மத்திய மாகாணம் |
| மாவட்டம் | - கண்டி |
| பிரதேச செயலாளர் பிரிவு | - அக்குரணை |
| கிராம அலுவலர் பிரிவு | - கொனகலகல (இல.581) |
| காணியின் பெயர் | - கின்னரபேலகும்புர |
| கிராமத்தின் பெயர் | - கொனகலகல |
| அடிப்படை வரைபட இலக்கம் | - கா.சி 320668 |
| காணித்துண்டு இலக்கம் | - 2,3 |
| விஸ்தீரணம் | - 0.0502 ஹெக்டேயார் (பச்சர்ஸ் 19.8) |

**டீ. ஆர். கே. ஹென்னாயக**
**பிரதேச செயலாளர்**
**அக்குரணை**

**2024.08.30ஆந் திகதி**
**அக்குரணை பிரதேச செயலகத்தில்,**

### 1964 ஆம் ஆண்டு 28ம் இலக்கமுடைய காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி சுவீகரித்தல் சட்டத்தின் ( 460 வது அத்தியாயம்) 7 (1) ஆவது பிரிவின் கீழான அறிவித்தல்

**எனது இலக்கம் : BD/HD/LND/3/1/ஏ. எம்.ஜயதிஸ்ஸ**

**சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் இலக்கம் : 4-3/7/2017/HW/198**

இங்கு கீழ் உப அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியை அரசாங்கம் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மேலதிக விபரங்களுக்கு 2024 ஆகஸ்ட் மாதம் 12 திகதியிடப்பட்ட இலக்கம் 2397/11 உடைய இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அதி விசேட வர்த்தமானி பத்திரிகையில் (111) பிரிவைப் பார்க்கவும்.

**உப அட்டவணை**

| | |
|---|---|
| பிரதேச செயலகப்பிரிவு | - ஹல்தும்முல்ல |
| கிராமம் | - மரங்கஹவெல |
| அமைவு | - ஊவா மாகாணத்தின், பதுளை மாவட்டத்தில் ஹல்தும்முல்ல பிரதேச செயலகப் பிரிவில் கநதபல்ல கோரளை எனும் சிறு பிரிவில் மரங்கஹவெல (158F) கிராம அலுவலர் பிரிவில், மரங்கஹவெல கிராமம் |
| காணியின் பெயர் | - கடோல்வலஹேன |
| இறுதி தளக்கோள இலக்கம் | - க.தி.வ.710574 இல் தொகுதி இலக்கம் 02 இல் பத்திர இலக்கம் 01 |
| துண்டுகளின் எண்ணிக்கை | - துண்டு இலக்கம் 01 |
| முழுக் காணியின் அளவு | - ஹெக்டயார் 0.0996 |

**கே.ஏ.ஜே. பிரியங்கிகா**
**பிரதேச செயலாளர்,**
**ஹல்தும்முல்ல.**

**2024 ஆகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி**
**ஹல்தும்முல்ல பிரதேச செயலகத்தில்.**

## பெறுகை அறிவித்தல்

உணவுப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கண்டி மாவட்டத்தில் ஹதரலியத்த பிரதேச செயலகப் பிரிவில் செயற்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு மனைக்குள் பயிர்ச்செய்கை செயற்றிட்டத்தின் கீழ் பாதுகாப்பு மனைகள் 09ஐ நிர்மாணிப்பதற்காக தகைமையுள்ள அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாது அது பற்றி ஆர்வம் காட்டுகின்ற வழங்குநர்களிடமிருந்து கண்டி மாவட்ட செயலாளர் மற்றும் பெறுகைக் குழுவின் தலைவரால் 2024.09.25 மு.ப. 10.00 வரை கேள்விகள் கோரப்படுகின்றன.

02. அதனோடு சம்பந்தப்பட்ட விபரங்களை மாவட்ட செயலகத்தின் இணைய தளமான (www.kandy.dist.gov.lk) இன் பெறுகையின் கீழ் அல்லது மாவட்ட செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**சந்தன தென்னக்கோன்,**
**பெறுகைக் குழுவின் தலைவர்,**
**மாவட்ட செயலாளர்/ அரச அதிபர்,**
**மாவட்ட செயலகம், கண்டி.**

## இலங்கை வங்கி

**பின்வரும் இடத்தில் ATM இயந்திரமொன்றை நிறுவுதற்குப் பொருத்தமான காணி அல்லது கட்டடமொன்று குத்தகை அடிப்படையில் தேவையாகவுள்ளது**

### காலி நகரம்

### உத்தேசக் காணி அல்லது கட்டிடம்

**பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்**

- ஆகக்குறைந்த குத்தகைக் காலம் 10 வருடங்கள்
- இலங்கை வங்கி காலி நகரக் கிளையிலிருந்து 500 மீற்றருக்குள் அமைந்திருத்தல் வேண்டும்.
- இலகுவில் சென்றடையக்கூடிய இடத்தில் இருப்பதோடு, வாகனம் நிறுத்தி வைப்பதற்கான இடவசதிகள் இருத்தல் வேண்டும்.
- 30 அம்பியர் மூன்று முதன்நிலை மின்சார வழங்கல் இருத்தல் வேண்டும்.
- காணியானால் தரைப் பரப்பளவு சுமார் 200 சதுர அடிகளாக (10'X20') இருத்தல் வேண்டும்.
- கட்டடமானால் தரைப் பரப்பளவு சுமார் 200 சதுர அடிகளாக (10'X20') இருத்தல் வேண்டும்.

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் தரப்பினர் ஒப்புதல் அளிக்கப்பட்ட கட்டட வரைபடம், காணித்துண்டின் வரைபடம், உரிமைத்துவ உறுதி போன்ற ஆவணங்களின் பிரதிகள் என்பவற்றுடன் எதிர்பார்க்கும் மாதாந்த வாடகையைக் குறிப்பிட்டு 7 நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"ATM இயந்திரத்தை நிறுவுதல் - காலி நகரம்"** எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

**உதவிப் பொது முகாமையாளர்**
**இலங்கை வங்கி,**
**தென் மாகாண அலுவலகம்,**
**இல. 11, குமாரதுங்க மாவத்தை,**
**காலி.**

**தொலைபேசி : 041-2232238, 041-2220949**
**தொலைநகல் : 041-2234880**
**மின்னஞ்சல் : bocsp@boc.lk**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
பரிந்துரைகள்/கருத்துக்கள்/முறைப்பாடுகளுக்கு - https://www.boc.lk/contact
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

### இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## கேள்விக்கோரல்களுக்கான அழைத்தல்

### TENDER FOR MONITORING SERVICE CONTRACT FOR PORT WIDE DATA NETWORK (PWDN) ON 24/7 BASIS FOR THE YEAR 2024/2025 OF SLPA

### Tender No.: EW 13/EL/2024/PWDN

1. Monitoring Service contract for Port Wide Data Network (PWDN) on 24/7 basis for the year 2024/2025 of SLPA என்னும் கேள்விக்காக ஆர்வமுள்ள சாரார்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விக் கோரல்களை இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் சார்பில் திணைக்கள பெறுகை குழுத் தலைவர் அழைக்கின்றார்.
2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் என்பதுடன் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவு சான்றிதழை அவரது கேள்விக்கோரல் ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த மூன்று (3) வருடங்களாக ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள கேள்விதாரர் மேலதிக தகவலை கொழும்பு-01, லெயிடன் பஸ்தியன் வீதி, 45 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, பிரதான பொறியியலாளர் (மின்னியல் மற்றும் இலத்திரனியல்) இடமிருந்து பெற்று (தொலைநகல்: 0094 11-24309. மின்னஞ்சல்: **ganaka@slpa.lk)** கேள்விக்கோரல் ஆவணங்களை அதே முகவரியில் வேலை நேரங்களில் சாதாரண அலுவலக நேரங்களில் கேள்விக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம். (மேலதிக விபரங்களுக்கு தொலைபேசி இல.: 0094 11-2483012)
5. ஒப்பந்தத்தை கையளிப்பதற்கான தகுதிக்காக எதிர்பார்க்கும் கேள்விதாரர் தரம் **EM3 (ELV)** என்ற **CIDA** பதிவின் கீழ் பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.
6. 2024.09.06 ஆம் திகதியிலிருந்து 2024.09.24 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 2,000 ரூபாவை (வரிகள் அடங்கலானது) ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர் பிரதான பொறியியலாளர் (மி மற்றும் இ) இற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் கொழும்பு-01, லெயிடன் பஸ்தியன் வீதி, 45 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் பொறியியல் வேலைகள் பிரிவிலிருந்து ஆங்கில மொழியிலுள்ள கேள்விக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள கேள்விதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
7. கேள்விகள் கீழேயுள்ள முகவரியில் 2024.09.25 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக ஒப்படைக்கப்படல் வேண்டும். கேள்விகள் அதே முகவரியில் கேள்வியை மூடிய பின்னர் உடனடியாகவே கேள்விதாரரின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து கேள்விகளும் 80,000 ரூபா பெறுமதியான கேள்விப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் 120 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு (இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை),**
**பிரதான பொறியியலாளர் (மின்னியல் மற்றும் இலத்திரனியல்) மே/பா.,**
**மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியல் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல.: 45, லெயிடன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு-01.**

**இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை**

## கேள்வி அழைப்பு

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அகலவத்த நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவிற்குள் செயற்படுத்தப்படும் 1000 கிலோமீற்றர் வீதி செயற்றிட்டத்துடன் சம்பந்தப்பட்ட வீதி மறுசீரமைப்புச் செய்தல்

1. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் (RDA) அகலவத்த நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவின் பெறுகைக் குழுவின் தலைவரால் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அகலவத்த நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவிற்கு கீழ்க்காணும் ஒப்பந்தத்திற்காக தகைமையுடைய கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| ஒப்பந்த இலக்கம் | விபரம் |
|---|---|
| RDA/SP/1000KM/WP/ DL/326 | ஹவரியகந்த வீதி மறுசீரமைப்பிற்காக உள்ள தொடர்பு கொங்கிறீட் சரளைக் கற்களை வழங்குதல் |

2. மேலதிக விபரங்களுக்காக தயவு செய்து 2024 செப்டெம்பர் 06 முதல் 27 வரை கீழ்க்காணும் இணையதளத்திற்கு பிரவேசியுங்கள்
   வீதி அபிவிருத்தி அதிகார சபை - www.rda.gov.lk
   போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு - www.mohsl.gov.lk

தலைவர்,
பிரதேச பெறுகைக் குழு. நிவேற்றுப் பொறியியல் பணிமனை,
வீதி அபிவிருத்தி அதிகார சபை - அகலவத்த.
தொ.பே. இல. 034-2247405.

**இலங்கையில் மொன்ட்ரியல் நெறிமுறையை அமுல்படுத்துவதற்கான செயற்றிட்டம்**
**சுற்றாடல் அமைச்சு**

## பெறுகை அறிவித்தல்

**இலங்கையில் உள்ள தொழில்நுட்ப தொழிற்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களை (TVET) தரவேற்றம் செய்வதற்கு குளிர்சாதனம் மற்றும் வளிச்சீராக்கல் (RAC) பயிற்சி உபகரணங்கள் மற்றும் கருவிகளை வழங்குதல்**

RAC துறையிலுள்ள TVET நிறுவனங்களை தரவேற்றம் செய்வதற்கு பின்வரும் உருப்படிகளை வழங்குவதற்காக தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கையில் மொன்ட்ரியல் நெறிமுறையை அமுல்படுத்துவதற்கான செயற்றிட்டத்தின் பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

| Item No. | Description of Goods | Quantity | Bid Security (Yes/No) |
|---|---|---|---|
| 1 | Two-stage rotary vacuum pump | 9 | Yes |
| 2 | Electronic weighing scale | 10 | Yes |
| 3 | Piercing Pliers | 17 | No |
| 4 | Tube Bender 1/4 | 11 | No |
| 5 | Tube Cutter Medium (3mm to 30mm) | 10 | No |
| 6 | Pen type deburrer | 14 | No |
| 7 | Nitrogen Regulator Two Stage | 9 | Yes |
| 8 | Oxygen Regulator Two Stage | 8 | Yes |
| 9 | Electronic refrigerant leak detector for HCFC/HFC | 11 | No |
| 10 | Micron gauge with large LCD displays readings | 10 | Yes |
| 11 | Recovery Recycling unit | 1 | Yes |
| 12 | Quick Battery charger | 1 | Yes |
| 13 | Manifold gauge set R134a, R1234yf (Analog) | 2 | No |
| 14 | Hydraulic Auto A/C Hose Crimping Machine | 1 | No |
| 15 | Digital Weighing Machine | 1 | Yes |
| 16 | Coolant Tester | 2 | No |
| 17 | Manifold gauge set (digital) | 2 | Yes |
| 18 | Refrigerant Gas Analyser | 1 | Yes |

தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் ஊடாக விலைக்கோரல்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பத்தரமுல்ல, இல. 416/C/1, ரொபட் குணவர்தன மாவத்தை, ''சொபாதம்பியச'', 7ஆம் மாடி, தேசிய ஓசோன் பிரிவு, சுற்றாடல் அமைச்சு, இலங்கையில் மொன்ட்ரியல் நெறிமுறையை அமுல்படுத்துவதற்கான செயற்றிட்டம், செயற்றிட்டப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பிலக்கம்: 011 2034221, 011 2034218

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024-09-27ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையில் சுற்றாடல் அமைச்சின் தேசிய ஓசோன் பிரிவிற்கு மீளளிக்கப்படாத 1000.00 ரூபாவை ரொக்கப் பணமாகச் செலுத்தியும் மற்றும் இலங்கையில் மொன்ட்ரியல் நெறிமுறையை அமுல்படுத்துவதற்கான செயற்றிட்டம், செயற்றிட்டப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

விலைமனுக்களை செயற்றிட்டப் பணிப்பாளர், இலங்கையில் மொன்ட்ரியல் நெறிமுறையை அமுல்படுத்துவதற்கான செயற்றிட்டம், தேசிய ஓசோன் பிரிவு, ''சொபாதம்பியச'', 7ஆம் மாடி, இல. 416/C/1, ரொபட் குணவர்தன மாவத்தை, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியுடனான விலைமனுக்களை ஒரு கடித உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து, 2024-09-30ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது சுற்றாடல் அமைச்சின் வளி வள முகாமைத்துவம் மற்றும் தேசிய ஓசோன் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''பயிற்சி நிலையங்களை தரவேற்றம் செய்வதற்கு RAC பயிற்சி உபகரணங்கள் மற்றும் கருவிகளை வழங்குதல்'' எனத் தயவு செய்து குறிப்பிடவும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிப்படும்.

விலைக்கோரல்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின் சுற்றாடல் அமைச்சின் வளி வள முகாமைத்துவம் மற்றும் தேசிய ஓசோன் பிரிவின் கூட்ட அறையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதியின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

மேற்கூறப்பட்ட உபகரணங்களில் ஒரு உருப்படி அல்லது வேறு விதமாக பெற்றுக்கொள்வதற்கு பெறுகை நிறுவனத்திற்கு உரிமை உண்டு.

அனைத்துத் தீர்மானங்களிலும் செயற்றிட்ட பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**செயற்றிட்டப் பெறுகைக் குழு,**
**இலங்கையில் மொன்ட்ரியல் நெறிமுறையை அமுல்படுத்துவதற்கான செயற்றிட்டம்,**
**தேசிய ஓசோன் பிரிவு,**
**சுற்றாடல் அமைச்சு,**
**''சொபாதம்பியச", 7ஆம் மாடி,**
**இல. 416/C/1, ரொபட் குணவர்தன மாவத்தை,**
**பத்தரமுல்ல.**

2024-09-06.

* Trusted Marketplace of Classified Advertisers...
OBSERVER adz TRUSTED CLASSIFIED GUIDE it's what you want
Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067
E-mail - classified@lakehouse.lk
WE ACCEPT
Green Light for
Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
BANK OF CEYLON BOC Lake House Branch
Acc. No. 000000377

## 1. விலைமனுக்களுக்கான அழைப்பு

# இலங்கை போக்குவரத்து சபை (SLTB)

## ஸ்பிரிங் பிளேட்டுக்களை வழங்குவதற்கான விலைமனுக்கள்

**Procurement No.: SLTB/TS/GEN/SPRING BLADES /2024**

1. ஸ்பிரிங் பிளேட்டுக்களின் தயாரிப்பாளர்கள்/ ஸ்பிரிங் பிளேட்டுக்களின் தயாரிப்பாளர்களின் தரஅங்கீகாரம் பெற்ற முகவர்களிடமிருந்து 26.09.2024 ஆம் திகதி வரையும் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை போக்குவரத்து சபை பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார். விலைமனுக்கோரலானது தேசியபோட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும். 2024.09.06 ஆம் திகதியிலிருந்து 2024.09.25ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் ((மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணிவரையும்) மீளளிக்கப்படாத கட்டணமாக 20,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், கிருளவீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இ.போ.ச. பெறுகைக் குழுவின் செயலாளரிடமிருந்து ஆங்கிலமொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை கொள்வனவு செய்யலாம்.

| விளக்கம் | கேள்விப்பிணை (ரூபாவில்) |
|---|---|
| ஆகக் குறைந்தது 30 நாட்கள் கடன் அடிப்படையில் ஒரு வருடத்திற்கு இபோச இன் பஸ்களின் எண்ணிக்கைக்கு தேவைப்படும் ஸ்பிரிங் பிளேட்டுக்களை வழங்கல் | 2.5 மில் |

2. ஒம்னி பஸ்களுக்கான ஸ்பிரிங் பிளேட்டுக்களின் உள்ளூர் உற்பத்தியாளர்கள்/வெளிநாட்டு உற்பத்தியாளர்களின் தரஅங்கீகாரம் பெற்ற முகவர்கள் விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான தகுதியைக் கொண்டிருப்பர். ஒம்னி பஸ்களுக்கான ஸ்பிரிங் பிளேட்டுக்களை உற்பத்தி செய்வதில் ஆகக் குறைந்தது 3 வருட அனுபவத்தை உற்பத்தியாளர்கள் கொண்டிருத்தல் வேண்டும்.
3. உரித்தான வெளிநாட்டு உற்பத்தியாளர்கள் இடமிருந்து நேரடியான இறக்குமதிக்கான அங்கீகாரம் இல்லாத முன்வைப்புகள் அல்லது உள்ளூர் உற்பத்தியாளர்களை பொறுத்தவரையில் முன்வைக்கப்பட்டுள்ள வணிக உரிமைப் பெயருக்கான உற்பத்தியாளர் என பதிவில்லாதவைகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.
4. இதற்கான தகைமையையுடைவர்களுக்கு உள்ளூர் முன்னுரிமை வழங்கப்படும்.
5. 2024.09.13 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு கொழும்பு 05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்தின் இலங்கை போக்குவரத்து சபையின் பெறுகைப் பிரிவில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.
6. ஒவ்வொரு விலைமனுதாரருக்கும் முகவரொருவராக அல்லது உபமுகவராக, பிரதிநிதியாக அல்லது பெயர் குறிப்பிட்டவராக அல்லது அவரது சார்பாக செயற்படும் எந்தவொரு நபரும் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு முன்னதாக இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு பெற்றிருத்தல் வேண்டும். விலைமனுவுடன் பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதியானது சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறான மூலப்பிரதி சான்றிதழை சமர்ப்பிக்கத் தவறும் அவ்வாறான விலைமனுதாரர்களின் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
7. விலைமனுக்கள் 2024.12.27ஆம் திகதி வரையும் செல்லுடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். இருப்பினும், முன்வைக்கப்பட்ட விலைகள் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளலிருந்து ஒரு (01) வருடகாலத்திற்கு நிலையாகவிருத்தல் வேண்டும்.
8. மேலே குறிப்பிட்டுள்ள பெறுமதிக்கான விலைமனுப்பிணையொன்றுடன் விலைமனுக்கள் இணைக்கப்பட்டிருப்பதுடன் 2025.01.27 ஆம் திகதிவரையும் செல்லுபடியாகும் மற்றும் இ.போ.ச. இன் முதலாவதான எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பேரில் மாற்றக் கூடியதாகவும் நிபந்தனையற்ற வகையில் ரொக்கப் பணத்தில் மாற்றக் கூடிய தன்மையிலிருப்பதுடன் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட பதிவுசெய்யப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் அல்லது இலங்கை காப்புறுதி ஒழுங்காற்றல் ஆணைக்குழுவுடன் பதிவுபெற்ற காப்புறுதி முகவராண்மையொன்றினால் வழங்கப்பட்டதாகவுமிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் தன்மையிலில்லாத எந்தவொரு விலைமனுப்பிணையும் நிராகரிக்கப்படும்.
9. விலைமனு ஆவணத்தின் அனைத்துபக்கங்களும் விலைமனுதாரரினால் சிற்றொப்பமிட்டு அவரது பெயர் முத்திரை பதிக்கப்படல் வேண்டும்.
10. 2024.09.26ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் கொழும்பு-05, கிருளவீதி, 200ஆம் இலக்கத்திலுள்ள இபோச பெறுகைக் குழு செயலாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விலைமனுவை அடக்கியுள்ள முத்திரையிடப்பட்ட உறையின் இடதுபக்கமேல் மூலையில் "Supply of Spring Blades" என குறிப்பிடப்படல் வேண்டும்.
11. கொழும்பு -05, கிருளவீதி, 200 ஆம் இலக்கத்தின் இபோச பெறுகை குழு செயலாளரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**இபோச பெறுகைக் குழு,**
**பெறுகைப் பிரிவு,**
**இல. 200, கிருளவீதி, கொழும்பு-05.**

**விசாரணைகள்:** முகாமையாளர், (பெறுகை), இலங்கை போக்குவரத்துச் சபை
தொலைபேசி: 011 7706110, 0771056110. தொலைபேசி/ தொலைநகல்: 011 2588457

Replies to Classifieds

&

Casual Advertisements published C/o the Daily News

should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

## ஒன்றிணைத்தல் அறிவித்தல்

### 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(3) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

### பார்த்தி எயார்டெல் லங்கா (பிரைவேட்) லிமிடெட் மற்றும் டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி ஆகிய நிறுவனங்களை ஒன்றிணைத்தல்

பார்த்தி எயார்டெல் லங்கா (பிரைவேட்) லிமிடெட் (கம்பனிப் பதிவிலக்கம்: PV 10652) மற்றும் டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி (கம்பனிப் பதிவிலக்கம்: PQ 38) நிறுவனத்துடன் ஒன்றிணைத்தல் விடயம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதோடு 2007ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(1)(அ) பிரிவின் நியதிகளின் கீழ் 2024 ஆகஸ்ட் 22 ஆம் திகதி கம்பனிகள் பதிவாளர் அதிபதியினால் தலைமை ஒன்றிணைப்புச் சான்றிதழ் ஒன்று வழங்கப்பட்டுள்ளது என 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(3) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் வெளியிடப்படுகின்றது.

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244 ஆம் பிரிவுக்கு ஏற்ப, 2024 ஆகஸ்ட் 30 ஆம் திகதி சொல்லப்பட்ட ஒன்றிணைப்பு அமுலுக்கு வருகின்றது மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட ஒன்றினையும் கம்பனிகள் 2024 ஆகஸ்ட் 30 ஆம் திகதியில் இருந்து டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி என தொடரும்.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,**
**திருமதி. விரன்தி ஆட்டிகல**
**செயலாளர்கள்,**
**டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி**

## விலைமனுக்களுக்கான அழைப்பு - IFB

**சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித்திட்டம் (SAPP)**

**கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு**

**மில்கோ பாற்பண்ணைத் திட்டத்திற்கு 4000 எண்ணிக்கையான 10 லீற்றர் பால் கேன்கள் மற்றும் 310 எண்ணிக்கையான 20 லீற்றர் பால் கேன்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் ஒப்படைத்தல்.**
**(Supply, Delivery &aHand over of 4000 Nos. of 10L Milking Cans & 310 Nos. of 20L Milking Cans for Milco Dairy Project)**

**விலைக்கோரல் குறிப்பீட்டிலக்கம்: SAPP/PRO/4P/2024/31**

இலங்கை அரசாங்கம் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திலிருந்து (IFAD) சிறு அளவிளான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித் திட்டத்தின் (SAPP) செலவுக்காக நிதியுதவியைப் பெற்றுள்ளது மற்றும் கலப்பின சோள விதைகளை கொள்வனவு செய்வதற்கான நிதியுதவியின் ஒரு பகுதியை மேற்கூறிய பொருட்களின் வழங்கல் நிதியிடலுக்கு பயன்படுத்த உத்தேசித்துள்ளது. எந்தவொரு IFAD நிதியுதவியின் பயன்பாடும் IFAD இன் ஒப்புதலுக்கு உட்பட்டது, நிதி ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் IFAD இன் விதிகள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கு இணங்க வேண்டும். IFAD மற்றும் அதன் அதிகாரிகள், முகவர்கள் மற்றும் பணியாளர்கள் SAPP தொடர்பாக எந்தவொரு தரப்பினராலும் கொண்டு வரப்படும் அனைத்து வழக்குகள், நடவடிக்கைகள், உரிமைகோரல்கள், கோரிக்கைகள், இழப்புகள் மற்றும் பொறுப்புகள் ஆகியவற்றிலிருந்து பாதிப்பில்லாதவர்களாக இருக்க வேண்டும்.

01. 4000 எண்ணிக்கையான 10 லீற்றர் பால் கேன்கள் மற்றும் 310 எண்ணிக்கையான 20 லீற்றர் கேன்களை மில்கோ பாற்பண்ணைத் திட்டத்தின் விவசாயிகளுக்கு விநியோகித்தல் என்பன இந்த SAPP பெறுகையின் அடங்குகின்றன. ஒக்டோபர் மாதத்தின் இறுதிக்கு முன் இந்த விநியோகம் எதிர்பார்க்கப்படுகின்றது.
02. பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளதன் பிரகாரம் பொருட்களை வழங்குவதற்காக தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து (''விலைமனுதாரர்கள்'') முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கொள்வனவாளர் இப்போது அழைக்கின்றார்.

| பொருளின் பெயர் | அளவு (எண்ணிக்கை) | லொட் | விநியோகக் காலம் | விநியோக இடங்கள் (மாவட்டங்கள்) | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 10 லீற்றர் பால் கேன்கள் | 4000 | லொட் 1 | 2024 ஒக்டோபர் 30ஆம் திகதிக்கு முன் | அநுராதபுரம், கண்டி, குருநாகல், மொனராகலை | 700,000.00 |
| 20 லீற்றர் பால் கேன்கள் | 310 | | | | |

இந்த விலைக்கோரல் ஆவணத்தில் உள்ள தேவைப்பாடுகளின் அட்டவணையில் இந்த பொருட்கள் மற்றும் தொடர்புடைய சேவைகள் பற்றிய மேலதிக விவரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

03. பதிலளிக்க விரும்பும் அனைத்து தகுதியான ஏலதாரர்களுக்கும் இந்த விலைக்கோரலுக்கான அழைப்பு (IFB) திறக்கப்பட்டுள்ளது. விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு, தகுதிவாய்ந்த நிறுவனங்கள் பொருட்களையும் தொடர்புடைய சேவைகளையும் வெற்றிகரமாக வழங்குவதற்கான திறனை அதிகரிக்க ஏனைய விலைமனுதாரர்களுடன் தொடர்பு கொள்ளலாம்.
04. இந்தப் பெறுகையில் பால் கேன்களை விநியோக அட்டவணையின் பிரகாரம் நகரங்களில் அமைந்துள்ள இடங்களுக்கு ஒற்றை ஒப்பந்தமாக விநியோகிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
05. www.ifad.org/project எனும் IFAD இணையத்தில் வழங்கப்பட்டுள்ள IFAD பெறுகை வழிகாட்டியின் பிரகாரம், இந்த விலைமனு ஆவணத்தில் விவரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு நடைமுறையின் ஊடாக தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) முறையைப் பயன்படுத்தி விலைக்கோரல் நடத்தப்படும். NCB செயல்முறையானது விவரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் ஒப்பந்தத்தைக் கையளிக்கும் முன் ஒரு குறிப்பு சோதனை உட்பட தகுதிகள் மற்றும் கடந்தகால செயற்றிறன் ஆகியவற்றின் மதிப்பாய்வு மற்றும் சரிபார்ப்பை உள்ளடக்கும்.
06. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று ராஜகிரிய, இல. 212/A, நாவல வீதி, சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை திட்ட அலுவலகத்தில் 2024 செப்டெம்பர் 18ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு இடம்பெறும்.
07. ஆர்வமும் தகுதியும் உள்ள விலைமனுதாரர்கள் சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை திட்டத்தின் (SAPP) 011-2448031 எனும் தொலைபேசி இலக்கத்தில் பெறுகை நிபுணரிடமிருந்து அல்லது procurement@sapp.lk என்ற முகவரியில் வேலை நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். விலைக்கோரல் ஆவணங்களை 2024-09-06ஆம் திகதி முதல் 2024-09-26ஆம் திகதி வரையில் ராஜகிரிய, இல. 212/A, நாவல வீதி, சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை திட்ட அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
08. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணமாக 20,000.00 ரூபாவை செலுத்துவதன் பேரில் மற்றும் 2024-09-06ஆம் திகதி முதல் 2024-09-26ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றை இலங்கை, ராஜகிரிய, இல. 212/A, சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை திட்ட அலுவலகம், செயற்றிட்ட பணிப்பாளருக்குச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். செலுத்தும் முறை ரொக்கப் பணமாகவிருத்தல் வேண்டும். கொடுப்பனவுகளை SAPP நிதிப் பிரிவிற்குச் செலுத்துதல் வேண்டும்.
09. நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனக் குறிப்பிட்டு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட ஒரு உறையில் இட்டு 2024-09-27ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பெறுகைப் பிரிவு, சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை திட்ட அலுவலகம், இல. 212/A, நாவல வீதி, இராஜகிரிய எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும் அல்லது அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் இறுதி நாள் முதல் 120 நாட்கள் வரையில் அல்லது வாங்குபவரால் நிர்ணயிக்கப்பட்ட நீட்டிக்கப்பட்ட நாள் வரையில் செல்லுபடியாதல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைக்கோரல் முடிந்தவுடன், விலைமனுதாரர்கள் அல்லது கலந்துகொள்ளத் தெரிவுசெய்யப்பட்ட அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் உடனடியாகத் திறக்கப்படும்.
10. ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் விலைக்கோரல் இலக்கம் என்பன (Bid Ref. SAPP/PRO/4P/2024/31) கடித உறையின் மேல் இடது மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். அனைத்து விலைமனுக்களுடனும் 02ஆம் பந்தியில் (அட்டவணை) குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கையில் செயற்படும் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட எந்தவொரு உரிமம்பெற்ற வர்த்தக வங்கியினால் வழங்கப்பட்ட விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
11. இலத்திரனியல் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதை தயவுசெய்து கவனத்திற் கொள்ளவும்.

மேலே குறிப்பிடப்பட்ட முகவரிகள்

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை திட்ட அலுவலகம்,**
**இல. 212/A, நாவல வீதி, இராஜகிரிய**
**கமத்தொழில் அமைச்சு,**
**தொலைபேசி இலக்கம்: + 94 11 2431 426**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**
**நீர்ப்பாசன அமைச்சு**
**நீர்ப்பாசனத் திணைக்களம்**

### தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல்

01. பின்வரும் வழங்கல்களுக்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை நீர்ப்பாசனத் திணைக்களத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

**அட்டவணை இல. 01**

| விலைக் கோரல் இல. | லொட் இல. | பெறுகையின் விபரங்கள் | அளவு (எண்ணிக்கை) | மீளளிக்கப் படாத வைப்பு (ரூபா) | விலைக்கோரல் செல்லுபடியாக வேண்டிய காலம் | விலைக்கோரல் பிணை முறித்தொகை (ரூபா) | பிணைமுறி செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| IFB/ID/GOSL/NCB/2024/010 | Procurement of Goods & Equipment for Engineering Materials Division | | | | | | |
| | 01 | Procurement of Fully Automated Compression Testing Machine | 02 | 3500.00 | 15/12/2024 | 150,000.00 | 12/01/ 2025 |
| | 02 | Procurement of Soil Core Cutters | 25 | | | 15,000.00 | |
| | 03 | Procurement of Electric Oven | 01 | | | 12,000.00 | |
| | 04 | Procurement of Coarse Aggregate Sieve Set with Shaker | 02 | | | 60,000.00 | |
| | 05 | Procurement of Auger Set | 15 | | | 30,000.00 | |
| | 06 | Procurement of Sample Splitters | 10 | | | 15,000.00 | |
| | 07 | Procurement of Fine Aggregate Sieve Set with Shaker | 02 | | | 20,000.00 | |

02. மீளளிக்கப்படாத கட்டணத்தை (தொகைக்கு 1ஆம் அட்டவணையைப் பார்க்கவும்) செலுத்தி மற்றும் நிறுவனக் கடிதத் தலைப்பில் (மூலப் பிரதி) எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் செய்வதன் பேரில் கொழும்பு 07, பௌத்தாலோக்க மாவத்தை, 230ஆம் இலக்கத்திலுள்ள நீர்ப்பாசனத் திணைக்களம், 2ஆம் மாடி, அறை இல. 213, நீர்ப்பாசனப்பணிப்பாளர் (ஒப்பந்தங்கள் மற்றும் பெறுகைகள்) அலுவலகத்திலிருந்து 2024-09-06ஆம் திகதி முதல் 2024-09-27ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.

03. வழங்குநர்கள் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட லொட்களுக்கு விலைக்கோரலாம். எவ்வாறாயினும் மேற்கூறிய 01ஆம் அட்டவணையில் பட்டியல்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு லொட்களும் சுயாதீனமாக மதிப்பீடு செய்யப்பட்டு வாங்கப்படும்.

04. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் விரும்பினால் விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளும் முன் விலைமனுக்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் மேலதிக தகவல்களை நீர்ப்பாசனப் பணிப்பாளரிடமிருந்து (ஒப்பந்தங்கள் மற்றும் பெறுகைகள்) பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 011-2582897 / 011-2582677.

05. பின்வரும் வகையில் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.
திகதி: 2024-09-13
நேரம்: மு.ப. 11.00
இடம்: கொழும்பு-07, பௌத்தாலோக்க மாவத்தை, நீர்ப்பாசனத் திணைக்களம், 4ஆம் மாடி, குழு அறை

06. 01ஆம் அட்டவணையில் தரப்பட்டுள்ள பெறுமதிக்கான விலைமனுப் பிணைமுறியொன்று விலைமனுக்களுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் ஏதாவது விலைமனு செல்லுபடியாகும் விலைமனுப் பிணை முறி இல்லாமல் இருந்தால் எவ்வித முன்னறிவித்தலுமின்றி பதிலளிக்காதவை எனக் கருதப்பட்டு நிராகரிக்கப்படும்.

07. விலைமனு ஆவணத்தின் சகல பக்கங்களிலும் விலைமனுதாரர் சிற்றொப்பமிட்டு அவரது முத்திரை பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

08. பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்களை 2024-09-30ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னராகக் கிடைக்கும் வகையில், கொழும்பு-07, பௌத்தாலோக்க மாவத்தை 230ஆம் இலக்க நீர்ப்பாசனத் திணைக்களம், 3ஆம் மாடியிலுள்ள பிரதான நிதியிடல் அலுவலரின் 311ஆம் இலக்க அறையில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில், தலைவர், திணைக்கள பெறுகைக்குழு என முகவரியிட்டு மேற்படி முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விலைமனுக்கள் 2024-09-30ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முடிவுறுத்தப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

8. கடிதஉறையின் இடது பக்க மேல் மூலையில் வேலை விபரம் மற்றும் ஒப்பந்த இலக்கம் என்பவற்றை தயவு செய்து எழுதவும்.

9. சுய விருப்பத்தின் பேரில் சமுகமளிக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**பொறி. அஜித் குணசேக்கர,**
**நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம்,**
**நீர்ப்பாசனத் திணைக்களம்,**
**இல. 230, பௌத்தாலோக்க மாவத்தை,**
**கொழும்பு-07**

2024-09-06ஆம் திகதி.

# பெறுகை அறிவித்தல்

## தேசிய தொற்றுநோய் நிறுவனம், ஐ.டி.எச் அங்கொடை மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்

**இணைப்பு இலக்கம் - NIID /FA9/MEDI/EQUIP/2024**

01. தேசிய தொற்று நோய் நிறுவனத்தின் பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக, அதற்கான தகைமை கொண்ட இலங்கையின் மருத்துவ உபகரணங்களை விற்பனை செய்வதற்கு வியாபாரப் பதிவுடனான கம்பனிகளிடமிருந்து 2024.09.27 மு.ப. 10.00 வரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்கப்படும்.
    1. Defibrillator - 02
    2. Portable ultra sound scan machine - 02
    3. Water Distiller - 01
02. தகைமையுள்ள, ஆர்வம் காட்டுகின்ற வழங்குநர்களுக்கு மேற்படி கேள்வி ஆவணங்களை, மீளளிக்கப்படாத ரூ. 3500.00 கட்டணத்தை காசாளரிடம் காசாக செலுத்திய பின்பு 2024.09.09 முதல் 2024.09.26 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்தில் தேசிய தொற்று நோய் நிறுவனத்தின் கணக்குப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.
03. சகல கேள்வி ஆவணங்களிலும் "மூலப்பிரதி" மற்றும் "நகல்பிரதி" என குறிப்பிட்டு வேறுவேறாக உறைகளில் இட்டு ஒரு பொறியிடப்பட்ட உறையில் இட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் உபகரணத்தின் பெயர் மற்றும் இணைப்பு இலக்கத்தைக் குறிப்பிட்டு 2024.09.27 பி.ப. 10.00 இற்கு அல்லது அதற்கு முன்பு பதிவுத்தபாலில் பணிப்பாளர், தேசிய தொற்றுநோய் நிறுவனம், ஐடிஎச், அங்கொடை என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டியதுடன் கையோடு கொண்டு வந்து ஒப்படைப்பதாயின் கணக்காளர் பணிமனையில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.
04. சமர்ப்பிக்கப்படும் சகல கேள்வியுடனும், 06 மாதங்களுக்கு செல்லுபடியாகுமாறு பணிப்பாளர், தேசிய தொற்றுநோய் நிறுவனம், ஐ.டி.எச் அங்கொடை பெயரில் விநியோகிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்த அங்கீகரிக்கப்பட்ட வர்த்த வங்கியிலிருந்து அல்லது நிர்மாண பாதுகாப்பு நிதியம் (Construction Gurantee fund) இடம் அல்லது இலங்கை காப்புறுதி சபையின் அனுமதிக்கப்பட்ட காப்புறுதி நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட கேள்விப் பிணையொன்றை சமர்ப்பித்தல் கட்டாயமானது.
05. விலைமனுக்கள் திறத்தல் 2024.09.27 மு.ப. 10.00 இற்கு இடம்பெறும்.
06. இப் பெறுகை சம்பந்தமான இறுதித் தீர்மானம் எடுத்தல் தேசிய தொற்றுநோய் நிறுவனத்தின் பிரதேச பெறுகைக் குழுவின் தலைவருக்குரியது.
07. மேலதிக தகவல்களுக்கு அலுவலக நேரங்களில் தொ.பே. இல. 011-2411223/4 ஐ அழைத்து கணக்குப் பிரிவை விசாரித்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**தேசிய தொற்றுநோய் நிறுவனம்**
**ஐ.டி.எச். அங்கொடை**

---

கொழும்பு மாவட்டத்தின், டாம் வீதி, பிரதேச செயலக பிரிவில், இல.116B, ரொஸ்மீட் பிளேஸ், குருந்துவத்த, கொழும்பு - 07 முகவரியில் வசிக்கும் களுவாதேவ பாலித்த ஜயலக்ஷ்மன் விமலசூரிய மெதிவ் ஆகிய எனது பிறப்புச்சான்றிதழில் குறிப்பிடப்படும் களுவாதேவ பாலித்த ஜயலக்ஷ்மன் மெதிவ் விமலசூரிய என்ற பெயருக்கு பதிலாக, களுவாதேவ பாலித்த லக்ஷ்மன் விமலசூரிய மெதிவ் என்ற பெயரை அறுபது வருடமாகவும் இதன் பிறகும் பாவிப்பதாக இலங்கை குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் தெரிவித்துக் கொள்கிறேன்.

**களுவாதேவ பாலித்த ஜயலக்ஷ்மன் விமலசூரிய மெதிவ்**

---

Repeat Your Ad For Better Offers

---

# ஊவா மாகாண சபை

## பிரதி பிரதம செயலாளர் (மனிதவள மற்றும் பயிற்சி) அலுவலகம்

**ஊவா முகாமைத்துவ அபிவிருத்தி நிறுவனத்தின் கீழ் ஒஹிய பயிற்சி நிறுவனத்தின் உணவகத்தை குத்தகைக்கு விடுவதற்கான விலைமனுக்கோரல் – 2024/2025**

01. ஊவா முகாமைத்துவ அபிவிருத்தி நிறுவனத்தின் கீழ் ஒஹிய பயிற்சி நிறுவனத்தில் நடைபெறும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஏனைய நிகழ்ச்சித்திட்டங்களுக்கான உணவு பானங்களை வழங்குவதற்கு 2024/2025 கால எல்லைக்குள் ஒரு வருடத்திற்காக ஒஹிய பயிற்சி நிறுவனத்தில் உணவகத்தை குத்தகைக்கு விடுவதற்காக குறித்த துறையில் அனுபவம் மற்றும் அதுபற்றி வியாபார பெயர் பதிவின் கீழ் பதிவு செய்துள்ள நபர்களிடமிருந்து அல்லது நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
02. மீளளிக்கப்படாத வைப்புக்கட்டணம் ரூ.1500.00 ஆவதுடன் அத்தொகையை பிரதிப் பிரதம செயலாளர் (மனிதவள மற்றும் பயிற்சி) அலுவலகத்தின் கணக்குப் பிரிவின் காசாளரிடம் செலுத்தி கேள்வி ஆவணங்கள் மற்றும் கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கும் நிபந்தனை மற்றும் ஏனைய தகவல்களை 2024.09.12 முதல் 2024.10.07 வரை அலுவலக நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.2.30 வரை ஊவா மாகாண சபையின் பிரதிப்பிரதம செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) அலுவலகத்தின் கணக்குப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். (தொடர்பு - 0552228627)
03. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் இரு பிரதிகளுடன் பெறுகைக் குழுவிற்கு 2024.10.07 பி.ப.2.30 இற்கு அல்லது அதற்கு முன்பு சமர்ப்பிக்க வேண்டியதுடன், கேள்விப் பத்திரங்கள் 2024.10.07 பி.ப.2.30 இற்கு பிரதி செயலாளர் (மனிதவள மற்றும் பயிற்சி) அலுவலகத்தில் திறக்கப்படும்.
04. பெறுகை பற்றிய இறுதித்தீர்மானம் பெறுகைக் குழுவிற்கு உரியது.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**பிரதி பிரதம செயலாளர் (மனிதவள மற்றும் பயிற்சி)**
**அலுவலகம்**
**ஊவா மாகாண சபை, பதுளை**

---

# இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/24/ PT/02/056 | Spares for Cummins NTA 855 Engines of Mitsui Paceco RTG Cranes | 300,000.00 | 3,500.00 | 26-09-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/ PT/10/059 | 49,000 Nos of Bar Soap ( Local ) 650 Grams | 22,000.00 | 1,000.00 | 26-09-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/ PT/07/059 | Spares for BombasItur Sea Water Cooling Pump of Tug Barana II & Tug Vijayabahu | 35,000.00 | 1,000.00 | 26-09-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/ PT/23/001 | 01 No. Electric Rider Stacker | 30,000.00 | 1,000.00 | 27-09-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/ PT/02/057 | 30 Nos. of Cabin Fans for UD Nissan Prime Movers & Terberg Yard Tractors | 20,000.00 | 1,000.00 | 27-09-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/ PT/03/059 | 05 Nos. Actuator ELC Governer 3408326 | 35,000.00 | 1,000.00 | 27-09-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/ PT/01/060 | 06 Nos. 1400 X24 – 24PR Tyre Sets with Tube and Flap for the TCM 25 Ton Lifters | 19,500.00 | 1,000.00 | 30-09-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/ PT/07/060 | Marine Quality Paint & Thinner for Tug Therapuththabahaya | 12,000.00 | 1,000.00 | 30-09-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/ PT/18/053 | Rubber Fenders for Pilot Launches | 22,000.00 | 1,000.00 | 30-09-2024 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை (PCA 03 படிவம்) கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை பிரதான முகாமையாளர் (வழங்கல்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2024 செப்டெம்பர் 06ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருள்வள முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் எண்: 2381652, 2470443**

---




---

# சூரியவெவ பிரதேச சபை

## சொத்துக்களை குத்தகைக்குவிடல்

சூரியவெவ பிரதேச சபைக்குச் சொந்தமான கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் வருடாந்தம் குத்தகை வழங்கப்படும் சொத்துக்களின் குத்தகை உரிமையை 2025.01.01 முதல் 2025.12.31 வரை மற்றும் நீண்ட கால குத்தகை வழங்கப்படும் சூரியவெவ வாரசந்தை மற்றும் மொத்த சந்தைக்குள் அமைந்துள்ள கடை அறைகளை குத்தகைக்கு விடுவதற்காக இரு பிரதிகளுடனான பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 2024 செப்டெம்பர் 06 முதல் 2024 செப்டெம்பர் 29 பி.ப. 3.00 வரை என்னால் ஏற்கப்படும்.

**சூரியவெவ பிரதேச சபைக்குச் சொந்தமான வருடாந்தம் குத்தகைக்குவிடும் குறித்த சொத்துக்கள்**

| தொ. இல | குத்தகை விடயம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புத் தொகை (ரூ) | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணத்தை தொகை (ரூ) | 2025ம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்படும் குறைந்த பட்ச கேள்வித் தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| 01 | சூரியவெவ வார சந்தை மொத்த சந்தை குத்தகைவிடல் | 200,000.00 | 10,000.00 | 20,000,000.00 |
| 02 | சூரியவெவ வாரசந்தை சில்லறை சந்தை குத்தகைக்கு விடல் | 100,000.00 | 10,000.00 | 4,500,000.00 |
| 03 | வெனிவெல்ஆர வாரசந்தை மற்றும் பொது மலசலகூடம், குத்தகைக்கு விடல் | 100,000.00 | 10,000.00 | 3,500,000.00 |
| 04 | சூரியவெவ மீன்சந்தை குத்தகைக்கு விடல் | 50,000.00 | 10,000.00 | 1,000,000.00 |
| 05 | சூரியவெவ வாரச் சந்தையில் பொது மலசலகூடம், குத்தகைக்கு விடல் | 3,000.00 | 1,000.00 | 27,500.00 |
| 06 | சூரியவெவ வாரசந்தை வாகன நிறுத்துமிடத்தை குத்தகைக்குவிடல் | 10,000.00 | 1,000.00 | 30,000.00 |
| 07 | ஹட்பஹ சந்தி அருகில் பொது அறிவித்தல் பலகையை குத்தகைக்குவிடல் | 5,000.00 | 1,000.00 | 30,000.00 |
| 08 | சூரியவெவ நகரிற்கு வருகைதரும் நடமாடும் வியாபாரிகள் மற்றும் நடமாடும் வியாபார வாகனங்களில் வரி அறவிடல் | 5,000.00 | 1,000.00 | 200,000.00 |

**சூரியவெவ பிரதேச சபைக்கு சொந்தமான நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்குள்ள கடை அறைகள்**

| தொ. இல | குத்தகை விடயம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புத் தொகை (ரூ) | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணத்தை தொகை (ரூ) | 2025ம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்படும் குறைந்த பட்ச கேள்வித் தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| 01 | வாரசந்தை 12 வரிசை 03 | 1000.00 | 500.00 | 1250.00 |
| 02 | வாரசந்தை 12 வரிசை 01 | 1000.00 | 500.00 | 1250.00 |
| 03 | வாரசந்தை 07 வரிசை 05 | 1000.00 | 500.00 | 1650.00 |
| 04 | வாரசந்தை 26 வரிசை A/16 | 1000.00 | 500.00 | 2000.00 |
| 05 | வாரசந்தை 26 வரிசை A/17 | 1000.00 | 500.00 | 2000.00 |
| 06 | வாரசந்தை 26 வரிசை B/1 | 1000.00 | 500.00 | 2000.00 |
| 07 | வாரசந்தை 26 வரிசை B/6 | 1000.00 | 500.00 | 2000.00 |
| 08 | வாரசந்தை 26 வரிசை B/13 | 1000.00 | 500.00 | 2000.00 |
| 09 | வாரசந்தை 26 வரிசை B/14 | 1000.00 | 500.00 | 2000.00 |
| 10 | வாரசந்தை 26 வரிசை B/15 | 1000.00 | 500.00 | 2000.00 |
| 11 | வாரசந்தை 26 வரிசை B/16 | 1000.00 | 500.00 | 2000.00 |
| 12 | வாரசந்தை 26 வரிசை B/17 | 1000.00 | 500.00 | 2000.00 |
| 13 | வாரசந்தை 26 வரிசை B/18 | 1000.00 | 500.00 | 2000.00 |
| 14 | வாரசந்தை 26 வரிசை B/19 | 1000.00 | 500.00 | 2000.00 |
| 15 | வாரசந்தை 26 வரிசை B/21 | 1000.00 | 500.00 | 1750.00 |
| 16 | வாரசந்தை 26 வரிசை B/22 | 1000.00 | 500.00 | 1750.00 |
| 17 | வாரசந்தை 26 வரிசை B/23 | 1000.00 | 500.00 | 1750.00 |

**கேள்விகள் விநியோகித்தல் :**
2024.09.06 முதல் 2024.09.26 பி.ப. 3.00 வரை

**கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் :**
2024.09.06 முதல் 2024.09.27 பி.ப. 2.30 வரை

**கேள்விகள் திறத்தல் :** 2024.09.27 பி.ப 3.00

நீண்டகால குத்தகையை எதிர்பார்க்கும் சூரியவெவ பிரதேச சபைக்குச் சொந்தமான கடை அறைகளை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 8.30 முதல் பி.ப. 4.00 வரை பரீட்சித்துப் பார்க்கலாம்.

2024 செப்டெம்பர் 06 முதல் 2024 செப்டெம்பர் 26 பி.ப. 3.00 வரை தமது தனிப்பட்ட அடையாள அட்டை மற்றும் பதிவை உறுதி செய்யும் கிராம அதிகாரி சான்றிதழை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு மட்டும் மேலே குறிப்பிடப்படும் கட்டணங்களை அறிவிட்டு கேள்விப் படிவங்கள் விநியோகிக்கப்படும்.

சகல கேள்விப் பத்திரங்களும் 2024 செப்டெம்பர் 06 முதல் 2024 செப்டெம்பர் 27 பி.ப. 2.30 இற்கு முன் கிடைக்குமாறு, "செயலாளர், சூரியவெவ பிரதேச சபை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து சூரியவெவ பிரதேச சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு கேள்விகளை ஒப்படைக்கலாம்.

2024 செப்டெம்பர் 27 பி.ப. 3.00 இற்கு சூரியவெவ பிரதேசசபை கேள்விச் சபையின் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்வி விண்ணப்பதாரிக்கு அல்லது அவரால் எழுத்துமூல அதிகாரம் ஒப்படைக்கப்படுகின்ற பிரதிநிதியொருவருக்கு தேசிய அடையாள அட்டையுடன் வருகை தருவதற்கு அனுமதியளிக்கப்படும். சகல கேள்விப் பத்திரங்களையும் ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் முழுமையான அதிகாரம் சூரியவெவ பிரதேச சபைக்கு உரியது. கேள்வி நிபந்தனைகள் கேள்விப் படிவங்களில் குறிப்பிட்டவாறு அமையும்.

மேலதிக விபரங்களை அலுவலகத்தின் தொ.பே இலக்கம் - 047 - 2288212 மூலம் விசாரித்து பெற்றுக் கொள்ளலாம்.

**கவனிக்கவும்!**

மேற்படி கேள்வித் தொகைக்கு மேலதிகமாக வெட் வரி மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரியும், அரசினால் அவ்வவ்போது அறவிடக்கூடிய ஏனைய வரி வகைகளையும் செலுத்துதல் வேண்டும்.

**2024.09.06ம் திகதி**
**சூரியவெவ பிரதேச சபை அலுவலகத்தில்,**

**டெக்லா சுதுசிங்ஹ**
**செயலாளர்,**
**சூரியவெவ பிரதேச சபை**

# இலங்கை சட்ட உதவிகள் ஆணைக்குழு

## பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்ட வாகனங்களை விற்பதற்கான விலைமனுக் கோரல்

**இலக்கம்:** 129, உயர் நீதிமன்ற வளாகம், கொழும்பு 12 முகவரியில் அமைந்துள்ள இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு பயன்பாட்டில் இருந்து நீக்கிய வாகனத்தை விற்பதற்கு முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| வரிசை இலக்கம் | வாகன இலக்கம் | வாகனத்தின் வகை | வாகனத்தின் விபரம் | விலைமனு பிணை தொகை ரூபா | பரீட்சிக்க முடியுமான இடம் |
|---|---|---|---|---|---|
| 01. | WPKK 3947 | Micro Rhino | விற்பதற்கு | 5000.00 | இலங்கை சட்ட உதவிகள் ஆணைக்குழு, கொழும்பு 12. |

மேல் குறிப்பிடப்பட்ட வாகனத்தை 2024.09.06 ஆம் திகதி தொடக்கம் 2024.09.20 ஆம் திகதி வரை அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.00 வரையான காலத்தில் மேல் குறிப்பிடப்பட்ட இடத்தில் இருந்து நிறுவன அதிகாரி ஒருவரின் நேரடி மேற்பார்வையின் கீழ் பரீட்சித்துப் பார்க்க முடியும்.

இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கொள்வனவாளர்களுக்கு 2024.09.06 ஆம் திகதி தொடக்கம் 2024.09.20 ஆம் திகதி வரை மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக ரூபா 1500.00 தொகையை சட்ட உதவிகள் ஆணைக்குழுவின் சிறாப்பருக்கு செலுத்தி, பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை சமர்ப்பித்து விலைமனுக் கோரல் விண்ணப்பப் படிவம் ஒன்றை சட்ட உதவிகள் ஆணைக்குழுவின் பெறுகை மற்றும் வழங்கல் பிரிவின் அதிகாரியிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறு பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப் படிவத்தின் மூலம் மாத்திரம் விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

தாமதித்து கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதோடு 2024.09.20 ஆம் திகதி பி.ப. 2.00க்கு சட்ட உதவிகள் ஆணைக்குழுவின் பெறுகை மற்றும் வழங்கல் பிரிவில் விலைமனுக்கள் திறக்கப்படுவதோடு, விலைமனுக்களை சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு அந்த சந்தர்ப்பத்திற்கு பங்கேற்க முடியும்.

**மேலதிக விபரங்களை :** தொலைபேசி இலக்கம் 0112 433 618 ஊடாக பெற்றுக்கொள்ள முடியும்.

**சட்ட உதவிகள் ஆணைக்குழு**
**இலக்கம்: 129, புதுக்கடை,**
**கொழும்பு 12.**

---

# திருத்தம்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**
**உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம்**
**PROJECT ID:P 163305**
**கிழக்கு மாகாணம் மட்டக்களப்பு - இயந்திராதிகளின் வழங்கல்**

மேலேயுள்ள திட்டம் தொடர்பாக 2024 ஒகஸ்ட் 23 ஆம் திகதியன்று 'தினமின, டெயிலி நியூஸ் மற்றும் தினகரன் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட வாகனங்களுக்கான விலைமனுக்களுக்கான அழைத்தல் அறிவித்தல் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது. ஏறாவூர் நகர சபைக்காக திண்மக் கழிவு முகாமைத்துவ அலகிற்கு வாகனங்களை கொள்வனவு செய்தல் (Tractor-04 Nos, Tractor Trailer—4 Nos and Track mounted Gulley Bowser 5000lt-01 No)

தகவல் அட்டவணையானது கீழே வழங்கப்பட்டவாறு திருத்தப்பட்டுள்ளது.

| தொ. இல. | உள்ளூர் நிர்வாகத்தின் பெயர் | வேலைகளின் விளக்கம் மற்றும் விலைமனு இல. | ஒப்பந்தக் காலம் (நாட்காட்டி நாட்கள்) | தேவையான விலைமனுப்பிணை | | விலைமனு செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | விலைமனுப் பிணைத் தொகை | செல்லுபடி யாகும் காலம் | |
| 1 | ஏறாவூர் நகர சபை | ஏறாவூர் நகர சபையின் திண்மக் கழிவு அலகிற்கு வாகனங்களை கொள்வனவு செய்தல் (Tractor-04 Nos) LDSP/EP/BT/EUC/2024/PT3/01A | 30 நாட்கள் | 210,000.00 | 27.12.2024 | 29.11.2024 |
| 2 | | ஏறாவூர் நகர சபையின் திண்மக் கழிவு அலகிற்கு வாகனங்களை கொள்வனவு செய்தல் (Tractor Trailer-04 Nos) LDSP/EP/BT/EUC/2024/PT3/01B | 30 நாட்கள் | 30,000.00 | 13.12.2024 | 15.11.2024 |
| 3. | | ஏறாவூர் நகர சபையின் திண்மக் கழிவு அலகிற்று வாகனங்களை கொள்வனவு செய்தல் (Truck mounted Gulley Bowser 5000lt-01 No) LDSP/EP/BT/EUC/2024/PT3/01C | 30 நாட்கள் | 160,000.00 | 27.12.2024 | 29.11.2024 |

2024.08.23 ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட மேலேயுள்ள 'விலைமனுக்களுக்கான அழைத்தலில் பிரசுரிக்கப்பட்ட ஏனைய அநுபந்தங்கள் மற்றும் தேவைப்படுத்தல்களில் எவ்வித மாற்றமுமில்லை.

**தலைவர்,**
**மாகாண திட்ட பெறுகைக் குழு,**
**உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம்,**
**உள்ளூராட்சி ஆணையாளர். உள்ளூராட்சித் திணைக்களம்**
**வரோதய நகர், திருகோணமலை.**
06.09.2024

---

# கேள்விகோரல் அழைப்பு

**மாகாண வீதி அபிவிருத்தி,**
**கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள், சுற்றுலா,**
**விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு**

## சப்ரகமுவ மாகாண சபை

2024ம் ஆண்டிற்காக சப்ரகமுவ மாகாண விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்திற்கு விளையாட்டு உபகரணங்களை வழங்குவதற்கு தகைமையுள்ள மற்றும் தகுதியுள்ள கேள்விதாரர்களிடமிருந்து சப்ரகமுவ மாகாண சபையின் மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள், சுற்றுலா, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு பெறுகைக் குழுவின் தலைவரால் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| | உருப்படி | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் ரூ. | கேள்விப் பிணைத் தொகை ரூ. | |
|---|---|---|---|---|
| | | | காசாக | வங்கிப் பிணை மூலம் |
| பெக்கேஜ் 01 | விளையாட்டு உபகரணம் | 5000.00 | 98,000.00 | 196,000.00 |
| பெக்கேஜ் 02 | விளையாட்டு பாதணிகள் | 3000.00 | 24,000.00 | 48,000.00 |

- o மேலதிக விபரங்களை www.sg.gov.lk இணையதளத்திற்குள் உள்ள நிறுவனத்திற்கு சென்று அங்குள்ள மாகாண வீதி, அபிவிருத்தி அமைச்சு இணையதளத்திற்கு பிரவேசித்துப் பெற்றுக் கொள்ளலாம்.
- o இக் கொள்வனவு செய்தல் பற்றிய விபரங்களை மாகாண வீதி அமைச்சிற்கு வருகை தந்து அல்லது தொ.பே.இலக்கம் 045 - 2223154 இடம் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். தேவைப்படும் ஒருவருக்கு இலவசமாக வாரத்தின் வேலைநாட்களில் கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
- o 2024.09.30 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கப்படும்.
- o 2024.10.01 மு.ப. 11.00 வரை கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்படும்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சு,**
**சப்ரகமுவ மாகாண சபை,**
**நவநகரம்**
**இரத்தினபுரி.**

045 - 2223154 2024 செப்டெம்பர் 06ம் திகதி

---

# பெறுகை அறிவித்தல்

## மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்தல்

**தள வைத்தியசாலை (போதனா) - கம்பளை**

01. பின்வரும் மருத்துவ உபகரணங்களின் வழங்கலுக்காக கம்பளை தள வைத்தியசாலையின் (போதனா) பெறுகை குழுத்தலைவரினால் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுவதுடன் 2024.09.20 ஆம் திகதியன்று பி.ப. 10.30 மணி வரையும் விலைமனுக்கள் பெற்றுக் கொள்ளப்படும்.
02. இலங்கை சந்தையில் முன்வைக்கப்படும் உபகரணங்களின் உற்பத்தியாளர்களின் ஏகநியமிக்கப்பட்ட பிரதிநிதி /தரஅங்கீகாரம் பெற்ற முகவர்கள் மாத்திரமே இந்த கேள்வியில் பங்கு பற்றுவதற்கான தகுதியை பெற்றுக் கொள்வர்.
03. பின்வருவற்றைச் சமர்ப்பித்து எந்தவொரு ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர், முகவர், பிரதிநிதி அல்லது பெயர் குறிப்பிடுபவர் அல்லது விலைமனுதாரரின் சார்பில் செயற்படுபவர் விலைமனு ஆவணத்தை விலைமனுக்கோரல் ஆவணங்களில் சமர்ப்பித்தல் வேண்டும்.
    - அ) கம்பளை (போதனா) தள வைத்தியசாலை பிராந்திய பெறுகைக் குழுத் தலைவருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்று .
    - ஆ) வேலை நேரங்களில் கம்பளை தள வைத்தியசாலை (போதனா) கணக்காளரிடம் ரொக்கப் பணத்தில் ஒவ்வொரு அம்சத்திற்கும் 2,500.00 ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்துதல்
    - இ) வியாபார பதிவுச் சான்றிதழின் நிழற்படப்பிரதியொன்று அல்லது உறுதியளிக்கப்பட்ட பிரதியொன்று.
    - ஈ) உற்பத்தி முதன்மையாளர்களினால் அவர்களின் உற்பத்திகளுக்கு உள்ளூர் முகவர்களாக நியமித்த சான்றிதழ்/ கடிதம்.
04. 2024.09.06 ஆம் திகதியிலிருந்து 2024.09.19 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 2 மணிக்குமிடையில் கம்பளை (போதனா) தள வைத்தியசாலையிலிருந்து விலைமனு ஆவணங்களை கையேற்றுக் கொள்ளலாம்.
05. முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனு ஆவணங்கள் 2024.09.20 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது கம்பளை (போதனா) தள வைத்தியசாலையின் பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.
06. விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் கம்பளை, தள வைத்தியசாலையின் (போதனா) பிராந்திய பெறுகை குழுத் தலைவரின் அலுவலகத்தில் 2024.09.20 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு திறக்கப்படுவதுடன் அந்நேரத்தில் விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதியானவர் பார்வையாளரொருவராக பங்கு பற்றலாம்.
07. பெறுகைக்கான மதிப்பீடு செய்யப்படும் ஆகுசெலவானது 5,000,000 ரூபாவை விஞ்சினால விலைமனுதாரர் விலைமனுக்களை சமர்ப்பிக்கும் வேளையில் இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு செய்திருத்தல் வேண்டும் (பிசிஏ 3)
08. விலைமனு முன்னோடிக் கூட்டம்: 2024.09.13 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு கம்பளை தள வைத்தியசாலை (போதனா) இன் பணிப்பாளரின் அலுவலகத்தில் நடைபெறும்.

| No. | Item | Quantity | Bid Bond (Rs) | Validity | Bid Bond addressed to: |
|---|---|---|---|---|---|
| 01. | Photo Therapy Machine | 02 | 20,000.00 | 119 days | Medical Superintendent BH Gampola |
| 02 | Transport Ventilator (Adult) | 01 | 100,000.00 | 119 days | |
| 03 | ECG Machine | 02 | 30,000.00 | 119 days | |
| 04 | VOG Scanner Machine | 01 | 160,000.00 | 119 days | |
| 05 | CTG Machine | 02 | 20,000.00 | 119 days | |
| 06 | Multipara meter Monitor | 20 | 200,000,00 | 119 days | |
| 07 | Autoclave Machine | 02 | 20,000.00 | 119 days | |

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**தள வைத்தியசாலை (போதனா),**
**கம்பளை.**

---

# முன்மொழிவுகளுக்கான அழைப்பு (IFB)

**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**
**பாரிய கொழும்பு நகரப் போக்குவரத்து அபிவிருத்தித் திட்டம்**

## கொட்டாவ – மாகும்புர பலமாதிரி போக்குவரத்து நிலையத்தில் விற்பனைக் கூடங்கள் மற்றும் விளம்பரப் பிரசாரத்திற்கு இடவசதிகளை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கான பெறுகை

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் பாரிய கொழும்பு நகரப் போக்குவரத்து அபிவிருத்தித் திட்டத்தின் செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவரினால் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| Procurement No. | Item Descriptions | Area (Sq.ft) | Location | Renting Platform |
|---|---|---|---|---|
| MoT&H/GCUTDP/MMC/BD/2024/M.4.1/RS/1 | Mini Theater | 1,272.60 | Indoor | Space Renting |
| MoT&H/GCUTDP/MMC/BD/2024/M.4.1/RS/2 | Shop 05 | 506.00 | | |
| MoT&H/GCUTDP/MMC/BD/2024/M.4.1/RS/3 | Shop 04 | 423.28 | | |
| MoT&H/GCUTDP/MMC/BD/2024/M.4.1/RS/4 | Food Vending Machines (2 Nos.) | 16.00 | | |
| MoT&H/GCUTDP/MMC/BD/2024/M.4.1/RS/5 | Kiosk 01 | 696.00 | | |
| MoT&H/GCUTDP/MMC/BD/2024/M.4.1/RS/6 | Shop 03 | 400.00 | | |
| MoT&H/GCUTDP/MMC/BD/2024/M.4.1/RS/7 | Kiosk 02 | 48.00 | | |
| MoT&H/GCUTDP/MMC/BD/2024/M.4.1/RS/8 | Kiosk 03 | 48.00 | | |
| MoT&H/GCUTDP/MMC/BD/2024/M.4.1/RS/9 | Shop 06 | 204.00 | | |
| MoT&H/GCUTDP/MMC/BD/2024/M.4.1/RS/10 | Kiosk 04 | 102.00 | | |
| MoT&H/GCUTDP/MMC/BD/2024/M.4.1/RS/11 | Kiosk 05 | 396.00 | | |
| MoT&H/GCUTDP/MMC/BD/2024/M.4.1/RS/12 | Kiosk 06 | 396.00 | | |
| MoT&H/GCUTDP/MMC/BD/2024/M.4.1/RS/13 | Shop 07 | 586.80 | Outdoor | Shop Renting |
| MoT&H/GCUTDP/MMC/BD/2024/M.4.1/RS/14 | Food Cabin | 1715.7 | Indoor | |
| MoT&H/GCUTDP/MMC/BD/2024/M.4.1/RS/15 | Grocery Shop No. 01 | 114.00 | | |
| MoT&H/GCUTDP/MMC/BD/2024/M.4.1/RS/16 | Grocery Shop No. 02 | 132.00 | | |
| MoT&H/GCUTDP/MMC/BD/2024/M.4.1/RS/17 | Coffee Shop | 39.75 | | |
| MoT&H/GCUTDP/MMC/BD/2024/M.4.1/RS/18 | Kiosk 07 | 9.60 | | |
| MoT&H/GCUTDP/MMC/BD/2024/M.4.1/RS/19 | Open Terrace No.01 (Space) | 946.00 | Outdoor | Space Renting |
| MoT&H/GCUTDP/MMC/BD/2024/M.4.1/RS/20 | Open Terrace No.02 (Space) | 1,346.00 | | |
| MoT&H/GCUTDP/MMC/BD/2024/M.4.1/RS/21 | Outdoor Space | 308.00 | | |
| MoT&H/GCUTDP/MMC/BD/2024/M.4.1/RS/22 | Entrance LED Video Panel | 286.00 | Outdoor | Digital Advertising |
| MoT&H/GCUTDP/MMC/BD/2024/M.4.1/RS/23 | Boundary Fence | 2,056.56 | Outdoor | Advertising |
| MoT&H/GCUTDP/MMC/BD/2024/M.4.1/RS/24 | Park & Ride Fence | 5,040.00 | | |
| MoT&H/GCUTDP/MMC/BD/2024/M.4.1/RS/25 | Front Hoarding | 1,500.00 | | |

01. தேசிய போட்டி ரீதியிலான முன்மொழிவு கோரல் நடைமுறையின் மூலம் விலைமனுக்கள் கோரப்படும். (இரு கடிதவுறை கேள்வியிடல் முறை)
02. சகல முன்மொழிவுகளுக்குமான மீளளிக்கப்படாத கட்டணம் 3000.00 ரூபாவாகும்.
03. 2024 செப்டெம்பர் 06ஆம் திகதி முதல் 2024 செப்டெம்பர் 26ஆம் திகதி வரையில் (வேலை நாட்களில்) மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.30 மணி வரையில் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் கருத்திட்டப் பணிப்பாளர், பாரிய கொழும்பு நகரப் போக்குவரத்து அபிவிருத்தித் திட்டத்தின் நகர்ப்புற அபிவிருத்திக் கூறு, GB-01, தரைத் தளம், செத்சிறிபாய கட்டம் II, பத்தரமுல்ல எனும் முகவரியில் பொதுவான முழுமையான விலைக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் அந்த செயற்றிட்டப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் முன்மொழிவு ஆவணங்களைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் மட்டும் மேற்கொள்ளல் வேண்டும்.
04. இது தொடர்பில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் மேலதிக தெளிவுபடுத்தல்களை கருத்திட்டப் பணிப்பாளர், பாரிய கொழும்பு நகரப் போக்குவரத்து அபிவிருத்திக் கருத்திட்டம், GB-01, தரைத் தளம், செத்சிறிபாய கட்டம் II, பத்தரமுல்ல எனும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 0112186094 / 011 2034471, தொலைநகல்: 011-2186096
05. தள விஜயமொன்று 2024 செப்டெம்பர் 13ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு கொட்டாவையிலுள்ள மாகும்புர, பலமாதிரி போக்குவரத்து நிலையத்தில் ஆரம்பமாகும் என்பதுடன் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் தள விஜயத்தின் பின் அதே முகவரியில் இடம்பெறும்.
06. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பெறுகை இலக்கம் மற்றும் விடயத்தை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை நேரில் கொண்டுவந்து ஒப்படைக்கலாம் அல்லது கருத்திட்டப் பணிப்பாளர், பாரிய கொழும்பு நகரப் போக்குவரத்து அபிவிருத்திக் கருத்திட்டம், GB-01, தரைத் தளம், செத்சிறிபாய கட்டம் II, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம்.
07. முன்மொழிவுகளை இரு பிரதிகளில் பின்வரும் முகவரிக்கு 2024 செப்டெம்பர் 27ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும்.

**கருத்திட்டப் பணிப்பாளர்,**
**பாரிய கொழும்பு நகரப் போக்குவரத்து அபிவிருத்திக் கருத்திட்டம்,**
**GB-01, தரைத் தளம், செத்சிறிபாய கட்டம் II, பத்தரமுல்ல**

## பெறுகை அறிவித்தல்

ஊவா மாகாண விவசாய, நீர்ப்பாசன, விலங்கு உற்பத்தி மற்றும் நன்னீர் மீன்பிடி விடயங்கள் அமைச்சினால் செயற்படுத்தப்படும் செயற்றிட்டங்களுடன் சம்பந்தப்பட்ட நன்னீர் மீன்பிடி மற்றும் அலங்கார மீன் கருவிகளை கொள்வனவு செய்வதற்கு தகைமையான வழங்குநர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

மேலதிக விபரங்களுக்கு ஊவா மாகாண விவசாய அமைச்சு 055 - 2232018 அல்லது www.up.gov.lk இணையதளத்தின் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

**இறுதித் திகதி - 2024.10.07**
**பெறுகைக் குழுவின் தலைவர்,**
**ஊவா மாகாண விவசாய, நீர்ப்பாசன, விலங்கு உற்பத்தி மற்றும் நன்னீர் மீன்பிடி விடயங்கள் அமைச்சு,**
**ரத்வத்த மாவத்த,**
**பதுளை.**

## பெயர் மாற்றம்

பஹ்றியா நகர், மூதூர் என்ற விலாசத்தில் வசித்து வரும் ஜபருல்லா முகமட் சிம்றான் எனும் பெயர் கொண்ட நான் தற்போது எனது பெயரை ஜபருல்லா முகமட் இம்றான் என மாற்றிக் கொண்டதோடு இனி வரும் எனது சகல ஆவணங்களிலும் ஜபருல்லா முகமட் இம்றான் என்ற பெயரையே இணைத்துக் கொள்வேன் என்றும் இதனையே வழமையான பெயராக பயன்படுத்துவேன் என உறுதிப்படுத்துகின்றேன்.

**Repeat Your ad For Better Offers**

## 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தல் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7(1) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது குறிப்பு இல.:ARA/LND/ACQV1/D3/52**
**உல்லாச பிரயாண மற்றும் காணி அமைச்சின் குறிப்பு இல:.4-3/15/2018/VE/08**

கீழ் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணி மண்சரிவினால் பாதிக்கப்பட்டவர்களை மீள்குடியேற்றுவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட காணிக்கு பிரவேசிப்பதற்காக பாதையொன்றை நிர்மாணிப்பதற்காக சுவீகரித்தல். மேலதிக விபரங்களுக்காக 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 08 ஆம் திகதி இலக்கம் 2396/35 கொண்ட இலங்கை சனநாயக சோசஷலிச குடியரசின் அதிவிசேட வார்த்தமானியை பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாவட்டம் | - கேகாலை |
| பிரதேச செயலாளர் பிரிவு | - அரனாயக |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | - 43பீ, கடபேரிகன்த |
| கிராமத்தின் பெயர் | - வலிமன்ன |
| காணியின் பெயர் | - நிகதன்ன வத்த |
| ஆரம்ப வரைபட இலக்கம் | - கே 3742 |
| காணித் துண்டு இலக்கம் | - 01 |

**ஷாமலி பியதிஸ்ஸ,**
**பிரதேச செயலாளர்,**
**அரனாயக.**

**2024 ஆகஸ்ட் மாதம் 22ஆம் திகதி**
**பிரதேச செயலகம்**
**அரனாயக**

## பெறுகை அறிவித்தல்

### மோட்டார் வாகன வருமான அனுமதிப் பத்திரங்களை அச்சிடுதல் - 2025

### தென் மாகாண மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம்

01. தென் மாகாண மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு 2025ஆம் வருடத்தில் மோட்டார் வாகன வருமான அனுமதிப் பத்திரங்களை பின்வரும் வகையில் அச்சிட்டுக் கொள்வதற்காக தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
   - ❖ மோட்டார் வாகன வருமான அனுமதிப் பத்திரங்கள் 1,000,000 (பத்து இலட்சம்) அச்சிடுதல்
02. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் முறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படும்.
03. பாதுகாப்பு அச்சுக் காகிதம் மற்றும் மை என்பவற்றைப் பயன்படுத்தி வருமான அனுமதிப் பத்திரங்களை அச்சிடுவதில் ஈடுபட்டுள்ள அனுபவம் வாய்ந்த உள்நாட்டு அச்சு நிறுவனங்கள் இதற்காக விண்ணப்பிக்கலாம்.
04. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்ததன் பின் மீளளிக்கப்படாத 1,500.00 ரூபாவை விலைமனுக் கட்டணமாகச் செலுத்தி சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள முழுமையான விலைக்கோரல் ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

| | | |
|---|---|---|
| ❖ விலைமனுக்கள் வழங்குதல் | - | 2024-09-09ஆம் திகதி முதல் 2024-09-27ஆம் திகதி வரை (அலுவலக நாட்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 03.00 மணி வரை) |
| ❖ விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் | - | 2024-09-30ஆம் திகதி பி.ப. 1.45 மணி வரை |
| ❖ விலைமனுக்கள் திறக்கப்படுதல் | - | 2024-09-30ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு |

05. இது தொடர்பான மேலதிக விபரங்களை மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் 091-4944224/091-4944225 எனும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**ஆணையாளர்,**
**தென் மாகாண மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்,**
**இல. 15/ஏ, கீழ் டிக்சன் வீதி,**
**காலி.**

**The Housewives' companion Classifieds on Daily News**

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### சுகாதார அமைச்சு

### மருத்துவ வாயு அமைப்பின் நீடிப்பு – கட்டம் 01 மற்றும் 02

### தள வைத்தியசாலை, கம்பளை

### ஒப்பந்த இல.: AA/MA SYSTEM/ICU&SCBU/2024

1. மதிப்பிடப்பட்ட 56.2 மில்லியன் ரூபாவின் (வெட் இன்றி) செலவைக் கொண்டதும் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு, ஒப்பந்த இல.: AA/MA SYSTEM/ICU&SCBU/2024, 'கம்பளை, தள வைத்தியசாலைக்காக மருத்துவ வாயு அமைப்பின் நீடிப்பு - கட்டம் 01 மற்றும் 02' இற்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து கொழும்பு 10, சங்கைக்குரிய பத்தேகம விமலவன்ச தேரர் மாவத்தை, 385, 'சுவசிறிபாய', சுகாதார அமைச்சின் சார்பில் கம்பளை, தள வைத்தியசாலை, பணிப்பாளரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஒப்பந்தக் காலம் 91 நாட்களாகும்.
   கம்பளை, தள வைத்தியசாலை வளவில் இந்த இடம் அமைந்துள்ளது. இந்த ஒப்பந்தத்தின் கீழ், தேவையான உப வேலைகளுடன் மருத்துவ வாயு அமைப்பின் வழங்கல் மற்றும் நிறுவல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு விபரக்குறிப்புகள் மற்றும் Bill of quantities இனை பார்க்கவும். விலைமனுவுக்கு விலையிடுவதற்கு முன் தளத்திற்கு செல்வதற்கு விலைமனுதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர். வைத்தியசாலையின் நாளாந்த வேலைகளுக்கு இடையூறு இன்றி இந்த வேலையை மேற்கொள்ளுதல் வேண்டும்.
2. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
3. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் பின்வரும் தேவைகளை பூர்த்தி செய்தவராகவும் இருத்தல் வேண்டும்.
   - தரம் - நுஆ 02 அல்லது அதற்கு மேல்
   - சிறப்புத்தன்மை - மருத்துவ வாயு அமைப்புகள் (MG)
   - கடந்த ஐந்து ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலையின் சராசரி ஆண்டு பெறுமதி குறைந்தது 90 மில். ரூபா இருத்தல் வேண்டும்.
   - 10 ஆண்டுகளுக்கான வேலைகளுக்கு 30 மில்லியன் ரூபாவுக்கு குறையாத பெறுமதி ஒன்றுக்கு இதனையொத்த பண்பு மற்றும் பெறுமதி ஒன்றின் குறைந்தது ஒரு ஒப்பந்தத்தின் நிர்மாணத்தில் அனுபவம். பின்னிணைப்பு ஒன்றாக இணைக்கவும். (முழுமையான அறிக்கை ஒன்றாக இணைக்க வேண்டும்)
   - எந்த ஒரு முற்கொடுப்பனவையும் தவிர்த்ததாக 56.2 மில்லியன் ரூபாவுக்கு குறையாத கடன் வசதியை கொண்டிருத்தல் வேண்டும். கடன் வசதி கம்பளை, தள வைத்தியசாலை, பணிப்பாளருக்கு குறிப்பிடப்பட்டதாக இருத்தல் வேண்டும் என்பதோடு இந்த குறிப்பிட்ட திட்டத்தை தவிர்த்து இருத்தல் வேண்டும்.

**முகாமைத்துவம்/ தொழில்நுட்பம்**

பொறியியல் உதவியாளர் (இயந்திரவியல்), (முழு நேரம்) - குறைந்தது 5 ஆண்டுகள் அனுபவத்துடன் NDT, NDES, HNDE (இயந்திரவியல்) பொறியியல் அல்லது அதற்கு இணையான தகைமை.

4. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் 081-2352261 என்ற தொலைபேசியில் கம்பளை, தள வைத்தியசாலை, பணிப்பாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை கீழ் தரப்பட்டுள்ள முகவரியில் விலைமனு ஆவணத்தை பரீட்சிக்க முடியும்.
5. கம்பளை, தள வைத்தியசாலை, சிறாப்பருக்கு 7,500.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி 2024.09.07 ஆம் திகதி தொடக்கம் 2024.09.26 ஆம் திகதி வரை 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை கம்பளை, தள வைத்தியசாலை, பணிப்பாளருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை வாங்கலாம். கட்டண முறை ரொக்கப்பணத்தில் மாத்திரம் இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்களை 2024.09.27 ஆம் திகதி மு.ப. 10.30 அல்லது அதற்கு முன்னர் கீழுள்ள முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் அல்லது விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலை விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும்.
7. 2024.09.27 அன்று விலைமனு மூடப்படும் திகதியில் இருந்து 2024.12.27 ஆம் திகதி வரை 91 நாட்கள் அல்லது வாடிக்கையாளரினால் கோரப்படும் எந்த ஒரு நீடிக்கப்பட்ட திகதி வரையும் விலைமனு செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் ரூபா எழுநூற்று ஐம்பதாயிரம் (ரூபா 750,000.00) விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும். 2024.09.27 அன்று விலைமனு மூடப்படும் திகதியில் இருந்து 2024.01.24 ஆம் திகதி வரை 119 நாட்களுக்கு விலைமனு பிணை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
9. விலைமனுதாரர் விலைமனுக்களை சமர்ப்பிக்கும் நேரத்தில் இலங்கை பொது ஒப்பந்த பதிவாளரிடம் பதிவு செய்திருத்தல் வேண்டும் (PCA3).
10. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு ஒன்று 2024 செப்டெம்பர் 12 ஆம் திகதி மு.ப. 10.30 இற்கு இடம்பெறும்.

**மேல் குறிப்பிடப்பட்ட முகவரியானது**
**பணிப்பாளர்,**
**தள வைத்தியசாலை,**
**கம்பளை.**
**தொ.இல.: 081-2352261**

## பெறுகை அறிவித்தல்

### பிரதேச செயலகம் - கல்முனை

### 2024 ஆம் ஆண்டின் ஜனாதிபதி செயலக விஷேட வேலைத்திட்டத்தின் கீழ் SPORTS ITEMS கொள்வனவு செய்தல்

பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து Sports Items கொள்வனவு செய்து வழங்குவதற்கு கல்முனை பிரதேச செயலக பிராந்திய பெறுகை குழுவானது NCB முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

| S.No | Reference Number | Description of Goods | Non-refundable Deposit | Allocated Amount |
|---|---|---|---|---|
| 01 | KM/DS/PROCU/PSP/SPORTS/2024/01 | PROCUREMENT OF SPORTS ITEMS | RS. 1500/- | **RS. 9 MILLION** |

2024 செப்டெம்பர் 27 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் கேள்விகள் மனுக்கள் முறையாக மூடப்பட்டு தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் "Quotation of Sports Items" என குறிப்பிட்டு பதிவுத்தபாலில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, பிரதேச செயலகம், கல்முனை என்ற முகவரிக்கு அனுப்பப்படலாம் அல்லது கல்முனை பிரதேச செயலகத்தினுள் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் சேர்க்கப்படலாம் என்பதுடன் அதன் பின்னர் விலைமனுக்கள் உடனடியாகவே திறக்கப்படும்.

கேள்வி பாதுகாப்பு பிணையாக தங்களால் வழங்கப்படும் விலைமனு தொகையில் **1%** பெறுமதி கொண்ட மற்றும் 90 நாட்கள் செல்லுபடியாகும் காலத்தைக் கொண்ட வங்கி பாதுகாப்பு உத்தரவுச் சான்றிதழ் (Bid Security Bond) அல்லது பிரதேச செயலகத்தில் பணம் செலுத்தி பெறப்பட்ட உத்தரவு சான்றிதழ் ஒன்று இணைக்கப்படல் வேண்டும்.

ஒவ்வொரு கேள்வி விண்ணப்பத்திற்கும் விண்ணப்ப கட்டணமாக மேற்குறிப்பிட்ட தொகைகளை பிரதேச செயலகம், கல்முனை எனும் பெயருடைய 7042057 ஆம் இலக்க இலங்கை வங்கி கணக்கிற்கு செலுத்தி வைப்புச்சீட்டினை சமர்ப்பித்து அல்லது கல்முனை பிரதேச செயலக கணக்குப் பிரிவில் மீளளிக்கப்படாத கேள்வி கட்டணமாக செலுத்தி 2024 செப்டெம்பர் 26 ஆம் திகதி மு.ப 9.00 - பி.ப 3.00 மணி வரையும் பெறுகைப் படிவங்கள் மற்றும் விலைமனுக்கோரல் ஆவணங்களையும் பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தகவலுக்காக 0672229388 என்ற எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்**
**பிராந்திய பெறுகைக் குழு**
**பிரதேச செயலகம்**
**கல்முனை.**
**2024.09.06**




# இங்கிலாந்துக்கு எதிராக மூன்றாவது டெஸ்டில் கௌரவத்தை காக்க இலங்கை இன்று களத்தில்

இலங்கை மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்றாவது மற்றும் இறுதி டெஸ்ட் போட்டி லண்டன், கென்னிங்டன் ஓவல் மைதானத்தில் இன்று (06) ஆரம்பமாகவுள்ளது.

ஏற்கனவே, முதல் இரு போட்டிகளிலும் தோல்வியை சந்தித்து தொடரை இழந்திருக்கும் இலங்கை அணி தொடரை முழுமையாக தோற்பதை தவிர்க்க இந்த டெஸ்டில் முயற்சிக்கும். எனினும் முதல் இரு போட்டிகளிலும் இலங்கையின் ஆரம்ப வரிசை தடுமாற்றம் கண்டதோடு பந்துவீச்சில் முக்கிய நேரங்களில் விக்கெட்டுகளை வீழ்த்த தவறியது. இந்நிலையில் இன்றைய போட்டியில் இலங்கை அணியில் மாற்றங்கள் செய்ய வாய்ப்பு அதிகம் உள்ளது.






குறிப்பாக இங்கிலாந்தின் மத்திய வரிசை வீரர் ஜோ ரூட்டின் விக்கெட்டை வீழ்த்துவதில் இலங்கை அணி இந்தத் தொடர் முழுவதிலும் போராடி வருகிறது. ஜோ ரூட் இலங்கைக்கு எதிராக தனது 4 இன்னிங்ஸ்களிலும் முறையே 42, ஆட்டமிழக்காது 62, 143 மற்றும் 103 ஓட்டங்களைப் பெற்றார்.

'இரண்டு போட்டிகளிலும் ஜோ ரூட்ஸின் இன்னிங்ஸ்கள் தான் திருப்புமுனையாக இருந்ததாக நான் நினைக்கிறேன். காலியில் ஆடும்போது கூட அவர் ஓட்டங்களை சேர்த்ததோடு அவரை சுற்றி இருந்த வீரர்கள் ஓட்டங்களை பெறவில்லை. உண்மையிலேயே அவர் பெறும் ஓட்டங்களை நாம் மட்டுப்படுத்த வேண்டியுள்ளது' என்று மூன்றாவது டெஸ்ட் போட்டி ஆரம்பிப்பதற்கு முன்னர் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இலங்கை ஆரம்ப துடுப்பாட்ட வீரர் திமுத் கருணாரத்ன தெரிவித்தார்.

இலங்கை அணி இந்த டெஸ்ட் தொடரை இழந்தபோதும் உலக டெஸ்ட் சம்பியன்சிப் புள்ளிப் பட்டியலில் முன்னேற்றம் காண்பதற்கு இந்த டெஸ்ட் போட்டி முக்கியமாக உள்ளது. இந்தப் புள்ளிப் பட்டியலில் இலங்கை அணி தற்போது ஏழாவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தொடரை வென்ற இலங்கை ஏ கடைசிப் போட்டியில் தோல்வி



தென்னாபிரிக்க ஏ அணிக்கு எதிரான மூன்றாவது உத்தியோக பூர்வமற்ற ஒருநாள் போட்டியில் இலங்கை ஏ அணி 5 விக்கெட்டுகளால் தோல்வியை சந்தித்தது. எனினும் முதல் இரு போட்டிகளையும் வென்ற இலங்கை ஏ 2–1 என தொடரை கைப்பற்றியது.

போட்செப்ஸ்ட்ரூமில் நேற்று முன்தினம் (04) நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை ஏ அணி 50 ஓவர்களுக்கும் 6 விக்கெட்டுகளை இழந்து 308 ஓட்டங்களை பெற்றது. ஆரம்ப வீரர் லஹிரு உதார 90 ஓட்டங்களை பெற்றதோடு நுவனிந்து பெர்னாண்டோ 50 ஓட்டங்களை பெற்ற நிலையில் மத்திய பின்வரிசையில் சமிந்து விக்ரமசிங்க ஆட்டமிழக்காது 70 ஓட்டங்களை விளாசியமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் பதிலெடுத்தாடிய தென்னாபிரிக்க ஏ அணிக்காக ஆரம்ப வீரர் டேவிட் பெடிங்கம் 129 பந்துகளில் 20 பௌண்டரிகள் மற்றும் 5 சிக்ஸர்களுடன் ஆட்டமிழக்காது 188 ஓட்டங்களை பெற்றார். இதன்மூலம் தென்னாபிரிக்க ஏ அணி 42.5 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 311 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

தென்னாபிரிக்கா சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் இலங்கை ஏ அணி அடுத்து தென்னாபிரிக்க ஏ அணியுடன் இரு உத்தியோகபூர்வமற்ற டெஸ்ட் போட்டிகளில் ஆடவுள்ளது. இதன் முதல் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (08) ஆரம்பமாகும்.

# 10 ஓட்டங்களுக்கு சுரண்டு மங்கோலியா டி20 சாதனை



சிங்கப்பூருக்கு எதிரான டி20 உலகக் கிண்ண ஆசிய பிராந்திய தகுதிகாண் போட்டியில் மொங்கோலிய அணி வெறும் 10 ஓட்டங்களுக்கே சுருண்டு ஆடவர் டி20 சர்வதேச போட்டியில் மிகக் குறைவான ஓட்டங்களை பெற்ற அணி என்ற சாதனையை சமன் செய்துள்ளது.

மலேசியாவின் பாங்கியில் நேற்று (05) நடந்த இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட மொங்கோலிய அணி போட்டி ஆரம்பித்தது தொடக்கம் அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுத்தது. அணிக்காக அதிகபட்ச ஓட்டங்களை உதிரி ஓட்டங்களுடன் இருவர் பெற்றதோடு அது வெறுமனே இரண்டு ஓட்டங்களாகும். ஐந்து வீரர்கள் டக் அவுட் ஆகினர்.

இதனால் மொங்கோலிய அணி 10 ஓவர்களில் 10 ஓட்டங்களுக்கு சுருண்டது. பந்துவீச்சில் ஹர்ஷா பரத்வாஜ் 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார். பதிலெடுத்தாடிய சிங்கப்பூர் 5 பந்துகளிலேயே ஒரு விக்கெட்டை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

முன்னதாக இந்த ஆண்டு ஆரம்பத்தில் ஐரோப்பாவில் உள்ள சுயாட்சி பெற்ற பிராந்தியமான ஐல் ஒப் மேன் அணி ஸ்பெயினுக்கு எதிரான போட்டியில் 10 ஓட்டங்களுக்கு சுருண்டு சாதனை படைத்தது.

# இலங்கை–கம்போடிய போட்டி கோலின்றி சமன்



இலங்கை மற்றும் கம்போடிய அணிகளுக்கு இடையிலான 2027 ஆசிய கிண்ண கால்பந்து தகுதிகாண் தொடரின் முதல் சுற்று ஆட்டம் இரு அணிகளும் கோல் பெறாத நிலையில் சமநிலையில் முடிவுற்றது.

கொழும்பு, குதிரைப்பந்தய திடல் மைதானத்தில் நேற்று (05) நடைபெற்ற இந்தப் போட்டியில் இரு அணிகளும் கோல் புகுத்த கடைசி வரை போராடிய போதும் அந்த முயற்சி கைகூடவில்லை.

சுஜான் பெரேரா தலைமையிலான இலங்கை கால்பந்து அணியின் பின்கள வீரர்கள் எதிரணியின் சவாலை சமாளித்ததோடு முன்கள வீரர்களால் கம்போடிய கோல் கம்பத்தை ஒரு சில சந்தர்ப்பங்களில் ஆக்கிரமிக்க முடிந்தது. என்றாலும் பந்தை வலைக்குள் செலுத்த முடியாமல்போனது.

சர்வதேச கால்பந்து சம்மேளத்தின் தரவரிசையில் இலங்கை அணி 205 ஆவது இடத்தில் இருப்பதோடு கம்போடிய அணி 180 ஆவது இடத்தில் உள்ளது. இந்நிலையில் கம்போடிய அணிக்கு இலங்கை அணியால் சவால் கொடுக்க முடிந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கை அணி கம்போடியாவுக்கு எதிரான இந்த இரண்டு சுற்றுகளைக் கொண்ட போட்டிக்கு குவைட் நாட்டைச் சேர்ந்த நேபாள அணியின் முன்னாள் பயிற்சியாளர் அப்துல்லா அல்முதைரியின் பயிற்சியின் கீழ் ஆடி வருகிறது.

இலங்கை அணி 2016 ஆம் ஆண்டுக்குப் பின்னரே கம்போடிய அணியை எதிர்கொண்டமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் இரு அணிகளும் மோதும் இரண்டாம் சுற்று போட்டி கம்போடியாவில் எதிர்வரும் செப்டெம்பர் 10 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

# அமெரிக்க பாடசாலை சூட்டில் நால்வர் பலி



அமெரிக்காவின் ஜோர்ஜியா மாநிலத்தில் உள்ள உயர் பாடசாலை ஒன்றில் 14 வயது சிறுவன் ஒருவன் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் சக மாணவர்கள் இருவர் மற்றும் ஆசிரியர்கள் இருவர் கொல்லப்பட்டதோடு மேலும் ஒன்பது பேர் காயமடைந்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் சந்தேக நபரான சிறுவன் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பதோடு இந்த சிறுவன் பாடசாலையில் துப்பாக்கிச்சூடு நடத்துவதாக இணையதளத்தில் எச்சரித்ததை அடுத்து பொலிஸாரால் கடந்த ஆண்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

கோல் கிரே என்ற இந்த சிறுவனை வயது வந்த ஒருவராகக் கருதி குற்றச்சாட்டு பதிவு செய்யப்படும் என்று ஜோர்ஜிய புலனாய்வுப் பணியக பணிப்பாளர் கிறிஸ் ஹோசி தெரிவித்துள்ளார்.

சிறுவன் துப்பாக்கிச்சூடு நடத்த ஆரம்பித்த விரைவிலேயே பாடசாலையில் காவலில் ஈடுபட்ட பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார். சிறுவன் தனியாக இந்த செயலில் ஈடுபட்டிருப்பதாக விசாரணையில் தெரியவந்தபோதும் தாக்குதலுக்கான காரணத்தை விசாரணையாளர்களிடம் சிறுவன் கூற மறுத்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் பாடசாலைகளுக்குள் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் அடிக்கடி இடம்பெறுவதோடு வெர்ஜினிய தொழில்நுட்ப கல்லூரியில் 2007 ஆம் ஆண்டு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 30க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டது அதிகபட்சமாகும்.

# பூமியில் தீப்பந்தாக விழுந்த விண்கல்



பூமியுடன் மோதவந்த சிறிய விண்கல் ஒன்று பிலிப்பைன்ஸ் வானுக்கு மேலால் இரவு வானில் தீப்பந்தாக வளிமண்டலத்தில் பாதுகாப்பாக சிதைந்தது என்று அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசா குறிப்பிட்டுள்ளது. சுமார் 3 அடி கொண்ட இந்த விண்கல் அமெரிக்காவின் அரிசோனாவில் வானியலாளர்களால் அவதானிக்கப்பட்டிருப்பதோடு தொடர்ந்து அது பிலிப்பைன்ஸின் லூசோன் தீவுக்கு அருகில் மேற்கு பசுபிக் பெருங்கடலுக்கு மேலால் கடந்த புதனன்று துண்டுகளாக எரிந்து சிதறியுள்ளது.

2024 ஆர்.டபிள்யு.1 என்று பெயரிடப்பட்ட இந்த விண்கல் பூமியில் விழுவதற்கு முன்னர் மனிதகுலத்தால் இதுவரை அவதானிக்கப்பட்ட ஒன்பதாவது விண்கல்லாக உள்ளது என்று ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. இந்த அளவான விண்கற்கள் எந்த ஆபத்தும் இன்றி ஒவ்வொரு இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை பூமியை நோக்கி வருவதாக அது குறிப்பிட்டது.

பூமியின் வளிமண்டலத்தில் தீப்பந்தாக எரிந்து சிதறும் இந்த விண்கல்லின் காட்சியை நாசா இணையதளம் வெளியிட்டுள்ளது.

## சர்வதேச செய்திகள்

# மேற்குக் கரையில் ஒரு வாரத்தை தாண்டி இஸ்ரேலின் முற்றுகை நீடிப்பு: பலரும் பலி

## காசாவில் போலியோ தடுப்பு மருந்து வழங்கும் அதேநேரம் போர் நீடிப்பு

காசாவில் இரண்டாவது கட்டமாக போலியோ தடுப்பு மருந்து வழங்கும் திட்டம் தெற்கில் உள்ள மருத்துவ மையங்களில் நேற்று (05) ஆரம்பிக்கப்பட்ட நிலையில் ஏனைய பகுதிகளில் தொடர்ந்து போர் நீடிப்பதோடு இஸ்ரேல் நடத்திய புதிய தாக்குதல்களில் மேலும் பலர் கொல்லப்பட்டிருப்பதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மத்திய காசாவில் கடந்த நான்கு நாட்களாக இடம்பெற்ற போலியோ தடுப்பு மருந்து வழங்கும் திட்டம் நேற்று தெற்கு காசாவில் ஆரம்பிக்கப்பட்டது. இதனையொட்டி மருத்துவ மையங்களில் பெரும் எண்ணிக்கையானோர் ஒன்றுதிரண்டனர்.

இந்தத் திட்டதின் கீழ் இதுவரை 10 வயதுக்கு உட்பட்ட 187,000இற்கும் அதிகமானவர்களுக்கு தடுப்பு மருந்து வழங்கப்பட்டிருப்பதாக பலஸ்தீன சுகாதார நிர்வாகம் தெரிவித்துள்ளது.

தடுப்பு மருந்து வழங்குவதற்காக குறிப்பிட்ட பகுதிகளில் காலை முதல் மாலை வரை போர் நிறுத்தத்தை கடைப்பிடிக்க இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்பு இணங்கின.

எனினும் காசாவில் ஏனைய பகுதிகளில் தொடர்ந்து இஸ்ரேலின் உக்கிர தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன. மத்திய காசாவின் டெயிர் அல் பலாஹ்வில் உள்ள அல் அக்சா வைத்தியசாலையில் இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதல் ஒன்றில் ஐந்து பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக காசா சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

மருத்துவமனை வளாகத்திற்குள் அடைக்கலம் பெற்று கூடாரம் அமைத்திருந்தவர்களே கொல்லப்பட்டதாகவும் அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மறுபுறம் தெற்கு காசாவின் ரபா நகருக்கு அருகில் இருக்கும் மொஸ்பாஹ் சுற்றுப்பகுதியில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல் ஒன்றில் இருவர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டுள்ளது. ஆளில்லா விமானத்தின் மூலம் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

காசாவில் இஸ்ரேல் இடைவிடாது நடத்தும் தாக்குதல்கள் 11ஆவது மாதத்தை தொடவிருக்கும் நிலையில் இதுவரை அங்கு கொல்லப்பட்ட பலஸ்தீனர்களின் எண்ணிக்கை 41,000ஐ நெருங்கியுள்ளது.



போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்கான இராஜதந்திர முயற்சிகள் தொடர்ந்து இடம்பெற்று வரும் நிலையில் அதற்கான புதிய முன்மொழிவு ஒன்றை முன்வைக்க அமெரிக்கா முயன்று வருகிறது. எதிர்வரும் நாட்களில் இந்த முன்மொழிவு முன்வைக்கப்படும் என்று இரு அமெரிக்க அதிகாரிகள், இரு எகிப்து பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

போர் நிறுத்தம் மற்றும் பணயக்கைதிகளை விடுவிப்பது தொடர்பில் பல மாதங்களாக நீடிக்கும் இழுபறிக்குக் காரணமான விடயங்களை தளர்த்தும் நோக்கிலேயே இந்த முன்மொழிவு கொண்டுவரப்படவுள்ளது.

ஹமாஸ் ஒழிக்கப்பட்டாலேயே போர் முடிவுக்கு வரும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறிவருகிறார். மறுபுறம் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான எந்த ஒரு உடன்படிக்கையிலும் காசாவில் இருந்து இஸ்ரேலியப் படை முழுமையாக வாபஸ் பெறுவது உள்ளடக்கப்படுதல் வேண்டும் என்று ஹமாஸ் அமைப்பு வலியுறுத்தி வருகிறது.

இந்நிலையில் காசா போர் நிறுத்த பேச்சுவார்த்தைகள் தொடர்பில் ஹமாஸ் நேற்று வெளியிட்ட அறிவிப்பில், பேச்சுவார்த்தையில் இருந்து நெதன்யாகும் வேண்டுமென்றே வெளியேறுவதாகவும் அதன்மூலம் எமது மக்களுக்கு எதிராக இஸ்ரேலால் ஆக்கரமிப்பை தொடர முடியும் என்றும் குற்றம்சாட்டியுள்ளது.

காசா மற்றும் எகிப்து எல்லைப் பகுதியான பிலடெல்பியா தாழ்வாரத்தின் கட்டுப்பாட்டை நெதன்யாகு கேட்பது இதன் ஒரு தந்திரம் என்றும் ஹமாஸ் குறிப்பிட்டது.

பிலடெல்பியா தாழ்வாரத்தில் இஸ்ரேலிய படை தொடர்ந்து நிலைகொள்வதில் நெதன்யாகு உறுதியாக இருப்பது தற்போதைய போர் நிறுத்தப் பேச்சுவார்த்தையில் முட்டுக்கட்டையாக மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் இஸ்ரேலியப் படையின் சுற்றிவளைப்புகள் மற்றும் முற்றுகைகள் ஒரு வாரத்தைத் தாண்டி நேற்றுடன் (05) எட்டாவது நாளாகவும் தொடர்ந்தது.

டுபாஸின் தெற்கே உள்ள பாரா அகதி முகாமில் 16 வயது சிறுவனை இஸ்ரேலியப் படை கடந்த புதனன்று (04) சுட்டுக்கொன்றது. இதன்போது அபூ சீனா என்ற சிறுவன் மீது பல தடவைகள் சூடு நடத்தி இருக்கும் இஸ்ரேலியப் படை அம்புலன்ஸ் வண்டி அவனை அடைவதையும் தடுத்திருப்பதோடு இராணுவ புல்டோசரை பயன்படுத்தி சிறுவனின் உடலை அகற்றியதாக வபா செய்தி நிறுவனம் கூறியது.

டுபாஸ் நகரில் வாகனம் ஒன்றின் மீது இஸ்ரேல் நடத்திய ஆளில்லா விமானத் தாக்குதலில் மேலும் ஐந்து இளைஞர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இந்நிலையில் வாகனத்தில் இருந்த ஐந்து சடலங்களையும் மீட்டதாகவும் காயமடைந்த ஆறாமவருக்கு மருத்துவ சிகிச்சைகளை அளித்ததாகவும் செம்பிறை சங்கம் தெரிவித்துள்ளது.

ஜெனின் நகரில் இஸ்ரேலின் முற்றுகை எட்டாவது நாளாக நேற்றும் தொடர்ந்ததோடு அங்கு சுற்றுவளைப்புகளை மேற்கொண்டு வரும் இஸ்ரேலியப் படை பலஸ்தீன போராளிகளுடன் சண்டையிட்டு வருகிறது. இதனால் பலர் கொல்லப்பட்டு மற்றும் காயமடைந்திருப்பதோடு பலரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எட்டு நாட்களாக வீட்டுக்குள்ளேய அடங்கிக் கிடப்பதாக அங்குள்ள அதனன் நக்னகியா என்பவர் குறிப்பிட்டுள்ளார். இது ஒரு சிறைச்சாலை போல் உள்ளது என்று ஐந்து குழந்தைகளின் தந்தையான 56 வயதான அதனன் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

1967 ஆம் ஆண்டு தொடக்கம் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பில் இருக்கும் மேற்குக் கரையில் இஸ்ரேலியப் படை அடிக்கடி ஊடுருவல்களை மேற்கொண்டபோதும் தற்போதைய படை நடவடிக்கை கடுமையாக இருப்பதாக குடியிருப்பாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஜெனின் நகரின் வீதிகள், உட்கட்டமைப்புகள் மற்றும் உடைமைகளை இஸ்ரேலியப் படை புல்டோசர் கொண்டு தகர்த்து வருகிறது.

மேற்குக் கரையின் வடக்கு பகுதியில் தற்போது இடம்பெற்று வரும் இஸ்ரேலின் படை நடவடிக்கையில் இதுவரை 36 பேர் கொல்லப்பட்டிருப்பதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. கொல்லப்பட்ட சிலர் பலஸ்தீன போராளிகள் என்று அந்த போராட்டக் குழுவினர் பொறுப்பேற்றுள்ளனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 செப்டெம்பர் மாதம் 6ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.